# பத்து விநாடி ஆபத்து

# 0:10

– ராஜேஷ்குமார்

# 1

வீடியோ காமிராக்களின் உஷ்ணமா
வெளிச்சத்தில் குளித்துக் கொண்டிருந்த
பயோ டெக்னாலஜிஸ்ட் வாசுதேவ். எல்ல
தொலைக்காட்சி சேனல்களின் மைக்
களும் அவர் முகத்துக்கு நேராய் நீட்டப்பட
வழுக்கையில் அரும்பின வியர்வையை
துடைக்கக் கூட தோன்றாமல் மெல்லி
குரலில் பேசிக் கொண்டிருந்தார்.

"இந்த ஜீன்தெரபி ஒரு அற்புதமா
விஷயம். தமிழில் இதற்கு மரபுணு சிகிச்சை
என்று பெயர் ஜீன்களில் ஒளிந்து கொண்
கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடு
உயிரின் சூட்சுமத்தை மட்டும் கண்
பிடித்துவிட்டால் மனிதனின் சராச
ஆயுளை ஆயிரத்து ஐநூறு வருஷ
களுக்குக் கொண்டு போய்விடலாம்..."

சன் டி.வி., நிருபர் கேட்டார். "இ
சாத்தியம் தானா....?"

"உங்களுக்கு ஏன் இந்த சந்தேகம்...?"

"மனிதன் இயற்கைக்கு விரோதமா
செயல்பட்டால் அதன் விளைவுகள்
விபரீதமாகத்தான் அமையும் என்று ஒரு
பொதுவான உயிரியல் விதி இருக்கிறதே...?

"உண்மைதான்...! அந்த விதிக்க பங்க
வ்ராமல் ஜீன் தெரபியை நாம் செயல்படுத்த
முடியும்."



ராஜ் டி.வி. யின் நிருபர் கேட்டார்.

"மிஸ்டர் வாசுதேவ்...! இந்த ஜீன் தெரபியைப் பற்றி ஒரு பாமரனுக்கும் புரியும்படியாக சொல்ல முடியுமா? ஏனென்றால் படித்தவர்களே குழம்பிக் கொள்ளும் விஷயம் இது. எளிமையான வார்த்தைகளால் விளக்க முடியுமா...?"

"ஷ்யூர்...! இது ஒன்றும் பெரிய ராக்கெட் டெக்னாலஜி கிடையாது. நமது நடம்பு கோடிக்கணக்கான செல்களாலானது என்கிற விஷயம் எல்லோர்க்கும் தெரியும். ஒரு கட்டிடம் எப்படி செங்கற்களால் நேர்த்தியாக கட்டப் பட்டுள்ளதோ அதே மாதிரிதான் மனித உடலும் கோடிக்கணக்கான செல்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த செல்லுக்குள்தான் நம் உடம்பின் உயிரியல் ரகசியங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு செல்லலிலும் நியூக்ளியஸ் என்று சொல்லப்படும உட்கரு உள்ளது. அந்த உட்கருவுக்குள்ளே ஆங்கில 'எக்ஸ்' மாதிரியான அமைப்போடு க்ரோமோசோம் எனப்படுபவ்வ உள்ளன. ஒவ்வொரு செல்லிலும் இருபத்திமூன்று ஜோடி அதாவது நாற்பத்தியாறு குரோமோசோம்கள் இருக்கும். இந்த இருபத்திமூன்று ஜோடிகளில் இருபத்திரண்டு ஜோடிகள் ஒன்று, இரண்டு என்று எண்கள் மூலம் குறிக்கப்பட்டுள்ளன. கடைசி ஒரு ஜோடி மட்டும் 'எக்ஸ், ஓய்' என்று அழைக்கப்

படுகின்றன. இந்தக் கடைசி ஜோடி குரோமோசோம்தான் ஒரு உயிர் ஆணா, பெண்ணா என்பதை முடிவு செய்யும். இந்த கடைசி ஜோடியில் இரண்டு எக்ஸ் இருந்தால் பெண். ஒரு எக்ஸ் ஒரு ஒய் இருந்தால் அது ஆண்...."

வாசுதேவ் சில விநாடிகள் பேச்சை நிறுத்தி கர்ச்சீப்பை எடுத்து வழுக்கையில் பாதரசத் துளிகளாய் மின்னிய வியர்வைத் துளிகளை ஒற்றிக் கொண்டு தொடர்ந்தார்.

"ஒவ்வொரு குரோமோசோமையும் தனியே எடுத்து அதைமிகச் சக்தி வாய்ந்த மைக்ராஸ்கோப்பின் வழியாகப் 'பார்த்தால் அதில் இரட்டைப் பட்டை கொண்ட ரிப்பன் போன்று ஒரு சுருள் அமைப்பு பார்வைக்கு கிடைக்கும். இந்த அமைப்புக்கு பெயர் தான் டி.என்.ஏ."

"இந்த டி.என்.ஏ. வின் விரிவாக்கம் என்ன...?"

"டியோக்ஸிரிபோ - நியூக்ளிக் - ஆசிட். இந்த ஆங்கில வார்த்தையின் முதல் மூன்று எழுத்துக்கள்தான் டி.என்.ஏ. இந்த ரிப்பன் போன்ற டி.என்.ஏ. அமைப்பை வெளியே எடுத்துநீட்டிப் பார்த்தால் அது ஐந்தடி நீளம் இருக்கும்."

"ஆச்சர்யமாக உள்ளதே...!" இது விஜய் டி.வி., ரிப்போர்ட்டர்.

வாசுதேவ் சிரித்தார். "ஆச்சர்யம்தான்...! சாதாரண கண்களுக்கு புலப்படாத மிகச் சிறிய செல்லின் உட்கருவில் இருக்கும் இருபத்திமூன்று குரோமோசோம்களில் ஒரு குரோமோசோமில் இவ்வளவு நீளமான ரிப்பன் போன்ற டி.என்.ஏ. இருப்பது இயற்கையின் அற்புதம்தான். இந்த டி.என்.ஏ. என்பதில் தான் நமது உடம்பின் மர்மங்கள் அடங்கிய ஜீன் உள்ளது. விஷயம் இத்தோடு முடியவில்லை. இந்த ஜீன்களுக்குள் முன்னூற்றி இருபது நைட்ரோஜினஸ் மூலக்கூறுகள் உள்ளன."

"இப்போது ஓரளவுக்குப் புரிகிறது. இனி ஜீன் தெரபியைப் பற்றிச் சொல்லுங்கள்." இது ஜெயா டி.வி. ரிப்போட்டர்.

"குரோமோசோம்களில் புதைந்துள்ள ஜீன்களின் முக்கிய வேலை புரோட்டீன் களை வெளியிடுவது. இந்த புரோட்டீன்கள் தான் உயிரினங்களின் உடல் உறுப்புகளை இயக்குகின்றன. சில புரோட்டீன்கள் மனிதர்களின் உடம்புகளில் என்சைம்களாக வும், சில ஹார்மோன்களாகவும், சில நோய் எதிர்ப்பு ஆன்டி - பாடிகளாகவும், சில செல் வளர்ச்சி புரதங்களாகவும் செயல்படுகின் றன. இவ்வாறு ஜீன்கள் மூலமான வெளி வரும் புரோட்டீன்கள் எல்லாமும் எல்லா நேரத்திலும் ஆரோக்கியமாக இருப்பது இல்லை. இந்த குறைபாடுள்ள புரோட்டீன் களின் காரணமாக மனிதனுக்கு வேண்டாத நோய்கள் ஏற்பட்டு உடல்நலம் குன்றி

விரைவில் மரணம். இந்த புரோட்டீன் குறைபாட்டை சரி செய்யத்தான் ஜீன் தெரபி. ஜீன் குறைபாடுகளால் ஒரு மனிதனின் உடம்பில் தோன்றும் நோய்கள் அந்த மனிதனின் உடம்பில் தோன்றும் நோய்கள் அந்த மனிதனின் பரம்பரைக்கும் ஹெரிடிடரி நோய்களாக பரவுகின்றன. இந்த இடத்தில்தான் ஜீன் தெரபிக்கு முந்தைய கட்டமான ஜினோமி மேப் வருகிறது...."

"ஜினோமி மேப் என்றால்...?" மறுபடியும் சன்டி.வி., நிருபர் குறுக்கிட்டு கேட்டார்.

"குறைபாடு உள்ள ஜீன் உடம்பின் எந்த செல்பாகத்தில் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து ஒரு அட்டவணையை தயார் செய்யும் முறைக்கு ஜினோமிமேப் என்று பெயர். இன்னும் கொஞ்சம் எளிமையாக சொல்ல வேண்டுமென்றால் முகவரிகள் குறித்து வைக்கப்பட்ட ஒரு டைரி மாதிரி, குறைபாடுள்ள ஜீன்கள் உடம்பின் எந்தெந்த பாகத்தில், எந்தெந்த செல்களில் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து குறித்து வைத்துக் கொண்டு உரிய பயோ-டெக்னாலிஜிஸ்ட்டிடம் கொண்டு போய் கொடுத்து ஜீன் தெரபி செய்து கொள்ளலாம்.."

"எக்ஸ்ரே, ஸ்கேன் ரிப்போர்ட் மாதிரி என்று வைத்துக் கொள்ளலாமா...?"



"ம்... அப்படியும் வைத்து கொள்ள
ாம்."

"இந்த ஜீன் தெரபி எனப்படும் மரபணு
கிச்சை முறை எப்போது நடைமுறைக்கு
ரும்...?"

"எப்படியும் ஒரு வருடமாகிவிடும்..."

"இந்த ஜீன் தெரபி காஸ்ட்லி என்றும்
ணக்காரர்கள் மட்டுமே இந்த தெரபியை
செய்து கொள்ள முடியும் என்றும்
சொல்லப்படுவது உண்மையா...?"

"ஓரளவுக்கு உண்மைதான். இருந்
ாலும் ஒரு காலத்தில் அதிக விலைக்கு
ிற்கப்பட்ட எலக்ட்ரானிக் பொருள்கள்
ாலப்போக்கில் மலிவு விலைக்கு வந்து
ிட்டது போல் இந்த ஜீன் தெரபியும் காலப்
போக்கில் எல்லாரும் செய்து கொள்ளக்
டிய அளவுக்கு எளிதாகிவிடும்... இந்த
இரண்டாயிரமாவது அண்டில் வாழ்பவர்
களுக்கும் இனிமேல் பிறக்கப் போகிறவர்
களுக்கும் இந்த ஜீன் தெரபி ஒரு வர
ரசாதம்."

"ஸாரி... மிஸ்டர் வாசுதேவ்... அது வரப்ரசாதம் கிடையாது. சாபக்கேடு."

நிருபர்களுக்கு மத்திலிருந்து அந்தப் பெண் குரல் எழ, எல்லோரும் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தார்கள்.

கண்ணாடி அணிந்த அந்த இளம் பெண் பார்வைக்குக் கிடைத்தாள். வயது

முப்பதுக்குள் இருக்கலாம் சற்றே கலைந்த தலை. தோளில் ஒரு ஹேண்ட் பேக் தொங்கிக் கொண்டிருந்தது. கண்களில் கோபம்.

வாசுதேவ் அந்தப் பெண்ணைப் பார்த்து புன்னகைத்தார்

"ஏம்மா அப்படி சொல்றே...! உயிரியல் விஞ்ஞானத்தோட மிகப் பெரிய மர்மக் கதவு இன்னிக்குத்தான் திறக்கப்பட்டிருக்கு. மக்கள் நோய்களே இல்லாமே ஆயிரம் ஆண்டுகாலம் வாழப்போறது அதி அற்புத மான விஷயமா உனக்குப் படலையா...?"

"படலை... இது அதி அற்புதமான விஷயம் கிடையாது நாளைய விபரீதத்துக் கான அடிக்கோள் விழா இது. எப்படி சட்டத்தை மீறக்கூடாதுன்னு நாம நினைக் கிறோமோ அதே மாதிரி இந்த இயற்கையை யும் மீறி நாம் செயல்படக் கூடாது..."

"இது காலத்தோட கண்டுபிடிப்புகள், அலட்சியம் பண்ண முடியாது. விஞ்ஞானம் நமக்கு தர்ற உண்மைகளை...."

அவள் கையமர்த்தினாள்.

"வெயிட் மிஸ்டர் வாசுதேவ்...! விஞ் ஞானத்தின் பேரை வெச்சுகிட்டு நீங்க இப்ப சொல்ற அறிவியல் உண்மைகளை எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டு களுக்கு முன் வாழ்ந்த சித்தர்கள் சொல்லி விட்டு போயிட்டாங்க.



அண்டங்கள் சதகோடியாயினும்
ஆட்டிப் படைக்கின்ற சக்தி
எண்டிசை சுழலுகின்ற மண்டலங்களை
- என்றும்
இயக்குகின்ற சக்தி எண்பத்து நான்கு
லட்ச ஜீவ - அணுக்களை
எழு பிறப்பாய் ஈன்ற சக்தி"

"இப்படி உலக விஞ்ஞானத்தை எப்பவோ பாடிட்டு போயிட்டாங்க. அன்னிக்கு சித்தர் சொன்ன ஜீவ அணுவும் இன்னிக்கு நீங்க சொல்ற டி.என்.ஏ.வும் ஒண்ணுதான் அந்தக் காலத்தில் இருந்த சித்தர்கள் ஆயிரம் அண்டு காலங்கள் வாழ்ந்தவர்கள். அவங்க நினைச்சிருந்தா மரணத்தை ஜெயிச்சு சிரஞ்சீவிகளா வாழ்ந் திருக்கலாம். அவங்க அப்படி செய்யலை... ஏன்...? பிறப்பும் இறப்பும் இணைந்ததுதான் வாழ்க்கை. அந்த வாழ்க்கையை நாம திசைமாற்ற முயற்சி பண்ணக்வடாது. அன்னிக்கு வாழ்ந்த சித்தர்கள் இயற்கைக்கு மாறா எதுவும் செய்யாமே மௌனமா இருந்துட்ட மாதிரி இன்னிக்கு உங்களை மாதிரியான பயோடெக்னாலஜிஸ்ட்களும் ஜீன் தெரபியை கைவிடணும்..."

வாசுதேவ் சிரித்தார்.

"உன் பேர் என்னம்மா...?"

"தென்றல்..."

"பேரை இப்படி சாஃப்ட்டாவைச்சு

[illegible] இருக்கியே... நீ எந்த மீடியா? டி.வி.யா... பிரஸ்ஸா?"

"ரெண்டும் இல்லை..."

"பின்னே?"

"உங்களை வேடிக்கை பார்க்க வந்தவ. உங்க உளறலைக் கேட்டு ரசிக்க வந்தவ..."

"நான் சென்ஸ்..." வாசுதேவின் முகத்தில் இருந்த புன்னகை சட்டென்று காணாமல் போயிற்று. "என்ன கலாட்டா பண்ண வந்தியா....?"

"உண்மையை எடுத்துச் சொன்னா அதுக்குப் பேர் கலாட்டாவா...?"

"ஷுக்...! திஸ் ஈஸ் டுமேச்...! இனி ஒரு நிமிஷம் இங்கே நீநின்னா ஐ... வில். கால்... த... போலீஸ்."

"போலீஸுக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன். நீங்க இந்த ஜீன் தெரபி பேத்தலைக் கைவிடணும்."

அத்தனை டி.வி. ரிப்போர்ட்டர்களும் அவளைக் கோபமாய்ப் பார்த்தனர்.

"ஏய்...! நீ இப்போ வெளியே போகப் போறியா இல்லையா...."

"மாட்டேன்..."

"யாராவது போலீஸைக் கூப்பிடுங்க!"

வாசுதேவ் குரல் கொடுத்த அதே விநாடி-

அவள் சிலிர்த்தாள். தன் தோளில்



தாங்கிக் கொண்டிருந்த பேக்கின் ஜிப்பை ிருட்டென்று தள்ளி உள்ளே கையை ிட்டு எதையோ எடுத்தாள்.

விரல்களில் பிஸ்டல் மின்னியது.

"ஏய்... ய்ய.."

எல்லோரும் பயத்தோடு விலக - அவள் பிஸ்டலை உயர்த்திப் பிடித்துக் கொண்டு வாசுதேவை குறி பார்த்தாள். குரலை ஏற்றி இறக்கி பேசினாள்.

"உன்னை மாதிரி இயற்கையை மீறி செயல்படறவங்கயாராக இருந்தாலும் எனக்குப் பிடிக்காது."

வாசுதேவ் வியர்த்து வழிந்து கொண்டே அவளை பயமாய்ப் பார்க்க அவளுடைய வலதுகை ஆட்காட்டி விரல் பிஸ்டலின் ட்ரிக்கரை வளைத்தது.

## 2

பகல் உணவை முடித்துக் கொண்ட ரூபலா, வேலைக்காரிக்கு பாத்திரங்களை எடுத்துப் போட்டுவிட்டு ஒரு குட்டித் தூக்கம் போடலாம் என்று நினைத்த போது டெலிபோன் கூப்பிட்டது.

போய் ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

"என்ன ரூபி பகல் தூக்கம் போடலையா?"

மும்பையில் இருந்து விவேக்.

ரூபலா சிரித்தாள்.

"இனிமேத்தான்...! ஃப்ளைட் எத்தனை மணிக்கு மும்பை போய்ச் சேர்ந்தது...?"

"சரியா ரெண்டரைமணி..."

"நீங்க சாப்பிட்டீங்களா...?"

"ஃப்ளைட்லயே முடிச்சுட்டேன் சிக்கன் பிரியாணியும், ஃபிஷ்ஷும் சூப்பர்."

"பரிமாறின ஏர்ஹோஸ்டஸ் அதைவிட சூப்பரா இருந்திருப்பாளே...?"

"அது படு சூப்பர்... ஐஸ்வர்யாராயையும் லாராதத்தாவையும் மிக்ஸியில் போட்டு அடிச்சமாதிரி ஒரு ப்யூட்டி."

"நானும் உங்ககூட புறப்பட்டு மும்பை வந்திருக்கணும். தப்பு பண்ணிட்டேன். இனிமே நீங்க கூடுவாஞ்சேரி போனாலும் சரி கொலம்பியா போனாலும் சரி வந்துடப் போறேன். ரெண்டு வாரத்துல ட்ரெய்னிங் முடிஞ்சுடுமா, இல்லை லேட்டாகுமா...?"

"சரியா ரெண்டே ரெண்டு வாரம்"

ரூபலா மேற்கொண்டு பேசும் முன் வாசலில் காலிங்கபெல் சத்தம்.

"என்னங்க...! காலிங்பெல் சத்தம் கேட்குது- அஞ்சு நிமிஷம் கழிச்சு மறுபடியும் போன் பண்றீங்களா?"

"வேண்டாம்... ராத்திரி பேசிக்கலாம். நீ போய் வந்தவங்களைகவனி..."



ரூபலா ரிஸீவரை வைத்துவிட்டு வாசல் கதவை நோக்கிப் போய் கதவின் தாழ்ப்பாளைத் திறந்தாள்.

வெளியே-

வாசற்படிகளில் ரூபலாவின் கல்லூரிக் கால சிநேகிதி அபராஜிதாவும் ஏறக்குறைய அவளுடைய சாயலிலேயே இன்னொரு பெண்ணும் பார்வைக்குக் கிடைத்தார்கள் பளிச்சென்ற ஒரு மலர்ச்சிக்குப் போனாள் ரூபலா.

"ஏய்.... அபி... என்ன இது... ப்ளஸண்ட் சர்ப்ரைஸ்...! வேகாத வெய்யில்ல வந்திருக்கே... வா... உள்ளேவா..."

அவர்கள் உள்ளே வந்தார்கள். ஃபேன் ஸ்விட்ச்சைத் தட்டிவிட்டு சோபாவைக் காட்டினாள் ரூபலா.

உட்கார்ந்தார்கள். ரூபலாவும் அவர்களுக்கு எதிரே சாய்ந்தபடி கேட்டாள்.

"என்ன அபி... எப்படியிருக்கே?"

"ஃபைன்...."

"உன்னோட கணவர் கிஷோர் ஸ்டேட்ஸ்லதானே இருக்கார்...?"

"இப்போ அவர் சிங்கப்பூர் வந்துட்டார். சொந்தமாவே சாஃப்ட்வேர் கம்பெனி ஒண்ணை ஸ்டார்ட் பண்ணிட்டார்."

"வெரி க்ளாட் டூ ஹியர் இட்....! இது உன்னோட சிஸ்டர்தானே...?"

"ஆமா...! ஸ்வேதா...! போன வருஷம் தான் காலேஜ் படிப்பை முடிச்சா. இந்த வருஷம் மேரேஜ். வர்ற பதினாலாம் தேதி ஸ்வேதாவுக்கு கல்யாணம். அதுக்கு இன்வைட் பண்ணத்தான் வந்தேன்..."

ரூபலாஸ்வேதாவின் கன்னத்தை மெல்லத்தட்டினாள்.

"அட்வான்ஸ் கங்கிராட்ஸ்... மாப்பிள்ளை என்ன பண்றார்...?"

"பிசினஸ்...." ஸ்வேதா மெல்லிய குரலில் சொல்லி விட்டு வெட்கத்தோடு தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

அபராஜிதா, தான்கொண்டு போயிருந்த கேரிபேக்கைப் பிரித்து சிவப்பு வெல்வெட்டாலான பெரிய இன்விடேஷன் கார்டை எடுத்துக் கொண்டே கேட்டாள்.

"உன்னோட ஹஸ்பெண்ட் ஊரில் தானே இருக்கார்?"

"இல்லை... பாம்பே போய்ட்டார். க்ரைம் ப்ராஞ்ச்ஹை அஃபீஷியல்ஸ்ட் ரெய்னிங் கேம்ப் ஒண்ணு ரெண்டு வார காலத்துக்கு நடக்கப் போகுது. அதுல கலந்துக்க இன்னிக்குத்தான் பாம்பே புறப்பட்டுப் போனார்."

"பதினஞ்சாம் தேதிக்குள்ளே வந்துட மாட்டாரா?"

"ஊஹூம்... இருபது தேதி ஆயிடும்... நான் கல்யாணத்துக்கு கண்டிப்பா வர்றேன். கல்யாணம் எங்கே... ராணி சீதை ஹால் தானே...?"

"ஆமா..."

"வந்துடறேன்....! அப்பா அம்மா எப்படி இருக்காங்க...?"

"ஃபைன்..."

"எல்லாப் பேப்பர்லேயும் அப்பாவோட பேர்தான். எந்தப் பேப்பரைப் புரட்டினாலும் சரி பயோ - டெக்னாலஜிஸ்ட் வாசுதேவ் பேட்டி, ஆயுளை அதிகப்படுத்தும் ஜீன் மருத்துவம் அது இதுன்னு ஏகப்பட்ட நியூஸ்."

அபராஜிதா சிரித்தாள்.

"அதையேன் கேக்கிறே ரூபலா, ஸ்வேதாவோட கல்யாணத்தையே அவர் மறந்துட்டார். எல்லா ஏற்பாடு களையும் நானும் அம்மாவும் தான் பண்ணிட்டிருக்கோம். எப்பப்பாரு பத்திரிகைகாரங்க கூட்டம். இப்பகூட ஹோட்டல் பரணியில் டி.வி.மீடியா - ப்ரஸ்மீடியா ரெண்டும் சேர்ந்து ஒரு ஃபேஸ் டூ பேஸ் நிகழ்ச்சி ஏற்பாடு பண்ணியிருக்காங்க காலையில் பத்து மணிக்கு போனவர் இன்னும் வரலை... வெய்ட் பண்ணிப் பார்த்துட்டு நாங்களே உன்னைக் கூப்பிட வந்துட்டோம் கல்யாணத்துக்கு நீ அவசியம் வரணும்."

"கண்டிப்பா வர்றேன்... நீ இவ்வளவு தூரம் வந்து கூப்பிட்டிருக்கே... வராமே

இருப்பேனா..? கொளுத்தற வெய்யிலில் வந்திருக்கே... கூலா என்ன சாப்பிடறே...?"

"ஒண்ணும் வேண்டாம் ரூபலா... இன்னும் நிறைய பேரைப் பார்த்து இன்விடேஷன்ஸ் கொடுக்க வேண்டியிருக்கு... கல்யாண அமளியெல்லாம் முடிந்ததும், ஒரு நாள் ஓய்வா வர்றேன். நீ தர்றதையெல்லாம் சாப்பிட்டுவிட்டு நிறைய பேசுவோம்..."

அபராஜிதாவும், ஸ்வேதாகவும் எழுந்தார்கள். அவர்களை வழியனுப்புவதற்காக வாசல் வரை வந்தாள் ரூபலா காம்பவுண்ட் கேட்டுக்கு வெளியே டாட்டா சியாரா கோக்கோ கோலா நிறத்தில் காத்திருந்தது.

அபராஜிதா ட்ரைவிங் இருக்கைக்குப் போக ஸ்வேதா பக்கத்தில் உட்கார்ந்தாள்.

காரின் இன்னிஷியன் கனைத்தது.

"கல்யாணத்துக்கு கண்டிப்பா வந்துடு..."

"நீ சொல்லவே வேண்டாம்..." ரூபலா கையசைக்க கார் கிளம்பியது.

கேட்டைச் சாத்திவிட்டு வீட்டுக்குள் போக முயன்ற ரூபலாவின் பார்வை ஏதேச்சையாய் தெரு முனைக்கு போக லேசாய் முகம் மாறினாள்.

பைக்கோடு நின்றிருந்த ஒரு இளைஞன் அபராஜிதாவின் காரைப் பார்த்துக் கொண்டே பைக்கை உதைத்து கிளம்பி ஃபாலோ பண்ண ஆரம்பித்தான்.



# 3

தென்றல் கையில் பிடித்த பிஸ்டலோடு வாசுதேவையே குறி பார்த்துக் கொண்டு கோணலாய்ச் சிரித்தாள்.

"உங்க விஞ்ஞானம் கண்டுபிடித்த துப்பாக்கி இது இப்ப உங்க உயிரை எடுக்கப் போகுது. விஞ்ஞானத்தின் மூலமா கண்டு பிடிச்ச ஒவ்வொரு பொருளும் இப்படித்தான் ஏதாவது ஒண்ணை ஒழிக்க உபயோகப்படும்..."

இரண்டு போலீஸார் பக்கத்தில் வர முயலசரேலென்று அவர்களுக்குப் பக்கமாய் பிஸ்டலைக் கொண்டு போனாள் தென்றல்.

"யார் பக்கத்துல வந்தாலும் சரி சுட்டுத் தள்ளிடுவேன்... கெட் பேக்... எவ்ரிபடி...."

போலீஸார் உறைந்து போய் அப்படியே நின்று கொள்ள டி.வி. ரிப்போர்ட்டர்ஸும் ப்ரஸ் ரிப்போர்ட்டர்ஸும் நாலாபுறமும் சிதறி ஓடிக்கொண்டிருக்க - தென்றல் மறுபடியும் வாசுதேவின் மார்பை பிஸ்டலால் குறி பார்த்தாள்.

"உங்களைப் போன்ற பயோடெக்னாலஜிஸ்ட்களால் நாளைய உலகம் ஒரு விபரீதத்தில் மாட்டிக் கொள்ளும் என்பது இப்போதே எனக்கு நிதர்சனமாய் தெரிகிறது. ஸோ நீங்கள் உயிரோடு இருக்கக் கூடாது...."

ட்ரிக்கரை சுண்டினாள் தென்றல்.

"ட்ட்ட்ட்டுமீல்ல்..."

தோட்டா சற்றே குறி தவறி வாசுதேவின் தோள்பட்டையை துணியோடு சேர்த்து சிராய்த்துக் கொண்டு போயிற்று.

வாசுதேவ் அலறிக் கொண்டு கீழே சாய போலீஸார் ஓடி வந்தனர். தென்றல் கோபாவேசமாய் சுழன்று பிஸ்டலை அவர்கள் பக்கமாக திருப்பி ட்ரிக்கரை சுழற்றினாள்.

"ப்ளக்..."

பிஸ்டலின் லீவர் சத்தம் மட்டும் கேட்டது.

உள்ளே தோட்டா இல்லை.

புல்லட் சேம்பர் காலி என்று தெரிந்ததும் தன்கையில் இருந்த பிஸ்டலை போலீஸாரை நோக்கி வீசியெறிந்து விட்டு ஒரு மின்னல் துணுக்கு மாதிரி ஓட ஆரம்பித்தாள்.

ரிப்போர்ட்டர்ஸ் கூட்டம் வாசுதேவை மொய்த்துக் கொள்ள போலீஸார் இரண்டு பேர்களும் தென்றலை துரத்த ஆரம்பித்தார்கள்.

அவள் இரண்டிரண்டு படிகளாய் தாவி கட்டிடத்தின் முதல் ஃப்ளோருக்கு வந்த போது கட்டிடத்தின் செக்யூரிட்டி அதிகாரி ஒருவர் அவளைப் பிடிக்க முயல தென்றல் ஒரு விநாடி நின்று தன் கையில் வைத்திருந்த வானிடி பேக்கால் ஒரு வீறு வீறினாள். செக்யூரிட்டி முகத்தை கைகளால் பொத்திக் கொண்டு குனிய, இந்த அவகாசத்தைப் பயன்படுத்திக் கொண்டு வெளியே பாய்ந்தாள்.



போலீஸாரும் பத்தடி இடைவெளியில் துரத்தினார்கள். கட்டிட போர்டிகோ படிகளில் தடதடத்த தென்றல் ரோட்டுக்கு வந்து ப்ளாட்பார நெரிசலில் புகுந்தாள்.

"அவளைப்பிடிங்க..." போலீஸார் குரல் கொடுத்ததைத் தொடர்ந்து இரண்டொருவர் தென்றலைப் பிடிக்க முயன்று தோற்றனர்.

தென்றல் இப்போது ரோட்டைக் க்ராஸ் செய்து மறுபக்க ப்ளாட்பாரத்துக்கு போக முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

ரோட்டில் பஸ்களும் கார்களும் டூவீலர்களும் பிசாசு வேகத்தில் போய்க் கொண்டிருக்க தென்றல் குறுக்கே பாய்ந்து எதன் மீதும் மோதிக் கொள்ளாமல் லாவகமாய்க் கடந்து...

மறுபக்க ப்ளாட்பாரத்தை தொட முயன்ற விநாடி - வேகமாய் வந்த ஒரு சைக்கிள்காரன் மோத, தென்றல் நிலை தடுமாறி எகிறிப்போய் ரோட்டின் மையத்தில் விழ, ஒரு போக்குவரத்துக் கழக பஸ் தென்றலைத் தேய்த்துக் கொண்டு போயிற்று. அடுத்த விநாடி-

ரோட்டின் மஞ்சள் பெயிண்ட் கோட்டுக்குப் பக்கத்தில் ஒரு ரத்தக்கோடு தெரிந்தது.

## 4

ரூபலா வீட்டுக்குள் நுழைந்து டெலிபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்துக் கொண்டு டயல் எண்களை வேகமாய்த் தட்டினாள். மறுமுனையில் கோகுல்நாத்தின் "ஹலோ" குரல் கேட்டது.

"அங்கிள்! நான் தான் ரூபலா..."

"என்னம்மா... இந்த நேரத்துல போன்...? விவேக் பாம்பே போய்ச் சேர்ந்ததும் உனக்கு போன் பண்ணலையா...?"

"அவர் போன் பண்ணினார் அங்கிள்."

"பின்னே என்னம்மா விஷயம்..?"

"என்னோட ஃப்ரண்ட் அபராஜிதா தன் சிஸ்டரோட கல்யாணத்துக்கு கூப்பிட வந்திருந்தா. இன்விடேஷன் கொடுத்துட்டு கார்ல கிளம்பிப் போனா. கார் கிளம்பினதுமே தெருக்கோடியில் பைக்கோடு நின்னுட்டிருந்த ஒருத்தன்... அந்தக் காரை ஃபாலோ பண்ணிப் போனான். அவனால அவங்களுக்கு ஏதாவது ஆபத்து வருமோன்னு எனக்கு பயம்... அதான் உங்களுக்கு போன் பண்ணினேன். நீங்க ஏதாவது ஹெல்ப் பண்ண முடியுமா அங்கிள்?"



"என்னம்மா... இப்படி கேட்டுட்டே...! இந்த சம்பவம் எப்ப நடந்தது...?"

"ரெண்டு நிமிஷத்துக்குமுந்தி..."

"பைக் நெம்பரை நோட் பண்ணினியா?"

"முயற்சி பண்ணினேன். முடியலை..."

"சரி... என்னபைக்..."

"ஸாரி அங்கிள்... அதை நோட் பண்ணமறந்துட்டேன். எல்லாமே பத்து செகண்ட்ஸுக்குள்ளே நடந்துடுச்சு..."

"ஆள் எப்படியிருந்தான்...?"

"தாடி வைச்ச இளைஞன். கழுத்துக்கு கர்ச்சீப் கட்டியிருந்தான். வாய்ல சிகரெட் இருந்த மாதிரி ஞாபகம்."

கோகுல்நாத் நான்கைந்து விநாடிகளை யோசிக்க எடுத்துக் கொண்டுவிட்டு கேட்டார்.

"அபராஜிதாவும் ஸ்வேதாவும் எந்தக் கார்ல வந்தாங்க...?"

"டாட்டாசியாரா..."

"கலர்...?"

"ப்ரவுனிஷ் ப்ளாக்... சரியா சொல்லணும்ன்னா கோக்கோ கோலா நிறம்..."

"மடக்கிடலாம்...! கவலைப்படாதே... ட்ராஃபிக் விஜிலன்ஸ் இன்ஸ்பெக்டர்ஸ் எல்லா ஏரியாவிலும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருக்காங்க. வயர்லஸ்ல தகவல்

கொடுத்தா போதும் பைக்கையும் ஆளையும் பத்து நிமிஷத்தக்குள்ளே மடக்கிடுவாங்க.."

"உடனடியா ஏதாவது செய்யுங்கள் அங்கிள்...! அபராஜிதாவுக்கும் அவளோட சிஸ்டர்க்கும் ஏதாவது ஆபத்து வந்துடப் போகுது..."

கோகுல்நாத் சிரித்தார். "ஒரு பத்து நிமிஷம் போனுக்குப் பக்கத்திலேயே வெயிட் பண்ணும்மா. நானே போன் பண்ணி தகவல் சொல்றேன்..."

ரூபலாரிஸீவரை வைத்து விட்டு பக்கத்து நாற்காலியில் கவலையோடு சாய்ந்தாள்.

"யார் அந்த பைக் ஆசாமி...?"

அபராஜிதாவின் காரை எதற்காக ஃபாலோ செய்ய வேண்டும்?

"பைக் நெம்பரை பார்க்காமல் விட்டது தப்பு!"

ரூபலா கவலையான யோசனையோடு விநாடிகளை கரைத்து ஐந்து நிமிஷங் களைக் கடத்தியிருந்த போது டெலிபோன் வாயைத் திறந்தது.

எடுத்தாள்.

கோகுல்நாத் பேசினார்.

"ரூபலா..."

"என்ன அங்கிள் அந்த பைக் ஆசாமியை பிடிச்சுட்டீங்களா?"



"இல்லேம்மா... அதுக்குள்ளே போலீஸ் ஹெட் க்வார்ட்டர்ஸிலிருந்து வேற ஒரு கவலைப்படும்படியான நியூஸ் வந்தது..."

"என்ன நியூஸ் அங்கிள்...?"

"அபராஜிதாவோட அப்பாவாசுதேவை ஒரு பொண்ணு துப்பாக்கியால சுட்டிருக்கா!"

"அய்யோ அங்கிள்...!"

"பயப்படாதேம்மா... தோட்டா நல்ல வேளையா மார்புல பாயாமே தோள் பட்டையை உரசிகிட்டு போனதால சொற்ப காயம். ஹாஸ்பிடலைஸ் பண்ணிட்டாங்க... ட்ரீட்மெண்ட் நடந்துக்கிட்டிருக்கு."

"பார்த்தீங்களா அங்கிள்... அபராஜிதாவோட ஃபேமிலிக்கு ஏதோ ஒரு ஆபத்து இருக்கப் போய்த்தான் அந்த பைக் ஆசாமி காரை ஃபாலோ பண்ணிட்டு போயிருக்கான். அவனை மொதல்ல ட்ராப் பண்ணனும்.

"பண்ணிடலாம். ட்ராஃபிக் போலீஸ் விஜிலன்ஸ் சிட்டியின் முக்கியமான சந்திப்பு களுக்கு போய் வெயிட் பண்ணிட்டிருக் காங்க. எப்படியும் அமுக்கிடுவாங்க."

"அங்கிள்...! அபராஜிதாவோட அப்பா வாசுதேவ் எந்த ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆயிருக்கார்...?"

"வெலிங்டன் நர்சிங் ஹோம்..."

"நான் பாக்கணுமே..."

"நீ ஹாஸ்பிடலுக்கு புறப்பட்டு வாம்மா, நானும் வந்துடறேன்."

ரூபலா ரிஸீவரை வைத்துவிட்டு வேலைக்காரி இருந்த திசை பார்த்து குரல் கொடுத்தாள்.

"பொன்னி..."

"அம்மா.."

"நான் கொஞ்சம் வெளியே போய்ட்டு வர்றேன். வீட்டைப் பார்த்துக்க..."

"சரிங்கம்மா..."

ரூபலா பரபரவென்று வேறு சேலையை மாற்றிக் கொண்டு வீட்டினின்றும் வெளிப்பட்டு போர்டிகோவில் நின்றிருந்த மாருதி கார்க்கு வந்து உள்ளே திணிந்தாள்.

காரை நகர்த்தி ரோட்டுக்கு கொண்டு வந்த வேகம் பிடித்து தெருவைத் தாண்டி அடுத்த தெருவுக்குள் நுழைத்து திரும்பிய போது-

அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸுக்கு முன்பாய் அபராஜிதாவின் டாட்டா சியாரா நின்றிருந்தது.

## 5

தென்றல் ரத்தத் தீற்றலாய் ரோட்டின் மையத்தில் தெரிய போக்குவரத்து ஸ்தம்பித்துபோய் வேறு பக்கம் திருப்பி விடப்



பட்டிருந்தது.

அஸிஸ்டெண்ட் போலீஸ் கமிஷனர் நித்யானந்தம் தலைமையில் ஒரு போலீஸ் ஸ்க்வாட் சாவி கொடுத்த தினுசில் இயங்கிக் கொண்டிருந்தது.

தென்றலின் இடுப்பு வரை நசுங்கிப் போயிருக்க தலையின் இடது பக்கமும் இடதுகையும் ரத்தச் சகதியாய் தெரிந்தது. சேதம் இல்லாத முகத்தில் பாதிக் கண்கள் திறந்து இருக்க அந்தக் கண்களின் வழியாகவே உயிர் பிரிந்து போயிருந்தது.

ஃபாரன்ஸிக்குழு ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்டை சாக்பீஸ் கோடுகளால் நிரப்பிக் கொண்டிருக்க நித்யானந்தம் இன்ஸ்பெக்டர் ஒருவரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்.

"பொண்ணு யார்ன்னு தெரிஞ்சுதா?"

"தெரியலை ஸார்..."

"வானிடி பேக்கில் என்ன இருந்தது....?"

"ஒரு பஸ் டிக்கெட், ஒரு வார இதழ், ரெண்டு ரூபாய் நோட்டு, கொஞ்சம் சில்லறை"

"அவ பேர் என்ன... தென்றலா...?"

"ஆமா ஸார்..."

"பேரே கொஞ்சம் இலக்கியத்தனமா இருக்கு. வாசுதேவ்கிட்ட விஞ்ஞானமே வேண்டாம்ன்னு சொன்னாளா?"

"ஆமா... ஸார்..."

"அவ உபயோகிச்சதுப்பாக்கி எங்கே...?"

இன்ஸ்பெக்டர் கொண்டு வந்து கொடுத்தார். வாங்கிப் பார்த்த நித்யானந்தம் வியப்பில் புருவங்களை உயர்த்தினார்.

"கொஞ்சம் பழைய மாடலா இருக்கே...?"

"ஆமாஸார்... மிலிட்ரிடைப் மாதிரி தெரியுது..."

"உள்ளே எத்தனை தோட்டா இருந்தது...?"

"ஒரு தோட்டா மட்டும் தான் இருந்தது ஸார்."

"வாசுதேவ் மேல இவளுக்கு என்ன கோபம்?"

"அவர் கண்டுபிடிச்ச ஜீன் தெரபி மனித குலத்துக்கு ஆபத்தானது. அதை நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடாதுன்னு ஃபரோஸா பேசிட்டிருந்தா... ரெண்டு பேர்க்கும் வாக்கு வாதம் முற்றி ஒரு கட்டத்துல இந்தப் பொண்ணு வானிடி பேக்கிலிருந்து பிஸ்டலை எடுத்துக் கிட்டா."

"ஸார்"

"பின்பக்கம் குரல் கேட்டது."

நித்யானந்தம் திருமபினார்.

ஃபாரன்ஸிக் சீஃப் நின்றிருந்தார்.

"எஸ்..."

"பொண்ணோட கழுத்தில் இந்த சில்வர் லாக்கெட் இருந்தது. இதைக் கொஞ்சம் ஒப்பன் பண்ணி பாருங்க ஸார்."



நித்யானந்தம் அந்த லாக்கெட்டை வாங்கி அழுத்தித் திறக்க, அது இரண்டு வட்டங்களாய் பிரிந்தது.

ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு போட்டோ.

முதல் போட்டோவில் தென்றலின் முகம், இரண்டாவது போட்டோவில் பெரிதாய் மீசை வைத்த ஆண்முகம், தலையில் சீசா பச்சை நிறத்தில் ஒரு தொப்பி.

தொப்பியின் முகப்பில் அசோக சிங்கம் பளிச்சென்று தெரிந்தது. பக்கத்தில் இருந்த இன்ஸ்பெக்டர் எட்டிப் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் சொன்னார்.

"ஸார்... போட்டோவைப் பார்த்தா மிலிட்ரிமேன் மாதிரி தெரியுது..."

நித்யானந்தம் அந்த போட்டோவையே பார்த்துக் கொண்டிருந்தார்.

## 6

---

அபராஜிதாவின் டாட்டா சியரா அந்த காம்ப்ளக்ஸ் கட்டிடத்துக்கு முன்பாய் நின்றிருப்பதை பார்த்ததும் ரூபலா தன் காரின் வேகத்தைக் குறைத்து பக்கத்தில் கொண்டு போய் நிறுத்தினாள்.

கார்க்குள்ளே யாரும் இல்லை.

ரூபலா கீழே இறங்கி சுற்றும் முற்றும் பார்வையை துரத்தி அந்த பைக் ஆசாமி எங்கேயாவது தட்டுப்படுகிறானா என்று கண்களை ஓட்டினாள்.

தட்டுப்படவில்லை.

"அபராஜிதாவும் ஸ்வேதாவும் எங்கே போனார்கள்?"

ரூபலா குழம்பிக் கொண்டு நிற்க - ஸ்டூலில் உட்கார்ந்திருந்த காம்ப்ளக்ஸ் வாட்ச்மேன் கேட்டான்.

"இந்த கார்ல வந்த பொண்ணுகளையா தேடறீங்க?"

"ஆமா..."

"அவங்க காஸ்மெடிக்ஸ் செக்ஷனுக்கு போயிருக்காங்க..."

ரூபலா காஸ்மெடிக்ஸ் செக்ஷனைத் தேடிக் கொண்டு உள்ளே போனாள். அது காம்ப்ளக்ஸின் முதல் மாடியில் இருந்தது.

மேக்கப் செட் சாதனங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த அபராஜிதாவும் ஸ்வேதாவும் ரூபலாவைப் பார்த்ததும் விழிகளை வியப்பால் விரித்தார்கள். அபராஜிதா ரூபலாவின் கையைப் பற்றிக் கொண்டாள்.

"என்ன நீயும் ஷாப்பிங்கா...? வீட்லயே சொல்லியிருந்தா மூணு பேரும் ஒண்ணாவே கார்ல வந்து இருக்கலாமே..."



"நான் ஷாப்பிங் வரலை... அபி..."

"பின்னே...?"

"உங்களுக்கு ஒரு மோசமான செய்தி..."

இருவரும் முகம் மாறினார்கள்.

"எ....ன்...ன....?"

"உங்க அப்பா இப்போ வெலிங்டன் ஹாஸ்பிடல்ல அட்மிட்டாகியிருக்கார்..."

இருவரின் உடம்புகளும் பதட்டத்துக்கு உட்பட்டன.

"அ..... அப்பாவுக்கு என்ன...?"

"வாங்க... பேசிகிட்டே போலாம்..."

மூன்று பேரும் காஸ்மெடிக்ஸ் செக்ஷனை விட்டு வெளியே வந்தார்கள்.

"சொல்லு... ரூபலா... அப்பாவுக்கு என்ன?"

"டி.வி. ரிப்போர்ட்டர்ஸ் உங்க அப்பாவை பேட்டி எடுத்துகிட்டு இருக்கும் போது யாரோ ஒரு பொண்ணு அவரை துப்பாகியால சுட்டுட்டா..."

"அய்யோ..."

"பயப்படாதே...! மார்பில் பாய வேண்டிய தோட்டாகுறி தவறி தோள்பட்டையை லேசா சிராய்ச்சுகிட்டு போயிருக்கு. உயிர்க்கு... எந்த ஆபத்தும் இல்லை..."

அபராஜிதா, ஸ்வேதா இரண்டு பேர்களின் கண்களிலும் நீர்தத்தளித்தது.

அபராஜிதா கேட்டாள். உனக்கு இந்த விஷயத்தை யார் போன பண்ணி சொன்னது ரூபலா....

"அங்கிள் கோகுல்நாத்...!" சொன்ன ரூபலா அவர்கள் காரை பைக் பேர்வழி ஒருத்தன் ஃபாலோ செய்த விபரத்தைச் சொல்லவே இருவரின் கண்களிலும் அதிர்ச்சி பரவியது.

"பைக்ல ஒருத்தன் ஃபாலோ பண்ணினானா?"

"ஆமா...! நான் அதைப் பார்த்துட்டு தான் அங்கிள் கோகுல்நாதுக்கு போன் பண்ணி பைக் அசாமியை மடக்கச் சொன்னேன்... அங்கிள் அதுக்கான ஏற்பாடுகளை பண்ணிட்டிருக்கும் போதே அவர்க்கு உங்க அப்பா சுடப்பட்ட செய்தி கிடைச்சிருக்கு.. அந்த நியூஸை அவர் எனக்கு கன்வே பண்ணினார். நான் உடனே ஹாஸ்பிட லைஸ் பண்ணப்பட்ட உங்க ஃபாதரைப் பார்க்கிறதுக்காக புறப்பட்டேன். வழியில் இந்த காம்பளக்ஸுக்கு முன்னாடி உங்க காரைப் பார்த்தேன்."

அபராஜிதா சுற்றும் முற்றும் பார்த்தாள். "எங்க காரை ஃபாலோ பண்ணின பைக் ஆசாமி எப்படியிருந்தான்னு சொல்ல முடியுமா?"

"நானும் அவனை சரியா பார்க்க முடியலை. பார்க்க ஆள் அவ்வளவு டீஸண்டா இல்லை..." சொல்லிக் கொண்டே ரூபலாமறுபடியும் தெருக்கோடி வரைக்கும் பார்வையைத் துரத்திப் பார்த்தாள்.

பைக்கோடு யாரும் பார்வைக்கு கிடைக் காமல் போகவே ரூபலா அபராஜிதாவை ஏறிட்டாள்.

"அபி! நீயும் உன்னோட சிஸ்டரும் முதல்ல உங்க கார்ல புறப்பட்டு வெலிங் டன் ஹாஸ்பிட்டலுக்கு போங்க. நான் உங்க கார்க்கு பின்னாடியே வர்றேன். அப்படி செஞ்சா ஃபாலோ பண்ற பைக் பேர்வழி யார்ன்னு தெரிஞ்சுடும்"

ஸ்வேதா கண்களில் நீரோடு அபராஜி தாவின் தோளைப் பற்றிக் கொண்டாள்.

"அக்கா...! எனக்கு பயம்மாயிருக்கு..."

ரூபலா அவளுடைய கன்னத்தைத் தட்டினாள். "போலீஸ் இருக்கும் போது எதுக்கு பயம்...? கோகுல்நாத் அங்கிள் எல்லாத்தையும் பார்த்துக்குவார். நீயும் அக்காவும் மொதல்ல அப்பாவைப் போய் பாருங்க... அபி! நீ காரை எடு நான் பின்னாடியே வர்றேன்..."

அடுத்த சில விநாடிகளில் டாட்டா சியாரா கிளம்பியது. பத்து மீட்டர் இடை வெளிவிட்டு தன் மாருதியில் சியாராவைத் தொடர்ந்தாள் ரூபலா.

ரூபலாவின் பார்வை காரின் ரியர்வ்யூ கண்ணாடியில் பட்டுக் கொண்டே வந்தது.

பைக் பேர்வழி எந்த நிமிஷமும் பின் தொடரலாம்...!

கண்ணாடியைப் பார்த்துக் கொண்டே வந்தாள்.

ஐந்து நிமிஷ பயணத்துக்குப் பிறகு

அந்த பைக் பேர்வழி ரியர் வ்யூ கண்ணாடியில் தெரிந்தான்.

ரூபலாவின் உடம்பிலிருந்த அத்தனை செல்களும் உஷார் நிலைக்குப் போயிற்று.

இவனை எப்படி மடக்குவது...?

யோசித்துக் கொண்டே காரின் வேகத்தை கொஞ்சம் கொஞ்சமாய் அதிகப் படுத்தினாள்.

## 7

அஸிஸ்டண்ட் கமிஷனர் நித்யானந்தம் தென்றலின் உடம்பை போஸ்ட் மாட்டத்துக்கு அனுப்பி வைத்த கையோடு ஜீப்பில் ஏறி உட்கார்ந்தார்.

"டிரைவர்...! உனக்கு எக்ஸ் - சர்வீஸ் மேன் பில்டிங் தெரியுமா?"

"தெரியும் ஸார்...! மௌபரீஸ் ரோட்ல இருக்கு அதுதானே...?"

"அதுதான்... கிளம்பு...!"

ஜீப் பரவியிருந்த கும்பலில் மெதுவாய் ஊர்ந்து பின் வேகம் எடுத்து இறக்கை



களைக் கட்டிக் கொண்டது.

பத்து நிமிஷ பயணம்.

மௌபரீஸ் ரோட்டின் மையத்தில் இருந்த அந்த பழைய கட்டிடத்துக்கு முன்பாய் ஜீப் போய் நின்றது.

நித்யானந்தம் இறங்கி எதிர்பட்ட வாசற்படிகளில் ஏறினார்.

"எக்ஸ் - சர்வீஸ் மேன் சர்வீஸ் சென்டர்" என்ற பெயர்ப்பலகை சாயம் போன பெயிண்டில் தெரிந்தது. நித்தியானந்தம் பக்கவாட்டு காரிடரில் வேகமாய் நடை போட்டார்.

என்கொய்ரி கௌண்ட்டர் வந்தது. பெரிய நரை மீசையோடு - வழுக்கைத் தலையோடு லெட்ஜர் ஒன்றில் குனிந்திருந்த ஒரு நபர் பூட்ஸ் சத்தம் கேட்டு தலையை உயர்த்தினார். நித்யானந்தத்தை அடையாளம் கண்டு கொண்டதும் "எஸ்" என்றபடி எழுந்து நின்றார்.

"மிஸ்டர் நம்பியார் இருக்காரா?"

"இருக்கார் ஸார்"

"பார்க்கணுமே...!"

"நீங்க போங்க ஸார்... அவர் இப்போ ஃப்ரீயாத்தான் இருக்கார். நீங்க வர்றதை நான் இண்ட்டர்காம்ல சொல்லிடறேன்."

"தேங்க்யூ..."

நித்யானந்தம் இடதுகை பக்கம்

வளைந்து போன மாடிப்படிகளில் ஏறி எதிர்பட்ட முதல் அறைக்கு முன்பாய் போய் நின்ற விநாடி - அந்த உயரமான நம்பியார் கதவைத் திறந்து புன்னகைத்தார்.

"வெல்கம்... வாங்க நித்தியானந்தம்"

நித்யானந்தம் புன்னகையோடு உள்ளே நுழைந்து கொண்டே கேட்டார்.

"சர்வீஸ் சென்டர் எப்படி போயிட்டிருக்கு நம்பியார்?"

"ஏதோ போயிட்டிருக்கு! மிலிட்டரியி லிருந்து ரிடையரானவங்களுக்கு அரசாங் கம் ஏதேதோ பண்றதா பேப்பர்ல போடற நியூஸ்களுக்கும் நடைமுறையில் இருக்கிற திட்டங்களுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு... எல்லாமே பாலிடிக்ஸ்."

"நீங்களும் தெருவுல இறங்கி மறியல் - போராட்டம்ன்னு செய்ய வேண்டியது தானே...?"

"யோசனை பண்ணிட்டிருக்கோம்..." சொன்ன நம்பியார் நித்யானந்தத்துக்கு ஒரு நாற்காலியைக் காட்டிவிட்டுக் கேட்டார்.

"என்னை வெறுமனே பார்க்கவோ வெட்டி அரட்டை அடிக்கவோ வந்திருக்கா மாட்டீங்கன்னு நினைக்கிறேன்...! சரியா?"

"ரொம்ப கரெக்ட்...! இன்னிக்கு மத்தி யானம் சுடச்சுட ஒரு கேஸ். அது சம்பந்தமா ஒர என்கொய்ரி. இந்த லாக்கெட்டை கொஞ்சம் ஓப்பன் பண்ணிப்பாருங்க."



நம்பியார் அந்த சில்வர் லாக்கெட்டை வங்கிப் பார்த்தார்.

நித்யானந்தம் சொன்னார். "லாக்கெட் டின் ஒரு பாதியில் இருக்கிற பெண்ணோட பேர் தென்றல். இன்னொரு பகுதியில் இருக்கிற மிலிட்ரிமேன் யார்ன்னு தெரி யலை. உங்களால கண்டுபிடிக்க முடியுதா பாருங்க..."

நம்பியார் அந்த போட்டோவையே அரைநிமிஷ நேரம் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு நிமிர்ந்தார்.

"தெரியும்..! இவர் பேர் வெங்கட ரெட்டி. ஆர்மியில் மேஜராயிருந்து ரிடையரானவர். ரெண்டு வருஷத்துக்கு முந்தி ரிடையரான இவர் போன ஆறு மாசத்துக்கு முந்திதான் இறந்து போனார்."

"இறந்துட்டாரா...?"

"ஆமா... எக்ஸ் - சர்வீஸ் மேன் சர்வீஸ் சென்டர் சார்பா ஒரு ரீத் கூட கொண்டு போய் வெச்சோம்."

"அப்ப... இந்தப் பொண்ணுயாரு...?"

"தெரியாது..."

"இவர் பேர் என்ன சொன்னீங்க...?"

"வெங்கட் ரெட்டி..."

"அட்ரஸ்...?"

"ஒரு நிமிஷம்..." என்று சொன்ன நம்பியார் அலமாரிக்குப் போய் லெட்ஜர்

ஒன்றைக் கொண்டுவந்து ஆல்பபடிக் வரிசை பார்த்து வி பக்கங்களைப் புரட்டி வெங்கட ரெட்டியைக் கண்டுபிடித்தார்.

"அட்ரஸை நோட் பண்ணிக்குங்க நித்தியானந்தம்! பாந்தியன் ரோடு, ஏழாவது க்ராஸ்கட், டோர் நம்பர் டூ த்ரு ஃபைவ்..."

குறித்துக் கொண்ட நித்தியானந்தம் தான் கையோடு கொண்டு போயிருந்த ப்ளாஸ்டிக் பையைப் பிரித்து அந்த துப்பாக்கியை எடுத்துக் காட்டினார்.

"இது மிலிட்ரியில் யூஸ் பண்ற பிஸ்டல் தானே...?"

நம்பியார் வாங்கிப் பார்த்துவிட்டு "எஸ்! பட்... இது ரொம்பவும் ஓல்ட் டைப்... இது மாதிரியான பிஸ்டல்கள் இப்போ ஆர்மியில் கிடையாது. உங்களுக்கு இது எப்படி கிடைச்சுது...?"

நித்யானந்தம் விபரம் சொன்னார்.

நம்பியார் அதிர்ச்சியோடு எல்லாற்றையும் கேட்டுவிட்டு லாக்கெட்டில் இருந்த தென்றலின் போட்டோவை மறுபடியும் பார்த்தார்.

"இந்தப் பொண்ணை நான் எங்கேயோ பார்த்திருக்கேன்... நித்யானந்தம்..."

"எங்கே...?"

நம்பியார் தன்முன் மண்டையை ஸ்லோமோஷனில் கீறியபடி யோசிக்க ஆரம்பித்தார்.



# 8

ரூபலா காரை வேகமாய் விரட்டிக் கொண்டே ரியர் வ்யூ கண்ணாடியைப் பார்த்தாள். அந்த பைக்பேர்வழியும் தொடர்ந்து அதே வேகத்தில் வந்து கொண்டிருந்தான்.

"என்ன செய்யலாம்...?"

ரூபலா யோசித்துக் கொண்டிருக்கும் போதே சாலையின் அந்த நாற்சந்திப்பில் போக்குவரத்து சிக்னல் சிவப்பு விளக்கைக் காட்ட காரை ஒதுக்கி நிறுத்தினாள். ரியர் வ்யூ கண்ணாடியில் பைக் பேர்வழியும் நெருங்கி வந்து பத்து மீட்டர் தூரத்தில் நிற்பது தெரிந்தது.

இந்த சிக்னலில் மாட்டினால் மறுபடியும் கிளம்ப எப்படியும் இரண்டு நிமிஷ நேரமாகும்.

ரூபலாவின் பார்வை பக்கவாட்டில் திரும்ப சிக்னலுக்குப் பக்கத்தில் நின்றிருந்த அந்த பழக்கமான ட்ராஃபிக் கான்ஸ்டபிள் விஷ் செய்தபடி பக்கத்தில் வந்தார்.

"அய்யா... இல்லீங்களாம்மா?"

"வெளியூர் போயிருக்கார்." - சொன்ன ரூபலா சட்டென்று குரலைத் தாழ்த்திக் கொண்டாள்.

"கான்ஸ்டபிள்! நீங்க எனக்கு ஒரு உதவிபண்ணணும்"

"சொல்லுங்கம்மா...!"

"உடனே திரும்பிப் பார்த்துடாதீங் என் கார்க்குப் பின்னாடி பத்து மீட்ட தூரத்துல ஒருத்தன் பைக்கோடு நிக்கிறா கறுப்பு பைக் அவன் ஆள் சரியில்லை. கா ஃபாலோ பண்ணி வந்துட்டிருக்கா ஏற்கெனவே போலீஸிலும் கம்ப்ளைண் கொடுத்திருக்கேன்."

"அவனை மடக்கி போலீஸ்ல ஹேண் ஓவர் பண்ணனும்... அவ்வளவுதானே...?"

"ஆமா..."

"நான் பார்த்துக்கிறேன்மா. கா்ஷுவலி ஆர்.சி.புக் கேட்கிற மாதிரி கேட்டு மட கிடறேன்..."

கான்ஸ்டபிள் காரைவிட்டு நகர்த் விநாடி அந்த பைக்கின் உறுமல் சத்த பெரிதாய் எழுந்தது. முன்னால் நின்றிருந் வண்டிகளை சட்சட்டென்று ஓவர் டே செய்து குபீரென்று இடது பக்கம் பாய்ந்தத

"ஏய்... நில்லு..." கான்ஸ்டபி கத்திவிட்டு நீளமாய் விசில் கொடுத்தார்.

சிவப்பு விளக்கு எரிவதையும் பொருட் படுத்தாமல் பைக் போக்குவரத்துக் நடுவே புகுந்து பறந்தது.

பைக் நெம்பரை பார்க்க முயன்றா கான்ஸ்டபிள்.

நெம்பர் ப்ளேட்டில் சேறு அடித்திருக் டி.என். எழுத்துக்கள் மட்டும் தெரிந்தன.



# 9

பாந்தியன் சாலை ஏழாவது க்ராஸ்கட் ராட்டின் இருந்த வெங்கட ரெட்டியின் ட்டுக்கு முன்பாக போலீஸ் ஜீப் போய் ன்றபோது சாயந்தரம் மணி ஐந்து.

வீழி அவ்வளவு சுத்தமாக இல்லை. க்கத்தில் ஓடிக் கொண்டிருந்த ஓர ாக்கடை வீரியமாய் மணத்தது ஒயின் ாப்பில் கூட்டம் தெரிய சாலையோர ால்னா கடைகளில் மோசமான எண்ணெ வில் வறுபட்ட மீன்கள் நாறின.

நித்யானந்தம் முன்னால் இருந்த சிறிய கேட்டை தள்ளிக் கொண்டு உள்ளே போக இளைஞன் ஒருவன் கைலி பனியனோடு திர்பட்டான். யூனிஃபார்ம் பார்த்து ரண்டவனைக் கேட்டார்..

"இது மிலிட்ரிமேன் வெங்கட ரெட்டி டுதானே?"

"ஆமா ஸார்..."

"நீயாரு...?"

"ரெட்டியோட அண்ணன் பையன் ார். ரெட்டி எனக்கு சித்தப்பா. அவர்க்கு ழந்தைங்க இல்லாததினால அவரோட ரணத்துக்குப் பின்னாடி இந்த வீடு எனக்கு டைச்சது..".

"உம் பேர் என்ன...?"

"வேலாயுதம் ஸார்"

"எங்கே வேலை பார்க்கறே...?"

"ஒரு டெக்ஸ்டைல் மில்லில் ஃபிட்டா ராயிருக்கேன் ஸார்."

"உள்ளே வா... உன் சித்தப்பாவைப் பத்தி கொஞ்சம் பேசணும்..."

நித்யானந்தம் அந்த வீட்டுக்குள் நுழைந்தார். பழைய வீடு. மண்சுவர்கள் சில இடங்களில் இளித்து செங்கற்களைக் காட்டின. சுவர் மூலைகளில் நூலாம் படைகள். பரண்மேல் அடைசலாய் காகிதக் கட்டுகள்.

நித்யானந்தம் லாக்கெட்டைக் காட்டி கேட்டார்.

"இது உன் சித்தப்பாவோட லாக்கெட்டி தானே...?"

வேலாயுதம் வாங்கிப் பார்த்துவிட்டு தலையாட்டினான். "ஆமா... ஸார்..."

"இந்த லாக்கெட்டுக்குள்ளே இருக்கிற பொண்ணு யார்ன்னு தெரியுதா...?"

"தெரியலை ஸார்..."

"உன்னோட சித்தி... ஐ... மீன் ரெட்டியோட ஒய்ஃப் எப்போ இறந்து போனாங்கன்னு தெரியுமா...?"

"கல்யாணமான ரெண்டு வருஷத்துக்குள்ளே அவங்க இறந்து போய்ட்டாங்க ஸார்..."

"அதுக்கப்புறம் அவர் வேற எந்தப் பொண்ணையும் ரெண்டாவது தாரமா கல்யாணம் பண்ணிக்கலை...?"

"இல்ல ஸார்..."

"இந்த பொண்ணோட பேர் தென்றல். இவ இப்போ உயிரோடு இல்லை. ரெட்டியோட லாக்கெட் இவ கழுத்துக்கு எப்படி வந்தது...?"

"தெரியலை ஸார்..."

"ரெட்டி பெண்கள் விஷயத்துல எப்படி...?"

"அந்த விஷயத்துல அவர் கண்டிப்பானவர் ஸார். எந்தவிதமான கெட்ட பழக்கங்களும் இல்லாதவர். அவர் மிலிட்ரியிலிருந்து வந்த பிறகு ஆன்மீகத்துல நாட்டம் செலுத்தினார். ஒரு இயக்கத்தை ஆரம்பிச்சார்."

நித்யானந்தம் நிமிர்ந்தார்

"இயக்கமா...?"

"ம்...! இயற்கையைக் காப்போம்! எளிதாய் வாழ்வோம்!" இதுதான் அந்த இயக்கத்தோட பேர்.

"அந்த இயக்கத்தில் யார்யரெல்லாம் இருந்தாங்கன்னு தெரியுமா...?"

"போ எதுவும் தெரியாது ஸார். சுமாராக ஒரு எழெட்டு பேர் இருப்பாங்க இதே வீட்ல கூட்டம் போட்டு பேசறதைப் பார்த்திருக்கேன்."

"அதுல பெண்களும் இருந்தாங்களா?"

"ம்... ரெண்டு பேர் இருந்த மாதி
ஞாபகம்... அதுல ஒரு பொண்ணாக்கூ
இந்த தென்றல் இருக்கலாம்."

"உன் சித்தப்பாவோடு சம்பந்தப்பட்
பொருள்கள் ஏதாவது இந்த வீட்
இருக்கா..?"

"இருக்குஸார்... வாங்க உள்ளே..."

"வேலாயுதம் உள்ளே கூட் டி
கொண்டு போனான் அரையிருட்டாய் ஒ
அறை வந்தது. ஸ்விட்ச்சைத் தேய்க
ட்யூப்லைட் உயிர் பெற்றது.

சுவரோரமாய் ஒரு பழைய ட்ரங்
பெட்டி, அழுக்குப் பச்சை நிறம். பெட்டியி
மேல் கோணல் மாணலாய் வெள்ளை
பெயிண்ட்டால் எழுதப்பட்ட எழுத்துக்க

**Regiment Number 3569 HVLR**

**V Reddy**

வேலாயுதம் சொன்னான். "அவ
சம்பந்தப்பட்ட எல்லாப் பொருள்களு
இந்த ட்ரங்க் பெட்டிக்குள்ளதான் இருக்
ஸார்.."

நித்யானந்தம் அந்த கனமான ட்ரங்
பெட்டியில் மூடியை சற்று சிரமத்தோ
திறந்தார்.

மேலாக இரண்டு செட் ஆர்மியூ
ஃபார்ம் நிறம் போய் தெரிந்தது. அவ
எடுத்து வைத்துவிட்டு உள்ளே பார்த்த
சுருட்டி வைக்கப்பட்ட ஒரு துணி பே



ர்வைக்கு கிடைத்தது. எடுத்துப் பிரித்தார்.
இயற்கையைக் காப்போம் என்ற
எழுத்துக்கள் கொட்டை கொட்டையாய்
தெரிந்தன. துண்டு பிரசுரங்கள் சில கண்
ளுக்கு சிக்க எடுத்துப் பார்த்தார்
நித்யானந்தம்.

'இயற்கைக்கு எதிரானவர்கள்
ங்களுக்கும் எதிரிகளே!'

'இயற்கை தாயாகவே இருக்கட்டும்.
அதை பேயாக மாற்ற வேண்டாம்'

'இயற்கையை மாற்றினால்
அது சீற்றம் கொள்ளும்
வளர்ந்த விஞ்ஞானம் போதும்
இனியும்வேண்டாம் விபரீதம்.'

'இயற்கையை நேசி
அது உன்னுடன்
உண்மை பேசும்'

நித்யானந்தம் எல்லாவற்றையும்
படித்துவிட்டு மடித்து வைக்கப்பட்டிருந்த
ஒரு வரைபடத்தையும் பிரித்துப் பார்த்தார்.

இயற்கையின் எதிரிகள் என்ற
தலைப்புக்குக் கீழே சிலரது புகைப்படங்
களும் அந்த புகைப்படங்களுக்குக் கீழே
பெயர்களும் எழுதப்பட்டிருந்தன.

1. விக்ரம் ஷர்மா (அடாமிக்ரிசர்ச் ஸ்காலர்)
2. அரவிந்தாட்சன் (கெமிக்கல் இண்டஸ்ட்ரியலிஸ்ட்)
3. வாசுதேவ் (பயோடெக்னாலிஜிஸ்ட்)

4. நிஜலிங்கப்பன் (ஃபாரஸ்ட் டெஸ்ட்ராயர்)

ட்ரங்க்ப் பெட்டியை மேலும் கிளறினார் நித்யானந்தம். நிறைய பேப்பர் கட்டிங்குகள் நாளிதழ்களிலும் வார இதழ்களிலும் வெளிவந்த செய்திகள்.

க்ளோனிங், அணுசக்தி, ஓஸோன் ஓட்டை, விஷமாகும் குடிநீர், டெஸ்ட் ட்யூப் பேபி என்னும் சித்ரவதை, செவ்வாய்க்குப் பயணம்.

வேலாயுதத்தை ஏறிட்டார் நித்யானந்தம்.

"இந்த இயற்கையைக் காப்போம்" இயக்கத்தில் எத்தனைபேர் இருந்தாங்கன்னு சொன்னே...?

"ஏழெட்டுப் பேர் இருக்கலாம் ஸார்..."

"அதுலயாரையும் உனக்கு அடையாளம் தெரியாது...?"

"தெரியாது ஸார்..."

நித்யானந்தம் குரலை கடுமையாக்கிக் கொண்டார். "இதோ பார்.... வேலாயுதம்... உன்னோட சித்தப்பா வெங்கடரெட்டி இயற்கையைக் காப்போம் என்கிற போர்வையில் தீவிரவாத அமைப்பு ஒன்றை நடத்திட்டு வந்திருக்கார். அது பத்தின உண்மைகள் உனக்கு கண்டிப்பா தெரிஞ்சிருக்கும். தெரிஞ்சிருந்தா அதை இப்பவே சொல்லிடறதுநல்லது..."



வேலாயுதம் வியர்த்தான். "ஸார்...! நீங்க சொல்ற வார்தைகளைக் கேட்டா எனக்கு பயம்மாயிருக்கு ஸார்... அவர் நடத்திட்டு வந்த இயக்கத்தைப் பத்தியெல்லாம் எனக்கு எதுவுமே தெரியாது ஸார். ஆனா நீங்க இப்போ என் சித்தப்பா மேல சந்தேகப்படறதால என் மனசுக்கு நெருடலா பட்ட ஒரு தகவலைச் சொல்றேன் ஸார்..."

"சொல்லு..."

## 10

வெலிங்டன் ஹாஸ்பிட்டல்.

தோளில் போட்ட பாண்டேஜ் கட்டோடு வாசுதேவன் படுக்கையில் சாய்ந்திருக்க அவரைச் சுற்றி ரூபலா அபராஜிதா, ஸ்வேதா, வாசுதேவின் மனைவி மிருதுளா கவலை முகங்களோடு உட்கார்ந்திருந்தார்கள் கோகுல்நாத்தும் இன்ஸ்பெக்டர் ஒருவரும் உள்ளே வந்தார்கள்.

"ட்ராஃபிக் கான்ஸ்டபிள் கிட்டயிருந்து தப்பிச்ச அந்த பைக் ஆசாமியைத் தேடி ஒரு போலீஸ் ஸ்க்வாட் ஃபுல் ஸ்விங்க்ல இயங்கிட்டிருக்கு. எப்படியும் மடக்கிருவாங்க..."

ரூபலா கோகுல் நாத்தை ஏறிட்டாள்.

"அங்கிள்...! மிஸ்டர் வாசுதேவ்

ஃபேமிலியை யாரோ குறிப்பா வாட்ச் பண்ணி அந்த காரியங்களை செஞ்சுகிட்டிருக்காங்க. வாசுதேவை தென்றல்ங்கிற ஒரு பெண் சுட்டுக் கொல்ல முயற்சி பண்ணியிருக்கா. அதே நேரத்துல அபராஜிதா, ஸ்வேதா பயணம் பண்ணின காரையும் எவனோ ஒருத்தன் பைக்ல ஃபோலோ பண்ணியிருக்கான். அது எதுக்காகன்னு தெரியலை."

"அவன் மாட்டிக்காமே போகமாட்டான்..."

பேசிக் கொண்டிருக்க டாக்டர் பிரசாத் உள்ளே வந்தார். வாசுதேவை புன்னகையோடு பார்த்தார்.

"தோட்டா குறி தவறிப்போனது... நீங்க போன ஜென்மத்துல பண்ணின புண்ணியம்..."

"நான் எப்போ வீட்டுக்கு போலாம் டாக்டர். பொண்ணோட கல்யாண வேலைகள் எல்லாம் தலைக்கு மேல அப்படியே இருக்கு..."

"ரெண்டு நாளைக்காவது நீங்க இங்கே இருக்கணும் மிஸ்டர் வாசுதேவ். கல்யாண ஏற்பாடுகளையெல்லாம் வீட்ல இருக்கிற மத்தவங்க கவனிக்கட்டும். தோள் பட்டையில் காயம் சொற்பமாயிருந்தாலும் நீங்க அதிகமா ஸ்ட்ரெய்ன் பண்ணிக்கக்கூடாது..."

டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கும்



போதே கோட் பாக்கெட்டில் இருந்த அவருடைய செல்போன் கூப்பிட்டது.

எடுத்து காதுக்கு பொருத்தினார் பிரசாத்.

"ஹலோ..."

"டாக்டர் பிரசாத்...?"

"எஸ்... ஹோல்டிங்..."

"டாக்டர்! பயோ டெக்னாலிஜிஸ்ட் வாசுதேவ் எப்படியிருக்கார்...?"

"ஃபைன்..."

"இன்னும் இருபத்திநாலு மணி நேரம் கழிஞ்ச பின்னாடி இந்த வார்த்தையை நீங்க சொல்லமாட்டீங்க டாக்டர்."

"நீங்கயாரு...?"

"நான்... ஸாரி... நாங்க யார்ன்னு தெரிஞ்சுக்க நீங்க ஆசைப்பட்ட ஒரு சின்ன காரியம் பண்ணணும்."

"எ... எ... என்ன?"

"வாசுதேவ் சீக்கிரமே குணமடையணும்ங்கிறதுக்காக... ஏகப்பட்ட கெட் வெல் கார்ட்ஸும் பொக்கேக்களும் வந்து அங்கே குவிஞ்சிருக்கும். அதுல ஒரு பொக்கே எங்களோடது. கொஞ்சம் பெரிய சைஸ் பொக்கே. அந்த பொக்கேயைப் பிரிச்சு பாருங்க... நாங்க யார்ன்னு நீங்க கேட்ட கேள்விக்குவிடை கிடைக்கும்."

ரிஸீவர் வைக்கப்பட்டுவிட டாக்டர்

பிரசாத் இருண்டு போன முகத்தோடு செல்போனை அணைத்தார்.

## 11

"சொல்லு... உம் மனசுக்கு நெருடலா பட்ட விஷயம் என்ன...?"

நித்யானந்தம் கேட்டதும் வேலாயுதம் நகர்ந்து போய் ஒரு கம்பியில் மாட்டி வைத்திருந்த கம்ப்யூட்டரைஸ்ட் தாள்கள் சிலவற்றைக் கொண்டு வந்தான்.

"என்ன் இது..?"

"டெலிபோன் பில்கள் ஸார்.. சித்தப்பா உயிரோடு இருந்தப்ப கடைசி சில மாசங்கள் வந்த டெலிபோன் பில்ஸ்..."

"அதாவது ஆறு மாசத்துக்கு முந்தி வந்த டெலிபோன் பில்ஸ்...""

"ஆமா... ஸார்"

"சரி... இதுல என்ன நெருடல்?"

"இந்த மூணு டெலிபோன் பில்களிலும் ஒரே எஸ்.டி.டி. நெம்பர்க்கு மட்டும் தொடர்ச்சியா போன் பண்ணியிருக்கார் சித்தப்பா. வேற எந்த ஊருக்கும் அவர் எஸ்.டி.டி. பண்ணிப் பேசவே இல்லை..."

நித்யானந்தம் அந்த டெலிபோன் பில்களை வாங்கிப் பார்த்தார்.

இரவு நேரங்களில் ஒரே டெலிபோன் ...ண்ணுக்கு தொடர்ந்து போன் பண்ணப் ...ட்டிருந்ததது.

போன் செய்யப்பட்ட நேரம் ராத்திரி ...ட்டு மணியிலிருந்து ஒன்பது மணிக்குள்.

போன் நெம்பரைப் பார்த்தார்.

0427 - 717617

வேலாயுதத்திடம் கேட்டார்.

"0427.... எஸ்.டி.டி. கோட் எந்த ஊர் ...தரியுமா...?"

"சேலம் ஸார்..."

"717617 இது சேலத்துல யாரோட ...நம்பர்...?"

"தெரியலை ஸார்..."

"நீ தெரிஞ்சுக்க முயற்சி பண்ண ...லயா?"

"இல்ல ஸார்.."

"ஏன்..?"

"சித்தப்பாவே உயிரோடு இல்லாத ...பாது அவரோட விவகாரங்களை ஏன் ...றறணும்ன்னு விட்டுட்டேன்..."

"இப்ப... இந்த வீட்டுக்கு போன் ...ருக்கா?"

"இல்ல... ஸார்... எனக்கு போன் ...வச்சுக்க வேண்டிய அவசியம் இல்லை. ...நான் வேண்டாம்ன்னு சொல்லிட்டேன்..."

"இங்கே பக்கத்துல டெலிபோன் பூத்

ஏதாவது இருக்கா...?"

"ஒயின் ஷாப்புக்கு பக்கத்துல இருக

ஸார்"

நித்யானந்தம் அந்த சேலம் டெ
போன் எண்ணை ஒரு துண்டு பேப்பா
குறித்துக் கொண்டு வீட்டினின்றும் வெ
பட்டார். வெளியே வேடிக்கை பார்க்
திரண்டிருந்த கும்பல் அவரைப் பார்த்த
பயத்தோடு நகர்ந்து வழிவிட்டது.

நித்யானந்தம் வேகநடை போட்
ஒயின் ஷாப்புக்கு பக்கத்தில் இரு
எஸ்.டி.டி. பூத்துக்குள் நுழைய உள்
உட்கார்ந்திருந்த இளைஞன் கலவரம
எழுந்து நின்றான். "பயப்படாதே!" அவ
தோளைத் தட்டிவிட்டு டெலிபோனி
ரிஸீவரை எடுத்துக் கொண்ட நித்யானந்
டயலில் சேலம் எண்களைத் தட்டினார்.

மறுமுனையில் உடனே ரிங் போயிற்
சில விநாடிகளுக்குப் பின் ரிஸீவர் எடுக்
பட்டு ஒரு ஆண் குரல் கேட்டது.

"ஹலோ..."

நித்யானந்தம் பேசினார். "போல
டிப்பார்ட்மெண்ட்டிலிருந்து பேசறோம். அ
யார் வீடு...?"

"இது வீடல்ல ஸார்..."

"பின்னே...?"

"ஹாஸ்பிட்டல்..."



"ஹாஸ்பிட்டலா...?

"ஆமா ஸார்... சித்தா ஹாஸ்பிட்டல்"

## 12

அறையின் சுவரோர மூலையில்
விக்கப்பட்டிருந்த பொக்கேக்களை
டுத்து கோகுல்நாத்தும் இன்ஸ்பெக்டர்
ருவரும் பிரித்துப் பார்க்க அந்த லில்லிப்
க்கள் கட்டப்பட்டிருந்த பொக்கேயின்
ள்ளேயிருந்து அந்தக் கடிதம் வெளிப்
ட்டது.

கோகுல்நாத் எடுத்து பிரித்துப் படித்
ார்.

இயற்கையைக் காப்போம் இயக்கத்தின்
ர்பாக பயோடெக்னாலிஜிஸ்ட் வாசு
தவ்க்கு இறுதி எச்சரிக்கை. தென்றலில்
தாட்டாவுக்கு தப்பிவிட்ட வாசுதேவ்
னியாவது தன்னைத் திருத்திக் கொள்ள
வண்டும். இயற்கைக்கு எதிரா செயல்
டுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.
றைவனின் படைப்புகளை ஆராய்ச்சி
ன்னும் பெயரில் அசிங்கப்படுத்துவதை
னிமேலும் நாங்கள் ஏற்கமாட்டோம். அவர்
னது ஆராய்ச்சிகளை நிறுத்திக் கொள்ள
வண்டும். அடுத்தமாதம் பெர்லினில்
டக்கும் சர்வதேச ஜீன் தெரபி மாநாட்டில்
வர் கலந்து கொள்ளக் கூடாது. எங்க

ளுடைய இந்த இரண்டு கோரிக்
களுக்கும் அவர் செவி சாய்க்காவிட்ட
விபரீதங்கள் ஒவ்வொன்றாய் முளைக்கு
அவற்றை அறுவடை செய்ய இந்த அரசா
கத்தால் முடியாது. லெட்டர் வாசகங்களை
படித்து எல்லோரும் உறைந்து போ
வாசுதேவ் கோபத்தில் வெடித்தார்.

"என்ன மடத்தனமான கோரிக்கைக
இது. இன்னிக்கு விஞ்ஞானம் எல்லா
துறைகளிலேயும் புதுப்புது எல்லையை
தேடி போய்கிட்டிருக்க. நாம இன்னமு
பத்தாம்பசலிதனமாவே இருக்கோ
பயோடெக்னாலஜியில் ஆராய்ச்சி பண்ண
போய்த்தான் இந்த இரண்டாயிரமாவ
ஆண்டு மனித குலத்துக்கு நிறைய லைஃ
சேவிங் ட்ரக்ஸ் கிடைச்சிருக்கு. மனி
னோட சராசரி ஆயுள் நாற்பத்தியேழ
இருந்தது இன்னிக்கு அறுபத்தியே
மாறியிருக்கு. ஜீன் தெரபி இந்த கால
கட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒ
அற்புதமான விஷயம். இதைக் கு
செல்றவங்க மனிதர்களா இருக்க முடியா
என் உடம்பில் உயிர் ஒட்டிக் கொண்
இருக்கிற கடைசி நிமிஷம் வரைக்கும் இ
ஜீன் தெரபி ஆராய்ச்சிகள் தொடரும்."

கோகுல்நாத்தின் கையில் இருந்
கடிதத்தை வாங்கி நிதானமாய் ஒரு தட
படித்து முடித்த ரூபலா வாசுதே
ஏறிட்டாள்.



"ஸார்... இந்த லெட்டரை நீங்க ரொ
பரிய விஷயமாகவே நினைக்க வேண்
ம். இது மாதிரியான உதவாக்கரை
யக்கங்கள் இந்தியாவில் நிறைய இருக்கு.
அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் நித்யா
ந்தம் இந்தக் கேஸை இன்வெஸ்டிகேட்
ண்ணி நிறை விஷயங்களை சேகரம்
ண்ணியிருக்கிறதா தகவல் கிடைச்சிருக்கு.
இன்னும் ரெண்டே நாள்ல இந்த சல
லப்புக்குக் காரணமானவங்களை கண்டு
பிடிச்சுடலாம். உங்க பெண்ணு கல்யாண
காரியங்களைப் பத்தி நீங்க கவலைப்பட
வேண்டாம். உங்க குடும்பத்துல என்னை
யும் இன்வால்வ் பண்ணிகிட்டு கல்யாண
காரியங்களைக் கவனிக்க நான் தயார்."

வாசுதேவ் கண்களில் நீர் நிறைய
ரூபலாவை கும்பிட்டார்.

"ரொம்ப தேங்ஸ்ம்மா... என்னோட
ரெண்டு பொண்ணுகளையும் ஒரு பெரிய
ஆபத்திலிருந்து நீ காப்பாத்தியிருக்கே...
அதே மாதிரி ஸ்வேதாவோட கல்யாணத்தை
யும் நீதான் நடத்திக் கொடுக்கணும்."

"ஸார்... இந்த நாட்டுக்காக நீங்க
எவ்வளவோ பண்ணியிருக்கீங்க. உங்க
உயிரியல் கண்டுபிடிப்புகள் உலகப் பிர
சித்தம். கம்ப்யூட்டர் துறையில் இந்தியா
வுக்கு இப்போ நல்ல பேர் கிடைச்சிருக்கு.
இந்திய கம்ப்யூட்டர் என்ஜினியர்களுக்கு
உலகம் பூராவும் நல்ல பெயர் கிடைச்சிருக்

நலல பெயா கிடைச்சிருக்கு. அதுக்
காரணம் நீங்கதான். உங்களை நா
இழந்துட மாட்டோம்.."

ரூபலா சொல்லிக் கொண்டிருக்
போதே மறுபடியும் டாக்டரின் செல்போ
கூப்பிட்டது.

டாக்டர் எடுத்து காதுக்கு கொடு
பேச்சை செவி மடுத்துவிட்டு ரூபலாவி
செல்போனை நீட்டினார்.

"மேடம்! போன் உங்களுக்குத்தான்

"போன்ல யாரு டாக்டர்?"

"உங்க கணவர் மிஸ்டர் விவேக்..."

ரூபலாவின் பெரிய கண்களில் விய
தத்தளித்தது.

"நான் இங்கே இருக்கிறது அவர்க்
எப்படி தெரியும்? உங்க செல்போன் நெம்
அவர்க்கு எப்படி கிடைச்சதுன்னு தெ
யலையே...?"

ஆச்சர்யப்பட்டுக் கொண்டே செ
போனை வாங்கி காதுக்குக் கொடுத்தா
ரூபலா.

"என்னங்க..."

"ஸாரி ரூபலா மேடம்... நான் விவே
கிடையாது. இயற்கையைக் காப்போ
இயக்க ஆசாமி நான். பைக்ல ஃபாலே
பண்ணின எங்க இயக்க ஆள் ஒருத்தன



ங்க பார்த்துட்டீங்க. கார் சிக்னல்ல
ன்னப்ப ட்ராஃபிக் கான்ஸ்டபிள்கிட்ட
ால்லி அவனைப் பிடிக்க முயற்சி
ஞ்சீங்க. உங்க கணவர்ஊரில் இல்லாத
னால நீங்க துப்பறிகிற வேலையைப்
ர்க்க ஆரம்பிச்சுட்டீங்க போலிருக்கு.
ாம்ப சந்தோஷம்.."

"ஏ.... ஏய்..."

"பொறுங்கமேடம்...! நீங்க பிடிக்க
யற்சி பண்ணின எங்க இயக்கத்தைச்
ர்ந்த பைக் ஆள் உங்களைப் பார்த்து
சறதுக்காக இந்த ஹாஸ்பிடலின் பின்
ட்டுக்குப் பக்கத்தில் வெயிட் பண்
ிட்டிருக்கான். போய்ப் பார்க்கறீங்களா...?"

"என்ன விளையாடறியா?"

"நோ மேடம்... நாங்க விளையாடலை.
ஸ் ஈஸ் சீரியஸ். ஹாஸ்பிடலுக்கு
ன்பக்கம் போய்ப் பாருங்க. ஹி... ஈஸ்...
வயிட்டிங்..."

மறுமுனையில் ரிஸிவ கவிழ்க்கப்
ட்டுவிட ரபலா திகைப்பாய் திரும்பி
ாகுல்நாத்தைப் பார்த்தாள்.

"என்னம்மா முகம் மாறிடுச்சு. போன்ல
ாவது அதிர்ச்சியான தகவலா...?"

ரூபலா விஷயத்தைச் சொல்ல கோகுல்
த்தும் அந்த இன்ஸ்பெக்டரும் அறை
ினின்றும் புயலாய் வெளிப்பட்டு மாடிப்
டிகளில் இறங்கி ஹாஸ்பிடலின் பின்

பக்கத்தை நோக்கிப் போனார்கள். இன்ஸ்பெக்டர் நம்பிக்கையில்லாமல் நடந்தார்.

"விளையாடறான் ஸார்"

"எதுக்கும் பார்த்துடலாம்"

போனார்கள்.

ஹாஸ்பிடலின் பின்பக்கம் கழிவு குப்பைகள் ரத்தம் தோய்ந்த பஞ்சு பத்தை களோடு தேங்கிக்கிடக்க கருவேலச் செடி களும் பார்த்தீனிய செடிகளும் மண்டி யிருந்தன. ஒரு ஒற்றையடிப் பாதை, மூடிக் கிடந்த கேட்டுக்கு கொண்டு போய்விட-

கேட்டின் மறுபக்கம் காம்பௌண்ட் சுவர்க்கு முட்டுக் கொடுத்து அவன் சாய்ந்து நின்றிருந்தான். உதட்டில் சிகரெட் புகைத்தது.

"நிக்கறான் ஸார்..."

"அவன் தானா... இல்லை வேற யாராவதான்னு தெரியலையே...?"

பக்கத்தில் போனார்கள்.

சுவர்க்கு சாய்ந்து கொண்டு நின்ற வனின் தோளை கோகுல்நாத் ஒரு தட்டு தட்ட அந்த நபரின் உடல் அப்படியே பிடிப்பின்றி சரிந்து மல்லாந்தது.

வயிற்றுப் பகுதியில் உறைந்து போன ரத்தம்.



# 13

நித்யானந்தம் திடுக்கிட்டார்.

"என்னது... சித்தா ஹாஸ்பிடலா?"

"ஆமா ஸார்... திருமூலர் சித்தா ஹாஸ்பிட்டல்."

"இந்த ஹாஸ்பிட்டல் சேலத்துல எங்கேயிருக்கு?"

"அயோத்தியா பட்டணம்"

"டாக்டர் யாரு... அவர் பேர் என்ன?"

"டாக்டர் பேர் ஓம் நமச்சிவாயம்."

"இருக்காரா...?"

"ம்... இருக்கார்..."

"பேசச் சொல்லுங்க..."

"நீங்க யார் ஸார்...?"

"மெட்ராஸிலிருந்து அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் நித்யானந்தம். ஒரு கேஸ் விஷயமா அவர் கிட்ட பேசணும்"

"ஒரு நிமிஷம் லைன்ல இருங்க ஸார்.."

நித்யானந்தம் காத்திருக்க முப்பது விநாடிகளில் டாக்டர் ஓம் நமச்சிவாயம் லைனுக்கு வந்தார். குரலில் பதட்டம். "என்ன விஷயம்... சொல்லுங்க ஸார்...! நான் டாக்டர் ஓம் நமச்சிவாயம்..."

"டாக்டர்..! மெட்ராஸ்ல இன்னிக்கு மத்தியானம் நடந்த ஒரு சம்பவம் சம்பந்தமா

ஒரு சின்ன என்கொய்ரி... உங்க ஒத்துழைப்பு வேணும்"

"ப்ளீஸ்..."

"உங்களுக்கு மிலிட்ரி மேன் வெங்கட ரெட்டியைத் தெரியுமா?"

"தெரியும்... ஹி ஈஸ்மை ஃப்ரண்ட். அவர்தான் இப்போ உயிரோடு இல்லையே..."

"அவர் ஒரு இயக்கத்தை நடத்திட்டு வந்தார் தெரியுமா...?"

"தெரியும்...! இயற்கையைக் காப்போம் என்கிற பெயரில் ஏழெட்டு பேரை வெச்சு கிட்டு ஏதோ ஒண்ணை பண்ணிட்டிருந் தார்."

"அந்த இயக்கத்துல யார் யார் மெம்பர்ஸா இருந்தாங்கன்னு தெரியுமா...?"

"அதைப் பத்தியெல்லாம் எனக்குத் தெரியுது ஸார்.. ஆனால் ஒரு பொண்ணு அந்த இயக்கத்துல இருந்தது மட்டும் எனக்குத் தெரியும்..."

"பொண்ணா...?"

"ம்..."

"பேரு...?"

"தென்றல்..."

"அந்தப் பொண்ணை மட்டும் உங்களுக்கு எப்படி தெரியும்...?"

"அந்தப் பொண்ணு தென்றலை என் கிட்ட ட்ரீட் மெண்ட்டுக்காக ரெட்டி அனுப்பி



"என்ன ட்ரீட் மெண்ட்...?"

"அது... வந்து... தென்றலுக்கு கொஞ் சம் புத்தி சுவாதீனம் கிடையாது. அவளைக் குணப்படுத்தற பொறுப்பை எனக்குக் கொடுத்திருந்தார்."

நித்யானந்தம் வியப்பின் விளிம்புக்குப் போனார். "என்ன சொன்னீங்க... அந்தப் பொண்ணு தென்றலுக்கு மென்டல் டிஸ் ஆர்டரா...?"

"ஆமா...! அந்தப் பொண்ணு மேல ரெட்டிக்கு ஒரு தனிப்பாசம். பெத்த பொண்ணு மாதிரி பார்த்துகிட்டார் என்கிட்ட ரெண்டு மாசம் தொடர்ந்து ட்ரீட்மெண்ட் எடுத்துகிட்ட அந்தப் பொண்ணு குணமாகி வெளியே வர்றதுக்குள்ளே ரெட்டி இறந் துட்டார்."

"தென்றலுக்கு அப்பா அம்மா யாரும் கிடையாதா...?"

"ஏதோ அநாதைப் பொண்ணுன்னு சொன்னார் ரெட்டி. மென்மையான குணம் படைச்ச அந்த பொண்ணு மனசுக்குள்ளே ஒரு போர்க்குணமே இருந்தது. ஏன் ஸார் அந்தப் பொண்ணாலே ஏதாவது ப்ராப் ளமா...?"

நித்யானந்தம் விபரம் சொல்ல மறு முனையில் டாக்டர் ஓம் நமச்சிவாயம் திடுக்கிட்டார்.

வாசுதேவை துப்பாக்கியால சுட்டுட்டு தப்பி ஓடும் போது வாகனம் மோதி இறந்துட்டாளா?"

"எஸ்..."

"எப்போ...?"

"இன்னிக்கு மத்தியானம்..."

"ஸார்... தென்றல் ஏற்கெனவே மன நிலை பாதிக்கப்பட்டவள். அதான் இப்படி ஒரு காரியத்தை பண்ணிட்டாள்...! இயற்கையைக் காப்போம் என்கிற இயக்கம் அவளோட மனதை வெகுவா பாதிச்சிருக்க லாம்."

"டாக்டர்...! நீங்க எனக்கு ஒரு உதவி பண்ணணும்..."

"சொல்லுங்க ஸார்... உங்க என் கொய்ரிக்கு என்னால் இயன்ற ஒத் துழைப்பைக் கொடுப்பேன்."

"இயற்கையைக் காப்போம் என்கிற இயக்கத்தை ரெட்டி ஒரு நல்ல நோக்கத் துக்காக ஆரம்பிச்சு நடத்திட்டு வந்து இருக்கலாம். ஆனா அவர்க்குப் பிறகு அது ஒரு தீவிரவாத இயக்கமா மாறியிருக்கு. தென்றலைத்தவிர அந்த இயக்கத்தில் வேற யார் யாரெல்லாம் இருந்தாங்கன்னு தெரிஞ்சாபரவாயில்லை."

"வெரி ஸாரி.... எனக்குத் தெரியலை..."

"ரெட்டிக்கு உங்களைத் தவிர வேற யாராவது ஃப்ரண்ட்ஸ்...?"



"இருந்தமாதிரி எனக்குத் தெரியலை...

"டாக்டர்..! என்னோட கேள்விகளுக்கு உடனடியா பதில் சொல்லணும்ங்கிற அவசியம் இல்லை... இன்னிக்குப் பூராவும் யோசனை பண்ணுங்க. நாளைக்குக் காலையில் உங்களுக்கு போன் பண்றேன். நீங்க தரப்போகிற எந்த ஒரு சின்னத் தகவலும் இந்த கேஸுக்கு பெரிய அளவில் உதவியா அமையும்"

"ஓ... கே...! நாளைக்குக் காலையில் போன் பண்ணுங்க" டாக்டர் ஓம் நமச் சிவாயம் சொல்லவும் நித்யானந்தம் ரிஸீவரை வைத்துவிட்டு பூத்தினின்றும் வெளிப்பட்டார்.

போலீஸ் ஜீப் ட்ரைவர் பதட்டமாய் வெளியே காத்திருந்தார்.

"ஸார்..."

"என்ன...?"

"ஜீப் வயர்லஸ்ஸில் கமிஷனர் வெயிட் பண்ணிட்டிருக்கார் ஸார்.."

நித்யானந்தம் வேகவேகமாய் ஜீப்பை நோக்கிப் போனார். வயர்லஸ் இரைந்து கொண்டிருந்தது. ரிஸீவரை எடுத்து காதுகளுக்குப் பொருத்திக் கொண்டு மைக்கில் பேசினார்.

"ஸார்..."

கமிஷனர்பேசினார். மிஸ்டர் நித்யானந் தம்! வாசுதேவ் கொலை முயற்சி கேஸை

"ஆமா ஸார்..."

"கேஸ்ல எனி இம்ப்ரூவ்மெண்ட்...?"

"இதுவரைக்கும் கேஸில் ஸ்ட்ராங்க் ஹோல்டிங்க் எதுவும் கிடைக்கலை ஸார்."

"மிஸ்டர் நித்யானந்தம்! நீங்க உடனே புறப்பட்டு ஆபீஸுக்கு வாங்க. பயோ டெக்னாலிஜிஸ்ட் வாசுதேவோட கேஸ் ஒரு விபரீதத்தை நோக்கிப் போயிட்டிருக்கு... நாம உடனடியா சில நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் சில மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும்..."

"ஸார்... அது என்னான்னு...?"

"நேர்ல வாங்க... பேசுவோம்."

## 14

விழுந்து கிடந்தவனின் முகத்தைப் பார்த்தாள் ரூபலா. பின்கோகுல்நாத்தை ஏறிட்டாள்.

"காரை ஃபாலோ பண்ணிட்டு வந்தவன் இவன்தான் அங்கிள்..."

மார்பில் சிலுவை தொங்க வயிற்றில் உறைந்து போன ரத்தத்தோடு மல்லாந்து கிடந்தவனை கோகுல்நாத் சோதனையிட்டார். சர்ட் பாக்கெட்டில் எதுவும் இல்லை.



பேண்ட் பாக்கெட்டை அலசியபோது தமிழில் டைப் செய்யப்பட்ட அந்த துண்டுக் காகிதம் கைக்கு கிடைத்தது.

எடுத்துப் பிரித்தார் கோகுல்நாத்.

என் பெயர் ராபர்ட். இயற்கையைக் காப்போம் இயக்கத்தில் நானும் ஒரு உறுப்பினன். இயற்கைக்கு ஏதிராசெயல் பட்டுக் கொண்டிருக்கிற வாசுதேவ் எங்கள் முதல் எதிரி. அவருடைய குடும்பத்தையே தீர்த்துக் கட்டும் புனிதப் பணியில் நாங்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். க்ரைம் ப்ராஞ்ச் ஆபீஸர் விவேக்கின் மனைவி ரூபலா என்னை அடையாளம் கண்டு கொண்டதால் போலீஸ் பிடியிலிருந்து இனிதப்பிக்க முடியாது. ஆகவே, நான் உயிர் வாழ விரும்பவில்லை. என் இயக்கத்தினரால் எனக்குக் கொடுக்கப்பட்ட கட்டாய மரணம் இது. இயற்கையைக் காப்போம்.

இப்படிக்கு
இந்த உலக வாழ்க்கையிலிருந்து VRs
(கட்டாய ஓய்வு) பெற்றுக் கொண்ட
ராபர்ட்

ரூபலாஅந்தக் கடிதத்தை வாங்கிப் படித்துவிட்டு சொன்னாள்.

"அங்கிள்! அந்த இயக்கத்தோட எல்லா நடவடிக்கைகளும் ரொம் ஃபாஸ்ட்டா இருக்கு. இதே வேகத்தில போனா இந்த ஹாஸ்பிடலுக்கே வந்து வாசுதேவையும்

முடிச்சுட்டு போயிருவாங்க..."

"அப்படி எதுவும் நடக்காதம்மா... இதுவரைக்கும் நடந்த சம்வங்களைப் பார்க்கும் போது அவங்க தரப்பிலதான் ரெண்டு பேர் இறந்து போயிருக்காங்க. வாசுதேவ் சொற்ப காயத்தோடு தப்பிச்சு கிட்டார்."

கோகுல்நாத் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கான்ஸ்டபிள் ஒருவர் வேக வேகமாய் வந்தார்.

"ஸார்... கமிஷனரும் ஏ.சியும் வந்துகிட்டு இருக்காங்க..."

கோகுல்நாத் கக்கத்தில் அதக்கியிருந்த தொப்பியை தலைக்குக் கொடுத்து சரியாய் பொருத்திக் கொண்டே கமிஷனர் தனஞ்செயனையும் அஸிஸ்டண்ட் கமிஷனர் நித்யானந்தத்தையும் சல்யூட்டோடு எதிர் கொண்டார்.

நித்யானந்தம்கேட்டார்.

"செத்தவன்யாரு...?"

"பேர் ராபர்ட் ஸார்... அவன் பேண்ட் பாக்கெட்ல இந்த லெட்டர் இருந்தது."

நித்யானந்தம் அந்த லெட்டரை வாங்கிப் படித்துக் கொண்டிருக்கும் போதே கமிஷனர் தனஞ்செயன் ரூபலாவை ஒரு ஆச்சர்யப் பார்வை பார்த்துக் கொண்டே பக்கத்தில் போனார்.



"ஓ...! மிஸஸ் ரூபலா...! நீங்களும் ஸ்பாட்ல இருக்கீங்களா...?"

ரூபலா சின்னதாய் புன்னகைத்துவிட்டு சொன்னாள். "வாசுதேவோட மூத்தபெண் அபராஜிதா என்னோட காலேஜ் மேட். அவளோட சிஸ்டர் ஸ்வேதாவோட கல்யாணத்துக்காக என்னைக் கூப்பிட வந்தா. கூப்பிட்டுட்டு போகும் போது அவங்க காரை ஃபைக்ல ஃபாலோ பண்ணினது இவன்தான்."

நித்யானந்தம் லெட்டரைப் படித்து முடித்துவிட்டு பக்கத்தில் வந்தார். ரூபலாவைப் பார்த்ததும் புன்னகைத்தார்.

"ஹலோ... எப்படி இருக்கீங்க...?"

"ஃபைன்..."

"மிஸ்டர் விவேக் பம்பாய் போயிருக்கிறதாக கேள்விப்பட்டேன்..."

"ஆமா... ஸம்... ஸ்பெஷல்ட்ரெய்னிங்...."

"அவரே ஒரு ஸ்பெஷல்தானே..." புன்னகைத்த நித்யானந்தம் கமிஷனரிடம் திரும்பினார் கையில் இருந்த துண்டு கடிதத்தை நீட்டினார்.

"ஸார்... இந்த லெட்டரைப் படிச்சுப் பாருங்க..."

கமிஷனர் படித்துப் பார்த்துவிட்டு நிமிர்ந்தார். கீழே விழுந்து கிடந்தவனை

பார்வையால் கழுவிக் கொண்டே தாடையைத் தடவினார்

"இந்த ராபர்ட் யார்... இவனோட ஃப்ரண்ட்ஸ் யார்ங்கிறதைக் கண்டுபிடிக்க இனி முயற்சி எடுக்கணும். இல்லையா....?"

"எஸ்... ஸார்..."

"இப்ப நமக்குகிடைச்சிருக்கிற ஒரே ஒரு தகவல் இவன் பேர் ராபர்ட்... அது மட்டும்தான் இல்லையா?"

"எஸ்... ஸார்..."

"எக்ஸ்க்யூஸ்மீ..." என்றாள் ரூபலா. கமிஷனரின் பார்வை அவள் மேல் திரும்பியது. நிலைத்தது.

"சொல்லுங்க மிஸஸ் ரூபலா..."

"இவனோட பேர் ராபர்ட்டா இருக்க முடியாது ஸார்..."

எல்லோர் முகங்களிலும் வியப்பு.

"எப்படி சொல்றீங்க...?"

"அவன் கழுத்துல இருக்கிற வெள்ளியாலான சிலுவைக்குறியைப் பாருங்க. புத்தம் புதுசா இருக்கு. டாலர் கோர்க்கப்பட்டிருக்கிற கயிறும் புதுசு இதையாரோ வாங்கி மாட்டியிருக்காங்கன்னு நினைக்கிறேன்."

"இந்தக் காரணம் எனக்கு சரியாப்படலை மிஸஸ் ரூபலா. இவனே புதுசா வாங்கி ஏன் போட்டிருக்கக் கூடாது...!"



"ஸார்! இவன் ஒரு கிறிஸ்டியனா ருக்க முடியாது ஸார்..."

"எப்படி சொல்றீங்க...?"

"இவன் நெற்றியோட மையத்தைப் ார்த்தீங்களா... குங்குமம் வெச்சதால ற்பட்ட அலர்ஜி கறுப்பு நல்லாவே தெரி து. கிறிஸ்டியன்ஸ் குங்குமம் வெச்சுக்க ாட்டாங்களே..."

கமிஷனரின் முகத்தில் பிரமிப்பு ரவியது.

"குட் பாயிண்ட்..."

15

டெலிபோன் முணுமுணுத்தது.

புத்தகம் படித்துக் கொண்டிருந்த அந்த ிசப்னிஷ்ட் பெண் எரிச்சலாய் எடுத்தாள்.

"எஸ்..."

"நான் ஸ்வேதா பேசறேன்... மிஸ்டர் சரத் ப்ளீஸ்..."

"ஸ்வேதா...?"

"அவரோட வுட் பி. கல்யாணம் பண்ணிக்கப்போகிற ஸ்வேதா..."

"ஓ... ஸாரி மேடம்...! இதோ அவர்க்கு கனெக்ட் பண்றேன்." ரிசப்னிஷ்ட் அந்த கம்பெனியின் எக்ஸிக்யூ டிவ் டைரக்டர் சரத்தைவேறு ஒரு போனில் தொடர்பு கொண்டாள்.

"ஸார்... உங்க வுட் பி மிஸ் ஸ்வேத
லைனில் இருக்காங்க..."

அடுத்த அறையில் இரந்த சரத் ரிஸ
வரை எடுத்துக் கொண்டு பேச ஆரம்பி
தான்.

"ஹல்லோ.... ஸ்வேதா... வாட்
ஏப்ளஸண்ட் சர்ப்ரைஸ். நான் எதிர்பார்க்கா
போன் இது."

"ஸாரி... உங்ககிட்ட நான் சந்தோஷம
பேசற நிலைமையில் இல்லை...!"

"ஓய்..."

"என்னோட அப்பா இப்போ ஹாஸ்
பிட்டல்ல இருக்கார். அவரை கொலை
பண்ண முயற்சி நடந்தது."

"எ... எ... எப்போ...?"

"இன்னிக்கு மத்தியானம். அதிர்ஷ்ட
வசமா தோட்டா மார்பில் பாயாமே தோள்
பட்டையில் பட்டு உரசிகிட்டு போயிடுச்சு.
பை காட்ஸ் க்ரேஸ் அப்பாவோட உயிர்க்கு
எந்த ஆபத்தும் இல்லை."

"இப்போ... எந்த ஹாஸ்பிட்டல்ல
இருக்கார்...?"

"வெலிங்டன்...."

"எதுக்காக இந்த கொலை முயற்சி...?"

"ஜீன் தெரபி யை கண்டுபிடிச்ச
எங்கப்பாவை இயற்கையைக் காப்போம்
என்கிற இயக்கத்தைச் சேர்ந்தவங்க எதிரியா



நினைச்சு செயல்பட்டுகிட்டு இருக்காங்க."

"ஹைறலி... இடியாட்டிக்...! என்ன ஒரு
முட்டாள் தனம்..."

"முட்டாள்தனம் தான்... என்ன
பண்றது...? நீங்க அப்பாவைப் பார்க்க
ஹாஸ்பிட்டலுக்கு வர்றீங்களா...?"

"அதைவிட எனக்கு வேற என்ன
வேலை... இதோ புறப்பட்டுகிட்டே இருக்
கேன்..." ரிஸீவரை வைத்த சரத் இண்டர்
காமில் ரிசப்னிஷ்ட்டைக் கூப்பிட்டான்.

"சௌம்யா...!"

"ஸார்..."

"இன்னிக்கு நாளைக்கும் எனக்கு
என்ன முக்கியமான என்கேஜ்மெண்ட்ஸ்
இருந்தாலும் சரி கேன்ஸல் பண்ணிடு."

"எஸ்... ஸார்..."

"எனக்கு வர்ற போன் கால்ஸை நோட்
பண்ணிவை... என் செல்போன் நெம்பரை
யார்க்கும் தராதே. மோஸ்ட் அர்ஜெண்ட்
மேட்டரா இருந்தா மட்டும் என்னை
சொல்லில் காண்டாக்ட் பண்ணு..."

"எஸ்... ஸார்..."

சரத் ரிஸீவரை வைத்துவிட்டு வெளியே
வந்தான். புயல் வேகநடை போட்டு
லிஃப்ட்டுக்குள் நுழைந்தவன் பிறகு வந்த
விநாடிகளில் க்ரவுண்ட் ஃப்ளோரைத்
தொட்டு கார் பார்க்கிங்கிற்கு வந்து தன்

காண்டஸா கார்க்குள் நுழைந்தான்.

வெலிங்டன் ஹாஸ்பிட்டல் எந் திசையில் இருக்கிறது என்பு ஞாபகப்படுத்திக் கொண்டு இக்னீஷியனை உசுப்பி காரை நகர்த்தினான்.

கார் கம்பெனியியைக் கடந்து கா பௌண்ட் கேட்டைத் தாண்டி ரோட்டி போக்குவரத்தில் கலந்த போது கா ஓட்டிக் கொண்டிருந்த சரத்தின் பிடரி பகுதியில் கடினமாய் எதுவோ இடறியது.

சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

முகத்துக்கு கறுப்புத் துணியை கட்டியிருந்த அந்த நபர் பிஸ்டலோடு பின் சீட்டுக்கு சாய்ந்து உட்கார்ந்திருந்தான்.

சரத் பிரேக்கை மிதிக்க முயல அவன் பிஸ்டலை அழுத்தினான்.

"கார் போய்கிட்டே இருக்கணும். எங்கேயும் நிறுத்தக் கூடாது... ஏதாவது முரண்டு பிடிச்சா தலைக்குள்ளே தோட்டா போயிடும்.."

## 16

போலீஸ் உயரதிகாரிகளின் கூட்டம் அந்த நள்ளிரவு வேளையிலும் பதட்டத் தோடு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நித்யானந்தம் கோபம் கொப்பளிக்க பேசிக் கொண்டிருந்தார்.

"ஏதோ ஸ்விட்ச்சைத் தட்டி லைட் போடுகிற மாதிரிஎல்லாத் திட்டங்களும் எதிரிகளால் நிறைவேற்றப்பட்டுக் கொண் டிருக்கின்றன. கடைசியாய் நடந்த சம்பவம் ஸ்வேதாவை கல்யாணம் செய்து கொள்ள விருந்த மாப்பிள்ளை சரத் காணாமல் போனது. ஸ்வேதா போன் பண்ணினதும் உடனே தன்னோட காண்டஸா காரில் கிளம்பியிருக்கார் சரத். பட் ஹாஸ்பிட்டல் வந்து சேரலை... அநேகமாய் அவர் கடத்தப்பட்டிருக்கலாம்."

டெப்டி கமிஷனர் கேட்டார். மாப்பிள்ளை சரத்தை எதுக்காக எதிரிகள் கடத்திகிட்டு போகணும்?

"ஸ்வேதாவுக்கும் சரத்துக்கும் நடக்க விருந்த கல்யாணத்தை நிறுத்தி அதன் மூலமா வாசு தேவை டார்ச்சர் பண் ணத்தா..."

"ராபர்ட்ன்னு அவங்களால சொல்லப் பட்ட அந்த ஆள் உண்மையிலேயே யார்ன்னு தெரிஞ்சதா...?"

"தெரியலை... பழைய க்ரைம் அக்கரன்ஸ் ஃபைல்களில் அவனோட போட்டோ இருக்கான்னு விஜிலன்ஸ் பார்த்துட்டு இருக்காங்க. ரிப்போர்ட் எதுவும் கிடைக்கலை. பட் ஒரு உண்மை வெளிப் பட்டிருக்கு..."

"என்ன...?"

"கொலை செய்யப்பட்ட நபர் கிறிஸ்டியனாக இருக்க முடியாது. ஹிமே பி ஹிந்து... ஃபாரன்ஸிக்ரிப்போர்ட்படி அந்த நபரின் நெற்றியில் இருந்த கறுப்பு தழும்பு குங்குமம் வைத்ததின் காரணமாக ஏற்பட்ட அலர்ஜி என்று தெரிய வந்துள்ளது."

"எதற்காக இப்படி யொரு பொய்...?"

"தெரியவில்லை..."

கமிஷனர் தனஞ்செயன் மைக்கை வாங்கி கேட்டார். "மிஸ்டர் நித்யானந்தம்... அந்த சேலம் சித்தாடாக்டர் ஓம் நமச்சிவாயத்தை மறுபடியும் டெலிபோன்ல காண்டாக்ட் பண்ணி பேசினீங்களா...?"

"பேசினேன் ஸார்... எந்த ஒரு உபயோகமான தகவலும் அவர் கிட்ட யிருந்து கிடைக்கலை."

ஒரு போலீஸ் அதிகாரிஇடையில் எழுந்து பேசினார். "மாப்பிள்ளை சரத் காணாமல் போன விஷயத்தில் எனக்கொரு சந்தேகம் ஸார்..."

"என்ன...?"

"சரத்துக்கு பிசினஸ் எதிரிகள் அதிகம். அந்த எதிரிகளல் யாரர்வது அவரைக் கடத்திக் கொண்டு போயிருக்கலாமே...?"

"அந்தக் கோணத்திலும் விசாரணை நடந்து வருகிறது. சரத் இள வயதிலேயே



தாய் தந்தையை இழந்தவர். கஷ்டப்பட்டு படித்து முன்னுக்கு வந்து சிறிய அளவில் ஒரு கம்பெனியை ஆரம்பித்து இன்றைக்கு பெரிய அளவில் வளர்ந்து இருப்பவர். இந்த இருபத்தேழு வயதுக்குள் உலகத்தில் உள்ள பெரும்பாலான நாடுகளைப் பார்த்துவிட்டவர். ஸோ தொழில் முறையில் சரத்துக்கு நிச்சயம் எதிரிகள் இருக்கத்தான் செய்வார்கள். காணமல் போயிவ்டட சரத்தைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு தனி போலீஸ் ஸ்க்வாட்டை நியமனம் பண்ணியிருக்கோம்.:."

நித்தியானந்தம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அட்டெண்டர் ஒருவர் கார்ட்லெஸ் டேலிபோனோடு கமிஷனரை நோக்கி வந்தார்

"ஸார்...! உங்களுக்கு ஹாட்லைன் டெலிபோன்"

"லைனில் யார்...?"

"பயோ டெக்னாலஜி கேந்த்ராவின் டைரக்டர் மௌலீஸ்வர்..."

போனை வாங்கி காதுக்குக் கொடுத்தார் கமிஷனர்.

"ஹலோ..."

"மிஸ்டர் கமிஷனர்..."

"எஸ்..."

"அயாம் மௌலீஸ்வர். டைரக்டர் ஆஃப்

பயோ டெக்னாலஜி கேந்த்ரா..."

"சொல்லுங்கள் மிஸ்டர் மௌலீஸ்வர்..! இந்த நள்ளிரவில் எனக்கு எதற்காக ஹாட்லைன் டெலிபோன் கால்...?"

"ஐந்து நிமிடங்களுக்கு முன் எனக்கு ஒரு டெலிபோன் கால் வந்தது. ஒரு பெண் பேசினாள். அவள் குரலில் ஏகப்பட்ட கோபம், ஆத்திரம், ஆவேசம், பயோடெக்னாலஜி சம்பந்தப்பட்ட எல்லா ரிக்கார்ட்ஸ்களும் ஆராய்ச்சி முடிவுகளும் இன்னும் ஒரு வார காலத்துக்குள் அழிக்கப்பட வேண்டுமாம். வாசுதேவ் கண்டுபிடித்த ஜீன் தெரபி டெக்னாலஜி ஃபார்முலாவை மட்டும் அவளிடம் கொடுத்துவிட வேண்டுமாம். இல்லாவிட்டால் விளைவுகள் மோசமாக இருக்குமாம். இந்த இரண்டு கோரிக்கைகளும் ஒரு வார காலத்துக்குள் நிறைவேற்றப்படாவிட்டால் 'வாசுதேவுக்கு மாப்பிள்ளையாகப் போகிற சரத் உயிரோடு இருக்கமாட்டாராம்... நாளைக்குக் காலை கூரியர்தபாலில் என்னுடைய பெயர்க்கு ஒரு லெட்டர் வருமாம். இந்த லெட்டரை கவனமாய்ப் படித்து அதில் கண்டுள்ளபடி நானும் போலுஸும் நடந்து கொள்ள வேண்டுமாம்."

"பேசியது பெண்தானா...?"

"பெண்தான்..."



"நன்றாய் கவனித்தீர்களா... ஒரு ஆண்கூட குரலை மாற்றி பெண் மாதிரி பேசியிருக்கலாம்..."

"இல்லை...! பேசியது பெண்தான். அந்தக் குரலை உன்னிப்பாய் ஹியர் செய்தேன்..."

"ஓ.கே... மிஸ்டர் மௌலீஸ்வர். இந்தப் பிரச்னையைக் கண்டு நீங்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. உயர்மட்ட போலீஸ் அதிகாரிகள் அத்தனைபேரும் இங்கே இப்போது கூடி குற்றவாளிகளைப் பிடிப்பதற்குரிய வழிமுறைகளைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். உங்கள் வீட்டு பாதுகாப்புக்கு செக்யூரிட்டி கார்ட்ஸ் இருக்கிறார்களா?"

"இரண்டு பேர் இருக்கிறார்கள்..."

"மேலும் இரண்டு பேரை ரேபிட் ஃபோர்ஸிலிருந்து செக்யூரிட்டிகளால் உங்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கட்டுமா?"

"ப்ளீஸ்..."

கார்ட்லஸ் போனை அணைத்து கமிஷனர் தனக்கு முன்னால் உட்கார்ந்திருந்த போலீஸ் அதிகாரிகளைப் பார்த்து மௌலீஸ்வர் போனில் பேசியதை சொல்ல ஆரம்பிக்க எல்லோரும் மெல்ல மெல்ல முகங்கள் மாற ஆரம்பித்தார்கள்.

பயோ டெக்னாலஜி கேந்த்ரா..."

"சொல்லுங்கள் மிஸ்டர் மௌலீஸ்வர்..! இந்த நள்ளிரவில் எனக்கு எதற்காக ஹாட்லைன் டெலிபோன் கால்...?"

"ஐந்து நிமிடங்களுக்கு முன் எனக்கு ஒரு டெலிபோன் கால் வந்தது. ஒரு பெண் பேசினாள். அவள் குரலில் ஏகப்பட்ட கோபம், ஆத்திரம், ஆவேசம், பயோடெக்னாலஜி சம்பந்தப்பட்ட எல்லா ரிக்கார்ட்ஸ்களும் ஆராய்ச்சி முடிவுகளும் இன்னும் ஒரு வார காலத்துக்குள் அழிக்கப்பட வேண்டுமாம். வாசுதேவ் கண்டுபிடித்த ஜீன் தெரபி டெக்னாலஜி ஃபார்முலாவை மட்டும் அவளிடம் கொடுத்துவிட வேண்டுமாம். இல்லாவிட்டால் விளைவுகள் மோசமாக இருக்குமாம். இந்த இரண்டு கோரிக்கைகளும் ஒரு வார காலத்துக்குள் நிறைவேற்றப்படாவிட்டால் வாசுதேவுக்கு மாப்பிள்ளையாகப் போகிற சரத் உயிரோடு இருக்கமாட்டாராம்... நாளைக்குக் காலை கூரியர்தபாலில் என்னுடைய பெயர்க்கு ஒரு லெட்டர் வருமாம். இந்த லெட்டரை கவனமாய்ப் படித்து அதில் கண்டுள்ளபடி நானும் போலுஸும் நடந்து கொள்ள வேண்டுமாம்."

"பேசியது பெண்தானா...?"

"பெண்தான்..."



"நன்றாய் கவனித்தீர்களா... ஒரு ஆண்கூட குரலை மாற்றி பெண் மாதிரி பேசியிருக்கலாம்..."

"இல்லை...! பேசியது பெண்தான். அந்தக் குரலை உன்னிப்பாய் ஹியர் செய்தேன்..."

"ஓ.கே... மிஸ்டர் மௌலீஸ்வர். இந்தப் பிரச்னையைக் கண்டு நீங்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. உயர்மட்ட போலீஸ் அதிகாரிகள் அத்தனைபேரும் இங்கே இப்போது கூடி குற்றவாளிகளைப் பிடிப்பதற்குரிய வழிமுறைகளைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். உங்கள் வீட்டு பாதுகாப்புக்கு செக்யூரிட்டி கார்ட்ஸ் இருக்கிறார்களா?"

"இரண்டு பேர் இருக்கிறார்கள்..."

"மேலும் இரண்டு பேரை ரேபிட் ஃபோர்ஸிலிருந்து செக்யூரிட்டிகளால் உங்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கட்டுமா?"

"ப்ளீஸ்..."

கார்ட்லஸ் போனை அணைத்து கமிஷனர் தனக்கு முன்னால் உட்கார்ந்திருந்த போலீஸ் அதிகாரிகளைப் பார்த்து மௌலீஸ்வர் போனில் பேசியதை சொல்ல ஆரம்பிக்க எல்லோரும் மெல்ல மெல்ல முகங்கள் மாற ஆரம்பித்தார்கள்.

# சிவப்பாய் ஒரு பௌர்ணமி

ஈஞ்சம்பாக்கம் தாண்டி டவுன் பஸ்ஸை விட்டு இறங்கினாள் மவுனிகா. அந்தக் கடற்கரை சாலையில் சற்றே உள்வாங்கி தன்னந்தனியே இருக்கும் மினி பங்களாவை நோக்கி ஆவலாய் நடைபோட்டாள்.

மவுனிகா கடற்கரை மணலில் கால் புதைய நடந்து அந்த மினி பங்களாவை அடைந்தாள். பங்களாவின் பின்னணியில் சவுக்கு மரங்கள் ஏராளமாய்த் தெரிந்தன. ரிப்பர் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றாள்.

காலிங் பெல் சுவிட்சில் கையை வைத்ததுமே கதவு திறந்தது.

திறந்தவன் பிரபு.

பூப் பூவாய்ப் போட்ட காஷுவல் வேர் பேண்ட் சர்ட் உடுத்தியிருந்தான். கண்களில் மவுனிகாவைப் பார்த்த பிரத்யேக சந்தோஷம் வழிந்தது. ரத்த ஓட்டம் தெரியும் சிவப்பு நிறம். வலதுபுறம் வழித்து சீவின கிராப்பில் சற்றே சின்னப் பையன்தனம் தெரிந்தது. மற்றபடி நல்ல அகல உயரங்களோடு ஆஜானுபாகு.

"வா மவுனிகா... உள்ளே வா..."

மவுனிகா முன்புற வராந்தாவில் செருப்பை உதறிவிட்டு உள் ஹாலுக்குப் போனாள். பிரபுவின் கை ஸோபா திசையைக் காட்டியது.

"உக்காரு..."

ஹேண்ட் பேகை டீபாய்க்குக் கொடுத்து விட்டு, ஸோபா ஸ்பான்ஜுக்குள் பொதிந்தாள். பிரபு அவளுக்கு எதிரே உட்கார்ந்து அவள் முகத்தையே பார்த்தான்.



"கோபமா இருக்கியா மவுனிகா?"

அவள் வெடுக்கென்று நிமிர்ந்தாள்.

"பின்னே இருக்காதா?"

"நீ இப்படி மூஞ்சியைத் தூக்கி வெச்சிக்கிற அளவுக்கு நான் என்ன தப்புப் பண்ணிட்டேன்?"

"உங்களை யாரு நான் வேலை பார்க்கற இடத்துக்கெல்லாம் ஃபோன் பண்ணச் சொன்னது?"

"இன்னிக்கு எனக்கு பர்த்டேன்னு ஞாபகப்படுத்தத்தான்."

"முந்தாநாள் வள்ளுவர் கோட்டத்தில் சந்திச்சிக்கிட்டபோதே நாம இதைப் பத்தி பேசியாச்சு. இன்னிக்கு உங்களுக்கு பர்த்டே... ட்யூட்டி முடிஞ்சதும் நான் நேரா இந்த கெஸ்ட் ஹவுசுக்கு வந்துடறேன்... மத்தவங்களைப் போல ஹோட்டல் ட்ரீட்டெல்லாம் வேண்டாம். என் கையாலே உங்களுக்கு பாதாம் அல்வா செஞ்சி தர்றேன்னு தெளிவாப் பேசிட்டுதான் நாம் குட்பை சொல்லி கிட்டோம்."

"இல்ல மவுனிகா... மத்த வேலைகளுக்கிடையில் நீ இதை மறந்துட்டின்னா என்ன பண்றதுன்னுதான் நான் ஃபோன் பண்ணி ஞாபகப் படுத்தினேன்."

"என்னோட பிரபுவின் பிறந்த நாளை நான் மறந்துருவேனா..."

"சரி. இப்ப அதனால என்ன... ஃபோன் பண்ணினா அது ஒரு தப்பா?"

மவுனிகா சீரியசாய் அவனைப் பார்த்தாள்.

"இங்க பாருங்க பிரபு. நாம் காதல் விவகாரம் எங்க வீட்டுக்குத் தெரியக் கூடாதுங்கறதுல நான் எவ்வளவு ஜாக்கிரதையா இருக்கேன்னு உங்களுக்குத் தெரியாது."

"ஒரு நாள் தெரிஞ்சி தானே ஆகணும்...?"

"இப்ப தெரிய வேண்டாம்ன்னு நினைக்கிறேன். என்னோட அக்காவுக்கு மும்முரமா வரன் பார்த்துட்டிருக்காங்க. அக்காவோட கல்யாணம் முடியறவரைக்கும் நம்ம காதல் ரகசியமா இருக்கறதுதான் நல்லது. அவ கல்யாணம் முடிஞ்சிட்டா அப்புறம் நாம சுதந்திரப் பறவைகள். தைரியமா நம்ம காதலை வீட்டில் உடைச்சிருவேன். அதுக்கப்புறம் இந்தக் காதல் விவகாரம் யார்க்கு தெரிஞ்சாலும் கவலையில்லை."

"ஒக்கே... ஒக்கே... இனிமே நான் நீ வேலை பார்க்கற இடத்துக்கு ஃபோன் பண்ணலை... போதுமா?"

மவுனிகா தலையசைத்தாள்.

பிரபு மெலிதான புன்னகையோடு கேட்டான். "கோபமெல்லாம் ஒரு வழியாத் தீர்ந்ததா? அம்மாவுக்கு நல்ல மூடு வந்தாச்சா? பிறந்த நாளும் அதுவுமா சரியான குஸ்தி."

மவுனிகா புன்னகைத்தாள்.

"குஸ்தி இல்லை. ஊடல்..."

"என்ன ஊடலோ... கதவைத் திறந்ததும் ஹாய் பிரபு... வெரி வெரி ஹாப்பி ரிட்டர்ன்ஸ் ஆஃப் த டே....'ன்னு என்னை வாயார வாழ்த்தி உற்சாகமாக் கழுத்தைக் கட்டி 'பச்சக்'ன்னு ஒரு முத்தம் தந்திருந்தா அது எவ்வளவு நல்லா இருக்கும்."

"ஸாரி பிரபு. ஒன் அவர் பர்மிஷன் கேட்டிருந்தேன். மேஜர் தரலை. நீங்க ஃபோன் பண்ணி கோபத்தோட அந்த எரிச்சலும் சேர்ந்து 'மூட் அவுட் ஆயிட்டேன்'"

"ஆ ஊன்னா கிழத்தை வாயாரப் புகழ்வியே... அவர் அப்படியாக்கும், இப்படியாக்கும்ன்னு அவரைப் பத்தியும், அவர் ஆராய்ச்சி பண்ற



கிரிஸ்டலைப் பத்தியும என்னென்னவோ கதை விடுவியே... உனக்கு நல்லா வேணும்."

"சின்னக் குழந்தை மாதிரிப் பேசாதீங்க. அவர் எனக்கு பர்மிஷன் தரலைங்கறதக்காக அவரோட ஆராய்ச்சியைக் குறை சொல்ல முடியாது."

"ஊஹூம். அந்தக் கிழத்தோட சேர்ந்து நீயும் ரொம்பக் கெட்டுப் போயிட்டே. கொஞ்சம் விட்டா, கல்லைத் தேய்ச்சா அதிலிருந்து பூதம் கிளம்பி வந்து கை கட்டி நின்னு கட்டளை இடுங்கள்... பிரபோ'ன்னு சொல்லும்ன்னு நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து கதை விடுவீங்க போலிருக்கு."

"நீங்க மிகைப்படுத்திப் பேசறீங்க... கிரிஸ்டல் என்கிற ஸ்படிகம் பார்க்கறதுக்கு கல்லு மாதிரித் தோற்றமளிச்சாலும்... ஸ்படிகம் என்பது வெறும் கல் அல்ல பிரபு. ஸ்படிகங்களுக்கு மருத்துவக் குணங்கள் இருக்கு. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட ஸ்படிகத்தை உடலில் வெச்சுக்கிட்டா அவை அதிர்வு அலைகளை வாங்கி உடலுக்குள் செலுத்தும்."

பிரபு தலையில் கையை வைத்து கொண்டான்.

"ஆரம்பிச்சுட்டா... ஆரம்பிச்சுட்டா...."

"நீங்க ஸ்படிகங்களைப் பத்தி நான் சொல்றதையெல்லாம் நம்பாமே எப்போ பார்த்தாலும் கிண்டல் பண்றீங்க. அதனால் உங்களை நம்ப வெக்கறதுக்காகவே இன்னிக்கு நான் மேஜருக்குத் தெரியாமே இதைக் கொண்டு வந்தேன்."

சொல்லிக் கொண்டே மவுனிகா தான் கொண்டு வந்த ஹேண்ட் பேகைப் பிரித்தாள். அதன் உள்வறை ஜிப்பைப் பிரித்து அதில் பத்திரப்படுத்தியிருந்த அதை எடுத்து டீபாய் மேல் வைத்தாள்.

பிரபுவின் பார்வை அதன் மேல் விழுந்தது.

சிறியதாய் - உருண்டையாய் - செந்நிறமாய்

ஒரு கூழாங்கல்லைப் போலிருந்தத. அந்த ஸ்படிகம்.

மேஜர் வைத்யநாத் முகம் கறுத்துப் போயிருந்தார். அவர் மனசுக்குள் பரபரப்பும், பதட்டமும் கோஷமிட்டுக் கொண்டு ஊர்வலம் போயின. அன்றாட ஷேவிங்கில் கட்டை தட்டிப் போயிருந்த முகத்திலும், கழுத்திலும் வியர்வை ஈரம்.

சுவரில் அப்பியிருந்த அஜந்தா க்வார்ட்ஸ் வாட்சின் பெரிய முட்களைக் கலவரமாய்ப் பார்த்தபடியே டெலிஃபோன் டயலை வேகமாய் சுழற்றினார். பதட்டத்தில் முதல் முறை ராங் டயல் போனது. அடுத்த முயற்சியில் சரியாய் லைன் கிடைத்தது.

"ஹலோ... இன்ஸ்பெக்டர் சந்திரகுமார் ஸ்பீக்கிங்" என்று மறுமுனையிலிருந்து குரல் கேட்டது.

"நான் வைத்யநாத்... பே...சறேன்..."

"ஹல்லோ மேஜர் ஸார்... சவுக்கியமா இருக்கீங்களா? ரொம்ப நாளைக்கப்பறம் ஃபோன் பண்ணியிருக்கீங்க..."

மேலே பேச எத்தனித்த இன்ஸ்பெக்டர் சந்திரகுமாரை அவசரமாய்க் குறுக்கிட்டு குரலை நுழைத்தார், வைத்யநாத். "இன்ஸ்பெக்டர்... நீ...ங்க உடனே... இங்க.. வரணும்..."

வைத்யநாத்தின் குரலில் தொற்றியிருந்த பதட்டத்தை சந்திரகுமார உணர்ந்து கொண்டார்.

"ஒரு மாதிரி நெர்வஸ்ஸாப் பேசறீங்க? எனி ப்ராப்ளம் மேஜர் ஸார்?"

"பெரிய ப்ராப்ளம்."

"என்னாச்சு?"

"போன்ல விளக்க முடியாது. பெரிய ஆபத்து இன்ஸ்பெக்டர். நீங்க சீக்கிரமா? இங்க வரணும்."

ரிஸீவரை வைத்தவர் நிமிர்ந்து வாட்சைப் பார்த்தார்.



நேரம் 5.37.

விநாடி முள் நொண்டி நொண்டி நகர்வதைப் பார்த்ததால் ரத்த அழுத்தம் அதிகரித்தது. அங்கிருந்து நகர்ந்தார்.

மறுபடியும் கிரிஸ்டல் எக்சிபிஷன் ஹாலுக்கு வந்தார். ஹாலின் கிழக்குப் புற மூலையில் தன்னந்தனியே இருந்த அந்த சின்னக் கண்ணாடி கேஸ் மேல் பார்வையைப் போட்டார். கண்ணாடி கேஸ் வெறுமையாயிருந்தது.

எல்லா ஸ்படிகங்களும் வைத்தது வைத்தது போல சாதுவாய் இருக்க இந்தக் குறிப்பிட்ட ஸ்படிகம் மட்டும் எப்படிக் காணாமல் போயிற்று?

குழப்பமாய் அவர் யோசித்தபோது, வாசலில் ஜீப் சத்தம் கேட்டது. கம்பீர நடையில் இன்ஸ்பெக்டர் சந்திரகுமார் உள்ளே வந்தார். அவர் முகம் நிறையக் கேள்விக்குறிகள்.

"மேஜர் ஸார்... ஆர் யு ஆல் ரைட்? ஏதோ பெரிய ஆபத்துன்னு சொன்னிங்களே?"

"ஆபத்து எனக்கில்லை இன்ஸ்பெக்டர்."

"பின்னே?"

"என் கூட வாங்க. விபரமா சொல்றேன்."

சொல்லிக் கொண்டே சந்திரகுமாரை அந்த ஸ்படிகக் கண்காட்சிக் கூடத்துக்குள் கூட்டிப் போனார். சந்திரகுமார் நெற்றி சுருங்க அந்தக் கண்காட்சிக் கூடத்தைப் பார்வையிட்டார். நாலா திசையிலும் கண்ணாடி கேஸ்களில் வெல்வெட் விரிப்பின் மேல் பதவிசாய் பல ரகமான ஸ்படிகக் கற்கள் உட்கார்ந்திருந்தன.

"இந்த எக்சிபிஷனை அமைச்ச பிறகு நீங்க இங்கே வரலைன்னு நினைக்கிறேன்."

"இதெல்லாம் என்ன?"

"ஸ்படிகங்கள். ராணுவ ரெஜிமெண்ட்டில்

இருக்கறப்ப அந்தப் பனிப் பிரதேசத்தில் எனக்கு ஒரு அபூர்வ ஸ்படிகம் கிடைச்சது. சாதாரணமா நினைச்சிருந்த எனக்கு ஒரு ரிஷிகள் மூலமா ஸ்படிகங்களின் அற்புதக் குணாதிசயங்கள் பத்தித் தெரிய வந்தது. அன்னிலேர்ந்து ஸ்படிகங்களை சேகரிக்க ஆரம்பிச்சேன். மிலிட்டரி சர்வீசிலிருந்து ரிடையர் ஆனதும் ஸ்படிகங்களை பத்தின தீவிரமான ஆராய்ச்சியில் இறங்கிட்டேன்."

"இந்தக் கற்களைப் பத்தி ஆராய்ச்சியா?"

"இவை கற்கள் இல்லை இன்ஸ்பெக்டர். அதீத சத்தி வாய்ந்த ஸ்படிகங்கள்."

"சக்தின்னா?"

"மருத்துவ குணங்கள்னு வெச்சிக்கங்களேன்."

"கூழாங்கற்கள் மாதிரி இருக்கும் இவைகளுக்கு மருத்துவக் குணங்களா? என்னால நம்ப முடியலை."

"கிரக நிலைகளுக்கேற்ற மாதிரி ஒவ்வொருத்தரும் அவங்கவங்களுக்கு ராசியான நவரத்தினக் கற்களை மோதிரமாகவோ வேற ஆபரணங்களில் பதித்தோ அணிஞ்சிக்கறதைப் பார்த்திருப்பீங்களே..."

"பாத்திருக்கேன்..."

"அந்த நவரத்தினங்களைவிட ஸ்படிகங்களுக்கு விசேஷ குணங்களும், தன்மைகளும் இருக்கு. மரகத ஸ்படிகத்துக்கு மன அமைதி ஏற்படுத்தற குணம் உண்டு. பச்சை நிற ஸ்படிகம் நரம்புத் தளர்ச்சியைக் குணப்படுத்தும். நம்ம பாடி டெம்ப்பரேச்சரை சமநிலைப்படுத்தக்கூடிய சக்திகூட பல ஸ்படிகங்களுக்கு உண்டு. உங்களை வரவழைச்சு, டாபிக்கை விட்டுட்டு எங்கேயோ போயிட்டேனே... இன்ஸ்பெக்டர் இன்னொரு நாள் உங்களுக்கு விலாசாரியா ஸ்படிகங்களைப் பத்தி எக்ஸ்ப்ளெயின் பண்றேன்.



இப்ப ஒரு அபூர்வமான ஸ்படிகம் காணாமற் போயிருச்சு. அதுக்காகத்தான் உங்களை வரச் சொன்னேன்."

வெறுமையாயிருந்த அந்தக் கண்ணாடிக கேசைக் காட்டிய வைத்யநாத் சொன்னார். "அந்த ஸ்படிகம் இந்தக் கேசில்தான் இருந்தது. இப்ப சாயந்தரம் பார்க்கறப்போ அதைக் காணலை."

"அது விலையுயர்ந்த ஸ்படிகமா?"

"ஆப்ரிக்காவில் சில ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால கிடைச்ச ஸ்படிகம். பிரெஞ்ச் மன்னன் பதினாலாம் லூயிகிட்டே சில காலம் இருந்தது. அப்புறம் ஒரு பணக்கார பெண்மணி கைக்கு மாறி ஒரு சமீபத்திய ஏலத்தில் என்கிட்டே வந்தது. அது விலையுயர்ந்ததுங்கறது ஒரு பக்கமிருந்தாலும்... ஆபத்தானதுங்கறதுதான் முக்கியமான விஷயம்."

"என்ன மேஜர் ஸார்! இப்பத்தான் ஸ்படிகங்கள் மருத்துவத் தன்மைகள் நிறைஞ்சவைன்னு சொன்னீங்க. இப்ப ஆபத்தானதுன்னு சொல்றீங்களே?"

"நன்மை தரக்கூடி ஸ்படிகங்கள் இருக்கற மாதிரி தீமை தரும் ஸ்படிகங்களும் இருக்கு. காணாமற் போயிருக்கும் அந்த ஸ்படிகம் ஒரு தீமை தரும் ஸ்படிகம். அதுவும் இன்னிக்கு ராத்திரி சரியா ஏழரை மணிக்கு அந்த ஸ்படிகத்தால் ஆபத்து இருக்கு."

இன்ஸ்பெக்டர் முகம் மாறி ரிஸ்ட் வாட்சில் பார்வையைப் போட்டார்.

5.53

"அதென்ன கணக்கு... இன்னிக்கு ராத்திரி ஏழரை மணி?"

"இன்னிக்கு பவுர்ணமி நாள் இன்ஸ்பெக்டர். முழு நிலாவின் கிரகணங்கள் ராத்திரி ஏழரை

மணிக்கு நாப்பத்தஞ்சு டிகிரி கோணத்தில் விழும்."

"அப்படி விழுந்தா?"

"அப்படி விழும்போது அந்த ஸ்படிகத்தி லிருந்து கண்ணுக்குத் தெரியாத பாஸ்பரஸ் பெண்ட்டா குளோரைடுங்கற விஷ வாயு வெளியேற ஆரம்பிக்கும். பக்கத்திலிருக்கிற நபர் யாராக இருந்தாலும் ரெண்டே நிமிஷங்களில் மரணமடைய வேண்டியதுதான்."

"ஒவ்வொரு பவுர்ணமி அன்னிக்கும் இந்த ஆபத்து இருக்கிறதா?"

"ஆமா ஒவ்வொரு பவுர்ணமி அன்னிக்கும் சூரியன் அஸ்தமிக்கறதுக்கு முன்னால இதுக் காகவே ஸ்பெஷலாத் தயாரிக்கப்பட்ட ஒரு இரும்புக்கலத்துக்குள் இந்த ஸ்படிகத்தை நான் வி.ஐ.பி. விசிட்டர்ஸ் வர வேண்டியிருந்தால் ஸ்படிகத்தை அதனோட கன்ட்டெயினரில் சாயந்தரம் எடுத்து வெச்சிட இருந்தேன். எடுக் கறதுக்காக வந்தப்பதான் இந்த ஸ்படிகத்தைக் காணலைன்னு தெரிஞ்சது."

"விசிட்டர்ஸ் வந்தாங்களா?"

"வந்துட்டுப் போயிட்டாங்க."

"அப்படி வந்தவங்களில் யாராவது எடுத் திருக்க வாய்ப்பிருக்கா?"

"வாய்ப்பிருக்கு."

"அந்த ஸ்படிகத்தை கெட்ட காரியத்துக்கு பயன்படுத்தறதுக்காக யாராவது எடுத்திருப்பாங் களா?"

மேஜர் வைத்யநாத் பலமாய் மறுத்தார். "நோ. அப்படி யாரும் அதை எடுத்திருக்க சான்ஸ் இல்லை."

"எப்படி இவ்வளவு உறுதியா சொல்றீங்க?"



"ஏன்னா... அந்த ஸ்படிகத்தோட அபாயக் குணத்தைப் பத்தி முதமுதலா உங்ககிட்டேதான் விளக்கியிருக்கேன். அஞ்சு நிமிஷத்துக்கு மேல அதை உத்துப் பார்த்தா தலைவலி வரும். ஸ்படிகத்தின் மேலோட்டமான இந்தக் கணத்தை மட்டும்தான் நான் வெளியே சொல்லியிருக்கேன். அதனால அதை எடுத்தவங்க அதன் மூலமா வரப் போற விபரீதத்தை அறியாமத்தான் எடுத் திருக்கணும். இப்ப மணி சரியா ஆறு. இன்னும் ஒண்ணரை மணி நேரத்திற்குள்ளே அந்த ஸ்படிகம் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிச்சு அதை முடக்கலைன்னா அதை எடுத்தவங்க சாக வேண்டியதுதான்."

இன்ஸ்பெக்டரின் நெற்றி கவலையால் சுருங்கியது.

"இங்க யாராவது வேலை பாக்கறாங்களா மேஜர் ஸார்?"

"எனக்கு பி.ஏ.வா மவுனிகான்னு ஒரு பொண்ணு வேலை பாக்குது. குறிப்புகள் எடுத்துத் தர்றதும், 'டைப்' பண்ணித் தர்றதும் அந்தப் பொண்ணோட வேலை."

"அந்தப் பொண்ணைக் கேட்டீங்களா?"

"அவளுக்கு ஃபோன் பண்ணிப் பார்த்தேன். இன்னும் வீடு திரும்பலைன்னு சொன்னாங்க. அந்தப் பொண்ணு எடுத்துட்டு போயிருக்க வாய்ப் பில்லை இன்ஸ்பெக்டர். அப்படி எடுத்துட்டு போயிருந்தா என்கிட்டே சொல்லியிருப்பா. வந்த விஸிட்டர்ஸல யாராவது ஒருத்தர்தான் அதை எடுத்துட்டு போயிருக்கணும்."

"யாராயிருக்கும்னு நினைக்கறீங்க?"

மேஜர் தன் வழுக்கையை கீறிக் கொண்டு யோசிக்க -

விநாடிகள்... விரயமாகிக் கொண்டிருந்தன.

மவுனிகா டீபாய் மேல் வைத்த அந்த கூழாங் கல் வடிவத்தைக் குழப்பமாய்ப் பார்த்தான், பிரபு.

"இது என்ன மவுனிகா?"

"ஸ்படிகம்."

"இதை எதுக்காகக் கொண்டு வந்திருக்கே?"

"ஸ்படிகங்களுக்கு சக்தி இருக்குன்னு உங்களை நம்ப வெக்கறதுக்காக."

"எப்படி நம்ப வெக்கப் போறே?"

"இந்த ஸ்படிகத்துக்கு ஒரு விநோதமான குணம் இருக்கு. இதை அஞ்சு நிமிஷம் தொடர்ந்து உத்துப் பார்த்தீங்கன்னா ஆறாவது நிமிஷத்தின் ஆரம்பத்தில் உங்களுக்கு தலைவலி ஆரம்பிச்சுரும்."

பிரபு சிரித்தான்.

"என்ன இது... பைத்தியக்காரத்தனம். இந்தக் கல்லை உத்துப் பார்த்தா தலைவலி வருமா?"

"நீங்க இப்படிச் சொல்லுவீங்கன்னு தெரியும். உங்களுக்கு நம்பிக்கை வர்றதுக்காகவே நான் மேஜருக்குத் தெரியாம இந்த ஸ்படிகத்தைக் கொண்டு வந்தேன். நாளைக்குக் காலைல இதை இருந்த இடத்திலேயே வெச்சிரணும்."

"இப்ப நான் என்ன செய்யணுமா?"

"இப்ப மணி ஏழு இருபத்தைஞ்சு. இந்த இருந்து இன்னும் அஞ்சு நிமிஷத்துக்கு... அதாவது சரியா ஏழரை மணி வரை நீங்க இந்த ஸ்படிகத்தையே பார்க்கணும்."

"பார்த்தா எனக்கு தலைவலி வருமா?"

"வருதான்னுதான் பாருங்களேன்."

நேரம் 7.25.

நம்பிக்கையே இல்லாத பார்வையோடு அவன்



அந்த ஸ்படிகத்தைப் பார்க்க ஆரம்பித்தான்.

"நீ சொல்ற மாதிரி ஏழு முப்பதுக்கு எனக்கு தலைவலி வந்துச்சுன்னா க்ரிஸ்டல்களின் பவரை நான் ஒப்புக் கொள்கிறேன்."

"கண்டிப்பா உங்களுக்கு தலைவலி வரும். அந்தத் தலைவலியைப் போக்கறதுக்காக நான் இப்ப ஒரு டிகிரி காப்பி போட்டுக் கொண்டு வர்றேன்."

7.27.

மவுனிகா இரண்டு அறைகளைக் கடந்து கிச்சனை அடைந்தாள். அவள் அந்தப் பக்கம் போனதுமே சட்டென எழுந்தான், பிரபு. பின்னாலேயே கிச்சன் வரை வந்து கிச்சன் கதவை வெளிப்பக்கமாய் தாளிட்டாள்.

"பி... பிரபு... கதவை ஏன் தாள் போடறீங்க?"

மவுனிகா சமையலறையிலிருந்து அதிர்ச்சி கலந்த குரலில் கத்திக் கொண்டிருக்க -

"யாரு... ஜெயசுரா? நான் பிரபு பேசறேன். பட்சி சிக்கியிருச்சு. பட்சி இப்ப கூண்டுல...!" என்னால தனியா அவளை சமாளிக்க முடியாது. நீயும் வந்துட்டியானா... ரெண்டு பேரும் சேர்ந்து... கையை வெச்சுக்கலாம். பத்து நிமிஷத்துக்குள்ளே நீ வந்து சேர்ந்துடணும். லேட் பண்ணிடாதே! சொர்க்கம் இங்கே நமக்காக காத்திட்டிருக்கு."

நேரம் 7.30.

பிரபு சோபாவில் சாய்ந்து உட்கார்ந்தான்.

பக்கத்து வெண்டிலேட்டர் வழியே பவுர்ணமி சந்திரனின் கிரணங்கள் உள்ளே வந்து ஸ்படிகத்தின் மேல் விழ - அந்த ஸ்படிகம் விழித்துக் கொண்டு விஷக் கதிர்வீச்சை ஆரம்பித்தது... மெல்ல... மெல்ல...

நன்றி: தினமலர்

# உதிரம்

டெலிபோன் துடித்ததும் - மளிகை சாமான்களின் பில்களை சரிபார்த்துக் கொண்டிருந்த ஜானகி ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

"அது கருணா அநாதை மகளிர் விடுதிதானே...?" ஒரு ஆண்குரல் கேட்டது.

"ஆமா..."

"விடுதி தலைவி ஜானகிதானே பேசறது...?"

"ஆமா..."

"மேடம்... என்னோட பேர் வாசன். ராமமர்த்திங்கிற ஒரு பணக்காரர்க்கு பி.ஏ.வா. இருக்கேன்... உங்களால எனக்கு ஒரு உதவியாகணும்..."

"விஷயத்தைச் சொல்லுங்க..."

"என்னோட முதலாளி ராமமூர்த்தி இன்னும் அரைமணி நேரத்துல உங்க அநாதை விடுதிக்கு வருவார். அங்கே அவர் வர்றதுக்குக் காரணம் இதுதான். இருபது வருஷங்களுக்கு முன்னாடி அவர் தன்னோட ஒரு வயசுப் பெண் குழந்ஷதயை உங்க அநாதை விடுதியில விட்டுட்டு பிழைக்கிறதக்காக பம்பாய் போயிட்டார். கஷ்டப்பட்டு வாழ்க்கையில முன்னேறி இன்னிக்கு ஒரு உயர்ந்த நிலைக்க வந்திருக்கார். உங்க விடுதியில இருக்கிற பொண்ணைக் கூட்டிக்கிட்டுப் போறதுக்காக இப்ப அங்கே வருவார்..."

ஜானகி லேசாய் கோபப்பட்டாள்.

"இதென்ன கேலிக்கூத்து...? இருபது வருஷத்துக்கு முந்தி அநாதை விடுதியில் விட்டுட்டு போனவர்க்கு இப்போ தன்னோட பொண்ணை எப்படி அடையாளம் தெரியும்...?"

"இந்த இடத்துலதான் நீங்க உதவணும் மேடம்..."

"உதவறா... எப்படி?"

"கடந்த இருபது வருஷமா அந்த விடுதிக்க நீங்கதானே தலைவி?"

"ஆமா..."



"ராமமூர்த்தி அங்கே வந்த குழந்தையை விட்டுப்
பான வருஷத்தையும் தேதியையும் சொல்வார்...
ங்க உடனே அந்த நாள் எனக்கும் நல்லா ஞாபகம்
ருக்குன்னு சொல்லி - ஏதாவது ஒரு பொண்
ணைக் காட்டி இதுதான் உங்க பொண்ணுன்னு
சால்லி அவர் கூட அனுப்பிடுங்க... அவர்
பாண்ணு அங்கே இல்லேன்னு தெரிஞ்சா மனசு
டைஞ்சுடுவாரு... குழந்தையை திருட்டுத்தனமா
நாதை விடுதியில் விட்டுட்டுப் போனதால
ழந்தையோட பேரும் உங்களுக்குத் தெரிய
ய்ப்பில்லை..."

ஜானகி பொரிந்தாள்.

"வாழ்க்கையில் கொஞ்சம் வசதி வந்ததுமே...
ங்கே வந்து பொண்ணை கூட்டிகிட்டு போயிருக்க
மே...? இருபது வருஷம் கழிச்சா வரணும்?"

"மேடம்... ஆரம்ப காலத்துல அவர் கொஞ்சம்
ட விரோதமான காரியங்கள்ள பண்ணி தலை
றவா இருந்தாராம். அப்புறம் போலீஸ்ல மாட்டி
யில்ல சில வருஷம் இருந்து நல்ல மனுஷனா
ளியே வந்திரக்கார்..."

"இந்த விடுதியில வளர்ந்த பெண்கள்ல சில பேர்
லைக்க போய் தனித்தனியா செட்டிலாயிட்
ங்க... அவரோட பொண்ணு யார்னு எப்படிக்
டுபிடிக்கறது...?"

"அது கஷ்டம்னு எனக்கும் தெரியும் மேடம்...
க்கு இப்போ வேண்டியது மகள் என்கிற உறவு.
எந்தப் பொண்ணைக் காட்டி உங்க மகள்
தான்னு சொன்னாலும் அவர் அதை அப்படியே
க்குவார். வேற ஒரு அநாதை பொண்ணுக்க
அப்பா என்கிற உறவைக் கொடுக்கட்டுமே?"

ரி... வாங்க..."

ானகி ரிஸீவரை வைத்துவிட்டு - யோசனை
மோவாயை தாங்கிக் கொண்டாள்.

வளை செலக்ட் செய்யலாம்?

யாய் அரைமணி நேரம்.

டுதிக்கு கார் நுழைந்து - அந்த வேப்ப
க்கு கீழே நின்றது. ராமமூர்த்தியும் வாசனும்

கீழே இறங்க ஜானகி போய் எதிர் கொண்டாள்.
"வணக்கம்..."
"வணக்கம்! இந்த விடுதிக்க பொறுப்பா
யாரு...?" ராமமூர்த்தி கேட்க ஜானகி புன்னகைத்தா
"நான்தான்... நீங்க யார்னு தெரியலையே..
தெரியாதது மாதிரி கேட்டாள்.
"என் பேர் ராமமூர்த்தி... உங்ககிட்ட ஒரு உத
காக வந்தேன்..." என்று ஆரம்பித்து இருபது வருட
களுக்கு முன் அந்த அநாதை விடுதியில் விட்
சென்ற குழந்தையைப் பற்றி சொல்லி - மக
கூட்டிக் கொண்டு போக வந்திருப்பதைச் சொன்
ஜானகி உள்ளே கூட்டிப்போய் - அவர்களை
கார வைத்து விபரங்கள் கேட்டு லெட்ஜரை புர
பார்த்துவிட்டு ஒரு சின்னப் புன்னகையே
ராமமூர்த்தியை ஏறிட்டாள்.
"நீங்க பண்ணின அதிர்ஷ்டம்... உங்க பெ
இந்த விடுதியை விட்டு போகவே இல்லை. அ
குழந்தைக்க நாங்க செல்வின்னு பேர் வெ
வளர்த்தோம். நல்ல லட்சணம். இத்தனை வரு
கழிச்சாவது உங்கப் பொண்ணைக் கூட்டிட்டு
நீங்க வந்தது குறித்து ரொம்ப சந்தோஷம்."
ராமமூர்த்தி பரபரத்தார்.
"எங்கே... என் பொண்ணு... கூப்பிடுங்க..."
"கூப்பிடறேன்... ரூம்லதான் இருக்கா... செ
வந்ததும் எடுத்த எடுப்பிலேயே நான்தான்
னோட அப்பான்னு சொல்லிடாதீங்க...
மிரண்டு போயிடுவா... செல்வி வந்ததும் ஏத
பேசி அப்புறமா விஷத்தைச் சொல்லுங்க."
ராமமூர்த்தி தலையாட்ட ஜானகி மேஜை
இருந்த மணியை அடித்தாள். ஆயா பெண் ஒ
எட்டிப் பார்த்தாள்.
"அம்மா..."
"போய் செல்வியைக் கூட்டிட்டு வா..."
"சரிங்கம்மா..."
அடுத்த ஐந்தாவது நிமிடம் செல்வி உ
வந்தாள். சிவப்பு - உயரம். லேசாய் சுருட்டை



ராமமூர்த்தி செல்வியைப் பார்த்து விட்டு
ஜானகியின் பக்கம் திரும்பினார். மெல்லிய குரலில்
அவருக்கு மட்டும் கேட்கும்படியாய் சொன்னார்.
"இந்தப் பொண்ணு என்னோட மக இல்லை..."
"உ... உங்களுக்கு எ... எப்படி தெரியும்...?"
"தெரியும்... அது மட்டுமில்லை... இங்கே இருக்கிற
ன் பொண்ணையும் நான் கண்டு பிடிச்சுட்டேன்..."
"கண்டுபிடிச்சுட்டீங்களா...? யாரு...?"
"செல்வியைக் கூட்டிட்டு வர்றதுக்காக ஒரு ஆயா
பொண்ணு போனாளே... அவதான் என்னோட
ள்..."
"ஜானகியும் வாசனும் அதிர்ந்தார்கள்.
"எ... எப்படி... சொல்றீங்க...?""
"அந்தப் பெண்ணைக் கூப்பிடுங்க..."
ஜானகி மணியடிக்க - ஆயா பெண் எட்டிப்
பார்த்தாள்.
"உள்ளே வாம்மா"
வந்தாள்.
அட்டைக் கறுப்பு. முகத்துக்கு பொருத்தமில்லா
கு சற்றே மேடிட்ட நெற்றி.
ஜானகி கேட்டாள்.
"இவளா உங்க பொண்ணு...?"
"ஆமா.."
எப்படி அவ்வளவு கரெக்டா சொல்றீங்க?"
இந்தப் பொண்ணுக்கு இப்போ என்ன வயசு...?"
இருபது..."
ராமமூர்த்தி தன் ஜிப்பா பைக்குள் கையை
து ஒரு பர்ஸை எடுத்து - பிரித்து பழுப்பேறிய
டோ ஒன்றை எடுத்தார்.
இது என் மனைவியோட போட்டோ... அவளோட
தாவது வயசுல எடுத்த போட்டோ...
டோவைக் கொஞ்சம் பாருங்க....
ங்கிப் பார்த்தார்கள்.
யா பெண்ணை ஜெராக்ஸ் எடுத்த மாதிரி
த்தியின் மனைவி அதே லட்சணங்களோடு
டோவில் சிரித்தாள்.

# 17

மறுநாள் காலை பதினொரு மணி.

பயோ டெக்னாலஜி கேந்தராவின்
பிரம்மாண்டமான க்ளாஸ் ஹவுஸுக்கு
அப்பால் அட்மினிஷ்ட்ரேஷன் கட்டிட
தெரிய அதன் ஒரு சதுர அறைக்கு
மௌலீஸ்வர் உட்கார்ந்திருக்க அவர்க்கு
முன்பாய் கமிஷனர் தனஞ்செயனும் பக்க
திலேயே நித்யாந்தமும் தெரிந்தார்கள்.

கூரியர் தபால் சரியாய் பதினொன்றன
மணிக்கு வந்தது.

மௌலீஸ்வர் பிரித்தார்.

உள்ளே ஒரு கம்ப்யூட்டர் ஃப்ளாப்பி
மட்டும் பாலிதீன் தாளில் கவனம
சுற்றப்பட்டுத் தெரிய அதைப் பிரித்த
மௌலீஸ்வர்.

"லெட்டர் ஏதாவது இருக்கா பாருங்
கமிஷனர் கேட்க தலையாட்டினார் மௌ
லீஸ்வர்.

"இல்லை ஃப்ளாப்பி மட்டும்தான்
சொன்னவர் மேஜையின் மேல் இருந்
கம்ப்யூட்டரை உயிர்ப்புக்கு கொண்டு வந்
ஃப்ளாப்பியை அதன் வாய்க்குக் கொடு
தார் கம்ப்யூட்டரின் கீ போர்டில் விரல்கள்
இயக்க மானிட்டரில் ஃப்ளாப்பியில் கர்ப்
தாங்கியிருந்த விஷயங்கள் வாக்கி



களாய் மாறி வரிவரியாய் தெரிந்தது.

இயற்கையைக் காப்போம் இயக்கத்தின்
கசப்பான வணக்கங்கள்.

எங்கள் இயக்கத்தின் அதிரடி நட
வடிக்கைகள் உங்களுக்கு அதிர்ச்சியாக
இருக்கலாம். சில நோய்களுக்கு அறுவை
கிச்சை தேவை என்பது போல் சில
ரச்னைகளுக்கு அதிரடி நடவடிக்கைகளும்
தேவையாகிவிடுகிறது. பூமியில் உள்ள
ளங்களையோ உபயோகப்படுத்த நேரம்
இல்லாத மனிதனுக்கு எதற்காக செவ்வாய்
ரகப் பயணம்? செவ்வாயில் தண்ணீர்
இருக்கிறதா என்று பார்க்க லட்சக்கணக்
ன - கோடிக்கணக்காக டாலர் பணத்தை
சலவழிப்பது எந்த வகையில் நியாயம்
ன்று எங்களுக்குத் தெரியவில்லை.
ந்தப் பணத்தை வைத்து பூமியில்
ள்ளவர்களுக்கு குடி தண்ணீர் போன்ற
டிப்படை வசதிகளைசெய்து தரலாமே.
பட்டினியால் வாடும் சில ஆப்பிரிக்க
டுகளுக்கு உதவி செய்யலாமே.
ஞ்ஞானத்தின் பெயரால் செய்யப்படும்
ந்த வீண் செலவுகள் தேவைதானா...?
ற்கையை மெல்ல மெல்ல அரித்து வந்த
ஞ்ஞானம் இப்போது மனிதனின் உடம்
டும் உயிரோடும் விளையாட ஆரம்
துவிட்டது. அந்த விபரீத விளை
டுக்கு பெயர் ஜீன் தெரபி. ஜீன் தெரபி
டமுறைக்கு வந்தால் மனித சமு

தாயமும் அதற்கென்று உள்ள கோட்பாடு
களும் கேலிக்குரிய விஷயங்களாக மாறி
விடும். இந்த விபரீத விளையாட்டை
தடுத்து நிறுத்தத்தான் இந்த புனிதப் போர்.

இன்றைக்கு இந்த உலகத்தில் உள்ள
தலைசிறந்த பயோ டெக்னாலிஜிஸ்ட்களில்
நெம்பர் ஒன் என்ற இடத்தைப் பிடித்தி
இருப்பவர் வாசு தேவ் அவர்கள். மனித
சமுதாயத்துக்கு கேடு விளைவிக்கும் இந்த
ஜீன் ஆராய்ச்சியை அவர் கைவிட வேண்
டும். இதுவரைக்கும் அவர் கண்டுபிடித்த
எல்லா ஜீன் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட
ரிக்கார்ட்ஸும் எங்கள் கைக்கு வ
வேண்டும் முக்கியமாக Human Genom
Mapping வரைபடமும் DNA.வில் உள்
நைட்ரோஜினஸ் மூலக்கூறுகளை வரிசை
படுத்தும் Sequencing சம்பந்தப்பட்
ரிக்கார்ட்ஸும் எல்லாவற்றுக்கும் மேலா
Human Genome Project என்று சொல்
படுகிற அதி முக்கியமான ஃபார்முலா
உள்ளடக்கிய ஃப்ளாப்பியும் எங்கள் கைக்
வரவேண்டும் உங்களுக்கு ஒரு வார க
அவகாசம். இந்த ஒரு வார காலத்துக்கு
நாங்கள் கேட்ட அனைத்தும் எங்கள் கைக்
வர வேண்டும். இல்லாவிட்டால் ஸ்வே
வுக்கு மாப்பிள்ளையாக வேண்டிய அழகா
அந்த அற்புதமான இளைஞன் ச
மண்ணுக்குள் போய்விடுவான். சரத்தை
காப்பாற்றிக் கொள்ள நீங்கள் விரும்பினா



ன் தெரபி சம்பந்தப்பட்ட எல்லா ரிக்கார்ட்
ஸும் எங்கள் கைக்கு வர வேண்டும்.

கொண்டு வந்து கொடுக்க வேண்டிய
நிமுறைகளும் விதிமுறைகளும்.

1. இந்த ஏழு நாள் அவகாசத்தில் எந்த
நாளிலும் இரவு பத்து மணியிலிருந்து
னொரு மணிக்குள் ரெட் ஹில்ஸ் ஏரியா
ண்டி உள்ள பொட்டல் வெளிக்கு வர
ண்டும்.

2. பகல் நேரம் சென்று பார்த்தால்
ட்டல் வெளியின் மையப்பகுதியில் ஒரு
ப்புக் கொடி பறந்து கொண்டிருக்கும்
த இடத்துக்குத்தான் வரவேண்டும்
லீஸ் கண்காணிக்கக்கூடாது.

3. ஜீன் தெரபி சம்பந்தப்பட்ட
ார்ட்ஸ்களைக் கொண்டு வரும் நபர்
தேவாக இருக்க வேண்டும். நீங்கள்
ண்மையாக நடந்து கொண்டால் நாங்கள்
ரை ஒன்றும் செய்யமாட்டோம். நாங்கள்
களைக் காத்துக் கொள்வதற்காக வாசு
வை ஒரு மணி நேரத்துக்கு பிணையக்
தியாகப் பிடித்து வைத்துக் கொண்டு
பத்திரமாக அவரை திருப்பி அனுப்பி
வோம்... போலீஸ் மூக்கை நுழைக்கக்
து.

4. இந்த டீல் முடிந்ததும் நம் இரண்டு
ரையும் குட்பை சொல்லிக் கொண்டு
து விடலாம்.

5. சரத் உயிரோடு இருப்பதும் இல்லா மல் போவதும் இனி உங்கள் கைகளில் யோசியுங்கள். யோசித்து ஒரு புத்திசாலித்தனமான முடிவை எடுங்கள். காத்திருக்கிறோம்.

ஃப்ளாப்பியில் பதிவாகியிருந்த விஷ யங்களை கம்ப்யூட்டர் சொல்லி முடித் திருக்க ஏ.ஸி. குளிரையும் மீறிக் கொண்டு மௌலீஸ்வர்முகத்தில் வியர்வை.

"இதுக்கு நாம் ஒப்புக் கொள்ள முடியாதே...? ஜீன் தெரபி ரிக்கார்ட்ஸ் அத்தனையும் பொக்கிஷம். இருபது வருஷ உழைப்பு. பயோடெக்னாலஜிஸ்ட் வாசு தேவ் இந்த ஜீன் ஆராய்ச்சிக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் இப்படி ஒரு கோழைத்தனமான செயலுக்கு அவர் ஒத்துக் கொள்ளவே மாட்டார்."

"வாசுதேவிடம் இதைப் பற்றி பேசி பார்ப்போம்... வாருங்கள்..."

## 18

வெலிங்டன் ஹாஸ்பிட்டல்.

கமிஷனர் தனஞ்செயன், அஸிஸ் டண்ட் கமிஷனர் நித்யானந்தம், பயோ டெக்னாலஜி கேந்த்ரா டைரக்டர் மௌ லீஸ்வர் மூன்று பேரும் வாசுதேவி அறைக்குள் நுழைந்த போது ரூபலாவு



அபராஜிதாவும் வாசுதேவோடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

வாசுதேவ் மௌலீஸ்வரைப் பார்த்ததும் கவலையோடு புன்னகைத்தார். இடது கையை நீட்டி கை குலுக்கினார்.

"சரத் பத்தி ஏதாவது தகவல் கிடைத் ததா?"

மூன்று பேரும் நாற்காலிகளில் சாய்ந் தார்கள் மௌலுஸ்வர் சொன்னார்.

"தகவல் கிடைத்தது..."

"சரத் இப்போது எங்கே...?"

கூரியர் தபாலில் வந்த ஃப்ளாப்பியைப் பற்றியும் ஃபிளாப்பிடியில் தெரிவிக்கப் பட்டிருந்த கோரிக்கைகள் பற்றியும் மௌலீஸ்வர் சொல்ல வாசுதேவின் முகம் கோபத்தில் சிவந்து காரட் நிறத்துக்கு போயிற்று.

"என்னது... பயோடெக்னாலஜி சம் பந்தப்பட்ட எல்லா ரிக்கார்டுகளையும் அந்த இயற்கையைக் காப்போம் இயக்கத்துக்கு தாரை வார்த்து கொடுப்பதா? நெவர்..."

"சரத்தோட உயிர் இப்போது அவர்கள் கையில் அதை நாம் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும் மிஸ்டர் வாசுதேவ்... அவர் உங்கள் மகள் ஸ்வேதாவை திரு மணம் செய்து கொள்ளப் போகிற மாப்பிள்ளை..."

"என் மகளையே அவர்கள் கடத்திக் கொண்டு போயிருந்தாலும் கவலைப்பட மாட்டேன். பயோடெக்னாலஜி சம்பந்தப் பட்ட எல்லா விஷயங்களுமே ஒரு வைரச் சுரங்கத்துக்கு சமம். அதை அந்த கோமாளிகளிடம் கொடுப்பது பூமாலையை ஒரு குரங்கு கையில் கொடுப்பதும் சமம்."

கமிஷனர் தனஞ்செயன் குறுக்கிட்டார்.

"அவர்களுடைய கோரிக்கைகளை நாம் நிறைவேற்றாவிட்டால் சரத்தை இழந்துவிட வேண்டியதுதான். அவர்கள் எதையும் செய்யக் கூடியவர்கள்"

வாசுதேவ் கோபமாய் தனஞ்செயனை ஏறிட்டார். "மிஸ்டர் கமிஷனர்...! சரத்தைக் காப்பாற்றுவது போலீஸாகிய உங்கள் கடமை, பயோ டெக்னாலஜி ரகசியங்களை தாரை வார்த்து சரத்தை மீட்டுவிட முடியுமானால் அதற்குப் பிறகு போலீஸ் டிபார்ட்மெண்ட் எதற்கு...?"

"மிஸ்டர் வாசுதேவ்...! நாங்கள் என்ன சொல்லப் போகிறோம் என்பதைக் கேட்டுவிட்டு அதற்குப் பிறகு எங்கள் மீது நீங்கள் கோபப்படுங்கள்..."

"என்ன சொல்லப் போகிறீர்கள்...?"

"அவர்களுடைய கோரிக்கைகளுக்கு இணங்குவது போல நடிக்கப் போகிறோம். உண்மையான பயோடெக்னாலஜி ஆதாரங் களை நீங்கள் கொண்டு போகப் போவது



இல்லை. போகஸ் ஆதாரங்களைக் கொண்டு போகப் போகிறீர்கள். அவர்கள் யார், எப்பேர்ப்பட்டவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள நமக்குக் கிடைத்திருக்கிற ஒரு வாய்ப்பு இது..."

"நான் கொண்டு போகும் ரிக்கார்ட்ஸ் போலியானது என்று அவர்கள் கண்டு பிடித்துவிட்டால்...?"

"அது போலி என்று கண்டுபிடிக்க முடியாத வகையில் பயோடெக்னாலஜி ரிக்கார்டுகள் தயாரிக்கப்பட வேண்டியது அவசியம். அந்த தயாரிப்பு பணியையும் நீங்கள்தான் செய்ய வேண்டும்."

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் இருந்த ரூபலா குறுக்கிட்டாள்.

"ஸார்...! இது கொஞ்சம் ரிஸ்க்கான விஷயம். வாசுதேவை அவர்களிடம் அனுப்புவது, சரியென்று எனக்கு தோன்ற வில்லை...!"

"அவர்கள் அவரைத்தானே அனுப்ப வேண்டும் என்று சொல்லியுள்ளார்கள்."

வாசுதேவ் சொன்னார். "என்னுடைய உயிரைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் அவர்கள் நம்மை ஏமாற்றி விடக்கூடாது என்பதுதான் என் கவலை...! சரத்தை உயிரோடு ஒப்படைக்காவிட்டால் நம்மால் என்ன செய்ய முடியும்?"

"மிஸ்டர் வாசுதேவ்...! போலீஸ் அந்த

இயக்க ஆட்களைப் பிடிக்க இப்பவும் மும்முரமாய் இயங்கிக் கொண்டிருக்கிறது. போலீஸ் துறையின் ஷேடோஸ்க்வாட் பிரிவு பல திசைகளிலும் பிரிந்து போய் விசாரணை செய்து கொண்டிருக்கிறது. ஒரு சின்ன தடயம் கிடைத்தாலும் போதும் எதிரிகள் மாட்டிக் கொள்வார்கள். அவர்கள் ஒரு வாரம் அவகாசம் கொடுத்து இருக்கிறார்கள். நீங்கள் அவரை பார்க்கப் போவதைக் கடைசி பட்சமாக வைத்துக் கொள்ளலாம்."

கமிஷனர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அறை வாசலருகே நிழல் தெரிந்து பூட்ஸ் சத்தம் கேட்டது.

எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

கோகுல்நாத்...!

சல்யூட் பதித்துவிட்டு கோகுல்நாத் மெல்லிய குரலில் சொன்னார். "ஸார்... அந்த ராபர்ட்ன்னு சொல்லப்பட்ட ஆசாமி யார்ன்னு தெரிஞ்சிருக்கு..."

"யாரு...?"

"அவன் பேர் காயாம்பூ. மொதல்ல பிக்பாக்கெட் பேர் வழியா தொழில் பண்ணிட்டிருந்தவன் சமீப காலமா செயின் ஸ்நேட்சர். பணக்காரப் பெண்கள் காரில் ஏறும் போதோ இறங்கும் போதோ பைக்கில் மின்னல் வேகத்தில் வந்து கழுத்தில் இருக்கிற செயின்களை பறிச்சுட்டு போறது அந்த காயாம்பூ வோட தொழில்."



அபராஜிதா குறுக்கிட்டாள்.

"அப்படீன்னா நேத்திக்கு எங்களை காயாம்பூ ஃபாலோ பண்ணினது எங்க நகைகளைப் பறிக்கிற நோக்கத்துல தான்...?"

"ஆமா..."

""ஒரு செயின் ஸ்நேட்சரான காயாம்பூவை ராபர்ட்டா மாற்றி இயற்கையைக் காப்போம் இயக்கத்தின் நபர்ன்னு ஏன் சொல்லணும்...?

"அவங்க நம் கைக்கு மாட்டும் வரைக்கும் எந்தக் கேள்விக்கும் விடை கிடைக்காது..."

கோகுல்நாத் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வாசுதேவ் இடது கையால் நெஞ்சைப் பிடித்தபடி ஒரு பக்கமாய் சாய்ந்தார். முகத்தில் வெள்ளமாய் வியர்வை.

மௌலீஸ்வர் பதட்டப்பட்டார்.

"வாசுதேவ்...! உங்களுக்கு என்ன பண்ணுது...?"

"லேசா நெஞ்சுவலி..."

இண்டர்காமில் செய்தி பறக்க டாக்டர் ஓடி வந்தார். மயக்கத்துக்குப் போய்க் கொண்டிருந்த வாசுதேவை அவசர அவசரமாய் பரிசோதித்த டாக்டர் எல்லோரையும் ஏறிட்டபடி சொன்னார்.

"ஸீம்ஸ் டு பி ஹார்ட் அட்டாக்.... உடனே ஐ.ஸி.யூனிட்டுக்கு கொண்டு போகணும்..."

## 19

நான்காவது நாள் இரவு.

மும்பையில் இருக்கும் விவேக் கோடு டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தாள் ரூபலா.

"அப்புறம் ரூபி...?"

"அப்புறம் என்ன... வாசுதேவுக்கு சிவியர் ஹார்ட் அட்டாக். ஐ.ஸி. யூனிட்டிலிருந்த இன்னும் பத்து நாளைக்கு அவர் வெளியே வரமுடியாது..."

"இயற்கையைக் காப்போம் இயக்கம் மறுபடியும் போலீஸை காண்ட்டாக்ட் பண்ணலையா?"

"பண்ணலை... அவங்களும் மௌனமா இருக்காங்க. இப்போசரத்தை எப்படி காப்பாத்தறதுன்னு தெரியலை... ஸ்வேதா ஒரே அழுகை. இந்த நாலு நாள்ல பாதியாயிட்டா...."

"பாவம்..."

"என்னங்க... நீங்க மும்பையிலிருந்து உடனே மெட்ராஸ் புறப்பட்டு வந்து இந்த கேஸை டீல் பண்ணக் கூடாதா...? என்



னோட தோழி அபராஜிதா உங்களுக்கே போன் பண்ணி பேசறேன்னு சொன்னா..."

"ஸ்பெஷல் ட்ரெய்னிங் போய்கிட்டிருக்கு. இன்னும் ஒன்பதுநாள் மும்பையில் இருந்தேயாகணும்.."

"கமிஷனர், டெப்டி கமிஷனர், அஸிஸ்டண்ட் கமிஷனர் மூணுபேரும் விழி பிதுங்கிட்டிருக்காங்க... என்ன ஒரு ஸ்டெப் எடுத்து எப்படி மூவ் பண்றதுன்னு தெரியலை."

"மூணு பேருமே டேலன்ட்டட் பர்ஸன்ஸ். நிறைய கேஸை பிரிச்சு மேய்ஞ்சிருக்காங்க..." விவேக் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இன்னொரு டெலிபோன் குரல் கொடுத்தது.

"என்னங்க அடுத்த போன்ல யாரோ கூப்பிடறாங்க..."

"நாம நாளைக்கு பேசிக்கலாம். நீ போய் அட்டெண்ட் பண்ணு..."

ரூபலா ரிஸீவரை வைத்துவிட்டு வரவேற்பறையில் இருந்த டெலிபோனை நோக்கிப் போய் ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

"ரூபலா மேடமா...?" மறுமுனையில் ஒரு குரல் சிரித்துக் கொண்டே கேட்டது.

"ஆமா... நீங்க யாரு...?"

"இ.கா..."

"புரியலையே...?"

"இயற்கையயைக் காப்போம்."

ரூபலா உஷாரானாள். மறுமுனையில் குரல் கசிந்தது. தெரிஞ்சோ தெரியாமலோ இந்த கேஸ்ல நீங்களும் இன்வால்வ் ஆயிட்டீங்க. அதனாலயே உங்க மூலமா போலீஸுக்கு ஒரு கோரிக்கை.

"எ... என்ன கோரிக்கை...?"

"பயோடெக்னாலஜி மற்றும் ஜீன் தெரபி சம்பந்தப்பட்ட ரிக்கார்ட்ஸை ரெட்ஹில்ஸுக்குப் பக்கத்தில் இருக்கிற பொட்டல் வெளிக்கு வாசுதேவ் மூலமா கொண்டுட்டு வரச் சொல்லியிருந்தோம். இப்போ அவர் ஒருஹார்ட் பேஷண்ட்ாஐ. ஸி. யூனிட்ல இருக்கார். ஸோ அவர் பண்ண வேண்டிய வேலையை வேற யாராவது ஒருத்தர் பண்ணியாகணும். அதுக்காக ஒருத்தரை செலக்ட் பண்ணிட்டோம்."

"யா... யாரு...?"

"அபராஜிதா... இல்லேன்னா... ஸ்வேதா..."

"நோ..."

"ஏன்... நோ...?"

"பெண்களை இதுல இன்வால்வ் பண்ண வேண்டாம்"

"நாங்க முடிவு பண்ணிட்டோம். இன்னும் உங்களுக்கு மூணுநாள் டயம்



இருக்கு... அதுக்குள்ளே அபராஜிதா ஸ்வேதா இந்த ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தரை ஜீன் தெரபி ரிக்கார்ட்ஸோடு அனுப்பி வைக்கணும். இல்லேன்னா சரத் தோட உயிரில்லாத உடம்பு உங்களுக்கு கிடைக்கும்."

ரிஸீவர் வைக்கப்பட்டு விட ரூபலா கையில் ரிஸிவரைப் பிடித்தபடி உறைந்து போய்நின்றாள்.

## 20

கமிஷனர்தனஞ்செயனும் ரூபலாவும் அபராஜி தாவை தனியே சந்தித்து விஷயத்தை சொன்னபோது அவள் கண்களில் பயமும் வியப்பும் பார்ட்னர்ஷிப் போட்டுக் கொண்டன.

"ஸ... ஸார்... எனக்கு பயம்மாயிருக்கு..."

"ஸ்வேதா... சின்னப் பொண்ணு. அவளை அனுப்ப முடியாது. ஒரு வேளை அவகிட்ட விஷயத்தைச் சொன்னா நான் போறேன்னு துணிஞ்சு கிளம்பிப் போனாலும் போயிருவா... ஹார்ட் பேஷண்டான உங்கப்பாவுக்கும் சரி உங்கம்மாவுக்கும் சரி இந்த விஷயம் தெரியக்கூடாது. காதும் காதும் வெச்ச மாதிரி ரிக்காட்ஸைக் கொண்டு போய்க் கொடுத்துட்டு வந்துடு. மத்த வேலைகளை போலீஸ்டிபார்ட்மெண்ட்

பார்த்துக்கும்."

"அவங்க போலி ரிகார்ட்ஸ்ன்னு கண்டுபிடிச்சுட்டா..."

"கண்டுபிடிக்க முடியாத படி ரிகார்ட்ஸை ப்ரிப்பேர் பண்ணித்தரப் போறதா மௌலீஸ்வர் சொல்லியிருக்கார். மேலோட்டமாய் பார்த்தா உண்மையான ரிக்கார்ட்ஸ் மாதிரி தெரியும். ஆனா உள்ளுக்குள்ளே கொடுக்கப்பட்டிருக்கிற அத்தனை தகவல்களும் பொய். அது பொய்யான ரிக்கார்ட்ஸ்ன்னு கண்டு பிடிக்கவே பல நாளாகும்."

"சரத்தை அவங்க ரிலீஸ் பண்ணிடு வாங்களா?"

ரூபலா அவளை ஏறிட்டாள். "இதோ பார் அபராஜிதா...! நீ இந்தப் பிரச்னையை தைரியமா ஃபேஸ் பண்ணனும். சரத்தை விடுதலை பண்ணும்படியா கேட்டுக்கணும். கொஞ்சம் புத்திசாலித்தனமா செயல்பட்டா அவங்களை நாம ஜெயிச்சுடலாம். நீ போகும் போது இதையும் கட்டிகிட்டுபோ..."

சொன்ன ரூபலா தான் கையோடு கொண்டு போயிருந்த சிறிய வெல்வெட் பெட்டி ஒன்றை எடுத்தாள். பிரித்தாள்.

உள்ளே ஒரு லேடீஸ் வாட்ச்.

ரூபலா தொடர்ந்தாள்.

"இது பார்க்கிறதுக்கு லேடீஸ் வாட்ச் மாதிரி தெரிந்தாலும் இது உண்மையில்



வாட்ச் கிடையாது. ஒரு மைக்ரோ டேப் ரிக்கார்டர். இதோ இந்த சைடு பட்டனைத் தட்டிவிட்டா போதும் பேசற பேச்சு பதிவாயிடும். பட்டனை ஞாபகமா தட்ட வேண்டியது முக்கியம். இல்லேன்னா உபயோகமில்லை. அவங்க பேசற பேச்சை பதிவு பண்ணிக் கொண்டு வந்துட்டா வாய்ஸை போட்டு போட்டு கேட்டு பழைய குற்றவாளிகள் யாராவது இருந்தா போலீஸில் இருக்கிற இன்வெஸ்டிகேஷன் பீரோ கண்டுபிடிச்சுடவாங்க. வாட்ச் பத்திரம். இது ன் கணவரோடது..."

ரூபலா வாட்சைக் கட்டிவிட்டாள்.

அபராஜிதாவின் பெரிய விழிகளில் கலவரம் பரவியிருக்க கேட்டாள்... கமிஷனரிடம்.

"நான் எப்போ அவங்களைப் பார்க்கப் போகணும்?"

"நாளைக்கு ராத்திரி... பத்து மணி யிலிருந்து பதினோடு மணிக்குள்..."

## 21

மறுநாள் இரவு பத்தரை மணி.

ரெட்ஹில்ஸ் ஏரியாவுக்குள் காரை நுழைத்து பொட்டல் வெளியருகே பிரேக் கிட்டு நிறுத்தினாள். அபராஜிதா. காரின்

முகப்பு விளக்குகளை அணைக்க சுற்றிலும் இருட்டு பரவிக் கொண்டது.

கையில் ஃபைல் இருந்த சூட்கேஸோடு இறங்கினாள் அபராஜிதா. பகல் வேளையில் வந்து பார்த்துக் கொண்ட போன இட மாதலால் நட்சத்திர வெளிச்சத்தில் தெரிந்த ஒற்றையடிப் பாதையில் மெல்ல நடை போட்டாள். ஒரு பெரிய மைதானம் போன்ற அந்தப் பொட்டல் வெளியில் சில இடங்களில் மட்டும் குற்றுச் செடிகள் முளைத்து மழையில்லாததால் கருகிப் போயிருந்தன.

அபராஜிதா அந்த பங்கலான இருட்டில் ஐந்து நிமிஷ நேரம் நடந்து சிவப்புக் கொடி பறந்து கொண்டிருக்கும் பொட்டல் வெளியின்மையத்துக்க வந்தாள்.

அபராஜிதா ஒரு பத்து நிமிஷம் கரைத்திருந்தபோது வானத்தின் கீழ்த் திசையிலிருந்து ஒரு வெளிச்சப் புள்ளி சத்தம் இல்லாமல் பறந்து வந்தது. பொட்டல் வெளிக்கு மேல் தாழப்பறந்து பக்கத்தில் வந்த போது அது ஒரு ஹெலிகாப்டர் என்று புரிந்தது.

துளி சத்தம் இல்லை.

அபராஜிதா பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த குட்டி ஹெலிகாப்டர் உயரம் இழந்து பக்கத்தில் வந்து நின்றது. ப்ராப்ல்லர் சுழல்வது நின்றதும் இரண்டு பேர் ஹெலி



காப்டரில் இருந்து துப்பாக்கிகளோடு ஓடிவந்து அபராஜிதாவை சூழ்ந்து கொண்டார்கள்.

அபராஜிதா அவர்களைப் பார்த்து புன்னகைத்தாள். "எப்படியிருக்கீங்க ஸாம் அண்ட் ஜேம்ஸ்?"

அவர்களும் இருட்டில் வெள்ளையாய் சிரித்தார்கள். ஃபைன்... வெரி ஃபைன்... ரூபலா கட்டிவிட்ட வாட்ச் இதுதானா...?

அபராஜிதா சிரித்தாள். "இதேதான்...! பட்டனைத் தட்டிவிட்டாத்தான் இதுக்கு உயிர்வரும். அதுக்கு முன்னாடி நாம பேச வேண்டியதை பேசிகுவோம்...! நம்ம மிரட்டல்களுக்கெல்லாம் போலீஸ் பயப்படற மாதிரி தெரியலை. இப்போ என் கையில் இருக்கிறது கூட பயோடெக்னாலஜி சம்பந்தப்பட்ட போலி ரிக்கார்ட்ஸ்தான்..."

"இயற்கையைக் காப்போம் இயக்கம் தான் இதுக்கெல்லாம் காரணம்ன்னு அவங்க நம்பிட்டாங்களா?"

"அது ஒண்ணுதான் நமக்கு ப்ளஸ் பாயிண்ட். என்னிக்கோ இருந்து அழிஞ்சு போன அந்த இயக்கத்து ஆட்களைத் தேடி போலீஸ் அலைஞ்சுட்டிருக்காங்க. சரத் எப்படியிருக்கான்...?"

"மயக்கத்திலேயே வெச்சிருக்கோம். ஒரு நாளைக்கு நாலு பாட்டில் க்ளுகோஸ் தந்துகிட்டு இருக்கோம்."

"என்னோட கணவர் ப்ரேம்கிட்டயிருந்து ஏதாவது தகவல் வந்ததா...? டேஞ்சர் 10 ஐப்பத்தி ஏதாவது சொன்னாரா?"

"ஜீன் தெரபி ரிக்கார்ட்ஸ் நல்ல விலைக்கு பேசி முடிவு பண்ணியிருக்கிறதாகச் சொன்னார். டேஞ்சர் 10 பத்தி ஏதும் சொல்லலை..."

அபராஜிதா பெருமூச்சு விட்டாள். "இது போலி ரிக்கார்ட்ஸ். என்ன பண்ணலாம்?"

"போலீஸுக்கும் பயோடெக்னாலஜி பீப்பிளுக்கும் நாம யார்ங்கிறதைக் காட்ட வேண்டியதுதான்...." ஜேம்ஸ் சொல்ல ஸாம் கோபமாய் குறுக்கிட்டான்.

"சரத்தோட கதையை மடிச்சுடலாமா?"

அபராஜிதா பதட்டமானாள்.

"வேண்டாம்...! என்னோட சிஸ்டர் ஸ்வேதா சரத்தை உயிர்க்குயிரா காதலிக்கிறா. அப்பாவும் இப்போ ஹார்ட் பேஷண்ட் ஆயிட்டார். சரத்தோட மரணத்தை ரெண்டு பேரலேயும் தாங்கிக்க முடியாது. யார்க்கும் எந்தப் பிரச்னையும் இல்லாமே நம்ம கைக்கு அந்த ஜீன் தெரபி ரிக்கார்ட்ஸ் வரணும்.."

"சரத்தோட ரத்தத்தை அவங்களுக்கு காட்டாமே உண்மையான ஜீன் தெரபி ரிக்கார்ட்ஸ் நம்ம கைக்கு வராதுன்னு நினைக்கிறேன்."



அபராஜிதா கையமர்த்தினாள். "இந்த் விஷயத்துல நாம நிதானத்தைக் கடைபிடிக்கணும் ஸாம். கொஞ்சம் அவசரப்பட்டாலும் என் மேல மத்தவங்களும் சந்தேமகம் வந்துடும். அந்த செய்ன்ஸ் நேட்ச்சர்காயாம்பூ விஷத்தை அப்படியே விட்டுடலாம்ன்னு சொன்னேன். நீங்க கேட்கலை. அவனை இயற்கையைக் காப்போம் இயக்கத்தோட ஆளா காட்ட நினைச்சு தேவையில்லாமே ஒரு கொலையைப் பண்ணி போலீஸுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தோம். ஆனா அந்த அதிர்ச்சி இப்போ சாயம் போயிடுச்சு. அந்த காயாம்பூ ஒரு பழைய குற்றவாளிங்கிறதை போலீஸ் இப்ப கண்டுபிடிச்சுட்டாங்க. அவனுக்கும் இயற்கையைக் காப்போம் இயக்கத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்ன்னு போலீஸ் யோசனை பண்ண ஆரம்பிச்சுட்டாங்க... அது மாதிரியானதொரு தப்பை இனிமேலும் பண்ணக் கூடாது."

"சரி... இனி நம்ம அடுத்த ஸ்டெப் என்ன?"

"இது போலி ரிக்கார்ட்ஸ் என்கிற விஷயம் உங்களுக்கு தெரிஞ்ச மாதிரி காட்டி போலீஸையும் என்னையும் கடுமையா வார்ன் பண்ணி பேசணும். இப்போ இந்த மைக்ரோ டேப் ரிக்கார்டரை ஆன் பண்றேன்..." சொன்ன அபராஜிதா கையில்

கட்டியிருந்த மைக்ரோ டேப் ரிக்கார்டர் வாட்ச்சைத் தொட்டுது பட்டனை அழுத்தி னாள்.

குரலை மாற்றிக் கொண்டு ஸாம் பேச ஆரம்பித்தான்.

"என்ன ரிக்கார்ட்ஸைக் கொண்டு வந்தியா?"

"ம்..."

"எங்கே கொடு! பார்க்கலாம்..."

சிலவிநாடி மௌனத்துக்குப் பின் ஜேம்ஸும் குரலை மாற்றிக் கொண்டு பேசினான்.

"உனக்கும் போலீஸுக்கும் சரத் உயிரோடு வேணுமா... வேண்டாமா...?"

"வேணும்..."

"அப்படீன்னா உண்மையான ஜீன் தெரபி ரிக்கார்ட்ஸைக் கொண்டு வந்து கொடுத்துட்டு சரத்தை உயிரோடு கூட் டிட்டுபோ..."

"இது உண்மையான ரிக்கார்ட்ஸ்தான்"

"அப்படீன்னு சொல்லி போலீஸும் பயோடெக்னாலஜி மௌலீஸ்வரும் உன்னை ஏமாத்தியிருக்காங்க. ஆனா நாங்க ஏமாறமாட்டோம். இன்னும் ரெண்டு நாள் டயம் இருக்கு. அதுக்குள்ளே உண்மையான ரிக்கார்ட்ஸை நீயே கொண்டு வந்து தாணும். இல்லேன்னா சரத்தும் இல்லை. நீயும்



இல்லை. போ! ஒழுங்கும் மரியாதையா உண்மையான ரிக்கார்ட்ஸை கொண்டு வந்து கொடு..."

மைக்ரோ டேப்ரிக்கார்டர் பட்டனை அழுத்தி அதன் இயக்கத்தை நிறுத்தினாள் அபராஜிதா.

"இது போதும்"

"இதுக்கு பலன் கிடைக்குமா...?"

"சரத்தோட உயிர் நம்ம கையில் இருக் கும் போது பலன் இல்லாமல் இருக்குமா?"

## 22

"ஹெலிகாப்டர்ல வந்தது மொத்தம் எத்தனை பேர்?"

கமிஷனர் தனஞ்செயன் அபராஜிதா வைக் கேள்வி கேட்க அவள் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். பக்கத்தில் ரூபலா. உட்பக்கமாய் சாத்தப்பட்ட அந்த அறைக்குள் வேறு யாரும் இல்லை.

"ரெண்டு பேர்..."

"இளைஞர்களா...?"

"அப்படித்தான் தெரிஞ்சது. இருட்டில் சரியா முகம் தெரியலை..."

"பேர் சொல்லி பேசிகிட்டாங்களா?"

"இல்லை. அவங்க பேச்சை ரிக்கார்ட்

பண்ணியிருக்கேன். போட்டுப் பாருங்க ஸார்."

ரூபலா மைக்ரோ டேப் ரிக்கார்டர் வாட்ச்சை எடுத்து ரீவைண்ட் செய்து இயக்கினாள்.

அபராஜிதாவும் அந்த இளைஞர்களும் பேசிக் கொள்ளும் குரல்கள் கேட்டன.

சில நிமிடங்களுக்குப் பிறகு மைக்ரோ டேப்ரிக்கார்டர் வாட்சில் பேச்சு நின்றது.

கமிஷனர் தனஞ்செயன் அபராஜிதாவிடம் நிமிர்ந்தார்.

"அவங்க பேசினது இவ்வளவுதானா?"

"ஆமா..."

ரூபலா புன்னகைத்தாள். "ஸாரி... அபராஜிதா! நீ பொய் சொல்றே... இன்னும் கூடுதலா அஞ்சு நிமிஷம் அவங்க பேசியிருக்காங்க..."

அபராஜிதாவின் கண்களில் பயம்.

"இல்லையே...! அவங்க பேசினதே இவ்வளவுதான்!"

"மறுபடியும் பொய் சொல்றே...! இந்த வாட்ச்சின் இடது பக்கம் ரிக்கார்டில் இண்டிகேட் ஸ்கொயர் ஒண்ணு தெரியுது பாத்தியா... அதுல ஏழுநிமிஷம் பதினாறு செக்கண்ட்ன்னு குறிப்பிடுகிற 7எம் 16 எஸ் என்கிற எண்கள் தெரியுதா பாரு"

அபராஜிதா பார்த்தாள்.



"ஆமா..."

ரூபலா தொடர்ந்தாள்.

"அபி...! உன்கிட்ட இந்த வாட்ச்சோட ஸ்பெஷாலிடி ஒண்ணைச் சொல்ல மறந்துட்டேன். இந்த வாட்ச்சில் இருக்கிறது ஒன் இயர் ப்ளானிங் கேஸட். இந்த காஸட் கடிகாரம் ஓடற மாதிரி 24 மணி நேரமும் வருஷம் பூராவும் ஓடிகிட்டு இருக்கும். பட்டனைத் தட்டாவிட்டாலும் ஓடும்."

"நீ... நீ... பட்டனைத் தட்டச் சொன்னியே?"

"அது ஒரு பாதுகாப்புக்காகத்தான்...! எப்போதாவது ஒரு சந்தர்ப்பத்தில் சிஸ்டம் லாக்காகிக் கொள்ள வாய்ப்பு இருக்கு அது மாதிரியான சமயங்களில் பட்டனைத் தட்ட் அது சரியாயிடும். எதுக்கும் ஒரு ஸேஃப்டிக்காக உன்னை பட்டன் தட்டச் சொன்னேன். நோப்ராப்ளம்...! நீ அவங்க கிட்ட எத்தனை மணிக்கு பேச அரும்பிச்சியோ... அந்த நேரத்தை ரிவர்ஸ் பண்ணி டயத்தை செட் பண்ணினா போதும் அந்த நேரத்துல யார் எது பேசியிருந்தாலும் அது இதுல பதிவாகியிருக்கும்..."

அபராஜிதாவியர்த்து வழிந்து கொண்டிருக்கும் போதே ரூபலா அந்த நேரத்தை செட் செய்ய-

குரல்கள் ஒலிக்க ஆரம்பித்தன. முத

லில் அபராஜிதாவின் குரல், "எப்படியிருக் கீங்க... ஸாம் அண்ட் ஜேம்ஸ்....?"

தொடர்ந்து ஆண்குரல்கள்

கமிஷனரும் ரூபலாவும் திடுக்கிட்டுப் போய் அபராஜிதாவைப் பார்க்க அவள் உடம்பு ஒடுங்கிக் கொண்டிருந்தது. பேச்சு முழுவதையும் கேட்டு முடித்தபின் ரூபலா அதிர்ச்சியோடு எறிட்டாள்.

"அபி...! நீயும் வெளிநாட்டில் இருக்கிற உன் கணவனுமா இதுக்கெல்லாம் கார ணம்...?"

இறுக்கமான முகத்தோடு தலை குனிந்து உட்கார்ந்திருந்தாள் அபராஜிதா.

கமிஷனர் குரலை உயர்த்தினார். "இதோ பார்! தப்பு செய்தவர்கள் யாரா யிருந்தாலும் தானாய் ஒரு பொறிக்குள் மாட்டிக் கொள்வார்கள் என்பது காலத்தின் கட்டாயம். உனக்குத் தெரியாமலேயே நீ இப்போ மாட்டிகிட்டே. இனிமேல் நீ தப்பிக்க வழியில்லை. இதே ரூம்ல நீ உண்மையைச் சொல்லிடறது உத்தமம். இல்லேன்னா உன்னை லாக்கப்புக்கு கொண்டு போய் உட்கார வேண்டிய இடத்துல உட்கார வெச்சு உண்மையை வாங்க வேண்டிய வழியில் வாங்கிடுவோம்..."

கமிஷனர் சொல்லச் சொல்ல அபரா ஜிதா நிமிர்ந்தாள். கண்களில் நீர்.



"என்னை மன்னிச்சுடுங்க ஸார்..! இந்த ஜீன் தெரபி பயோடெக்னாலஜி ரிக்கார்ட்ஸை அபகரிக்கிற திட்டத்துல எனக்குக் கொஞ்சம் கூட இஷ்டமில்லை. என்னோட கணவர் தான் வற்புறுத்தினார். திட்டத்துக்கு நான் உறதவி பண்ணாத பட்சத்தில் என்னோட குடும்பத்தையே அழிச்சுடுவேன்னு சொன்னார். அதுக்குப் பயந்துட்டு தான்..."

கமிஷனர் கையமர்த்தினார்.

"அதையெல்லாம் அப்புறமா பேசிக்கு வோம். சரத்தை அந்தக்கும்பல் எங்கே மறைச்சு வெச்சிருக்கு...?"

"வியாசர்பாடியில கலிங்கா நகர் எக்ஸ்டன்ஷனில் உள்ள நாய்க்காரை ஸ்மில்லில் அந்த மில் இப்போ ஜேம்ஸ், ஸாம் கண்ட் ரோல்லதான் இருக்கு."

"ஹெலிகாப்டர் வாடகைக்கு எடுத்ததா?"

"ஆமா..."

"அது என்ன டேஞ்சர் 10 இந்த சங்கேத வார்த்தைக்கு என்ன அர்த்தம்...?"

"அது.. வந்து... வந்து..."

"எல்லாத்தையும் சொல்லிட்டே! இந்த கேள்விக்கு மட்டும் ஏன் இழுக்கறே...?"

அபராஜிதா மேலும் சில விநாடிகள் தயங்கிவிட்டு தொடர்ந்தாள்.

"உண்மையான ஜீன் தெரபி பயோ டென்னாலஜி ரிக்கார்ட்ஸ் என் கணவரோட கைக்கு போதுமம் இங்கேயிருக்கிற பயோ டெக்னாலஜி கேந்த்ரா கட்டிடத்தை பத்து விநாடி, நேரத்தில் தரைமட்டமாக்கி சாம் கலாக்கக் கூடிய ஆர்.டி.எக்ஸ். டைனமைட் டேப்ளட் ஒண்ணை வெளிநாட்டு ஏஜெண்ட் ஒருத்தர் மூலமா அனுப்பி வைக்கப் போறதா என் கணவர் சொல்லியிருந்தார். அதுக்குத்தான் டேஞ்சர் - 10ன்னு பேர்..."

ரூபலா அபராஜிதாவின் தோளைத் தொட்டாள்.

"பெண்களைப் பெருமைப்படுத்தறதுக் காகத்தான் இந்த நாட்டை தாய்நாடுன்னு சொல்றாங்க. இந்த நாட்ல ஒரு பொண்ணா பொறந்த நீ அந்த தாய்நாட்டுக்கே துரோகம் செய்யலாமா...?"

அபராஜிதாவின் கண்களில் நீர் பெருகிக் கொண்டிருக்க கமிஷனர் தனஞ்செயன் பக்கத்தில் இருந்த போனைத் தொட்டு ரிஸீவரை எடுத்துக் கொண்டார்.

டயலில் எண்களைத் தட்டி நித் யானந்தத்தைப் பிடித்தார். சரத்தை மீட்க வும், குற்றவாளிகளைக் கைது செய்யவும் மளமளவென்று உத்தரவுகளைப் பிறப்பிக்க ஆரம்பித்தார்.



# 23

மும்பை.

அந்த நள்ளிரவு நேரத்தில் ஹோட்டல் தாஜ் கோரமண்டல் 599 எண் அறையில் டெலிபோன் துடித்தது. போர்வைக்குள் இருந்த விவேக் கையை மட்டும் வெளியே நீட்டி ரிஸீவரை எடுத்தான்.

"ஹலோ.."

மறுமுனையில் ரூபலா.

"நான்தாங்க..."

"சொல்லுரூபி..."

"அபராஜிதா மாட்டிகிட்டா. மைக்ரோ டேப் ரிக்கார்டர் வாட்ச் அவளை வசமாக காட்டிக் கொடுத்துடுச்சு."

"பார்த்தியா... அவமேல சந்தேகப் பட்டப்ப அபச்சாரம் அபச்சாரம்ன்னு சொன்னியே..."

"எப்படிங்க... மும்பையில் இருந்துகிட்டே அவமேல உங்களுக்கு சந்தேகம் வந்தது...?"

"ஒரு கணக்கு போட்டேன் வெளி நாட்டுக் கணவன், பொக்கேக்குள்ளே இருந்த லெட்டர், சரத் ரொம்பவும் சுலபமா கடத்தப்பட்டது. ஜீன் தெரபி ரிக்கார்ட்ஸைக் கொண்டு வந்து கொடுக்க அபராஜிதாவோ ஸ்வேதாவோ வரணும்ன்னு எதிரிகள் சொன்னது - இந்த கணக்கையெல்லாம் கூட்டிக் கழிச்சு பார்த்த போது அபராஜிதா மேல ஒரு சந்தேகப் புள்ளி வைக்கத்

தோணிச்சு. வெச்சேன். புள்ளி இப்போ ஒரு வலையா மாறி அக்கா அதுக்குள்ளே மாட்டிகிட்டாங்க..."

"எப்படிங்க... உங்களுக்கு மட்டும் இவ்வளவு அறிவு...?"

"சொல்லட்டுமா..?"

"ம்... சொல்லுங்க..."

"கடவுள் ரெண்டு பேர்க்கு வைக்க வேண்டிய மூளையை மறந்து போய் எனக்கு மட்டும் வெச்சுட்டார்."

"அந்த இன்னொருத்தர் யாரு...?"

"நீதான்..."

ரூபலா கோபத்தில் கத்த ஆரம்பிக்க விவேக் காதுகளைப் பொத்திக் கொண்டான்.

- முற்றும் -


திகில் டுடே

மலர்: 2 இதழ் : 5

வெளியிடுபவர், ஆசிரியர்: எம்.எஸ். முருகன்
அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்
56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு. சி.ஐ.டி. நகர், நந்தனம்,
சென்னை - 600 035. போன்: 044-2436 1734



கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.



'Thikil Today' Novel Monthly Owner, Publisher & Editor
**M.S. Murugan**, Published at:
New No. 56/2, Sri Rampet Street,
C.I.T. Nagar, Nandanam, Chennai - 600 035.
Phone : 98405 14529